Vibrer ஆடுதல், வீசுதல். Vicier கெடுத்தல்.
Victimer பலியிடுதல். Vider ஊற்றுதல், தீர்த்தல்.
Vieillir கிழவனாதல், பழசாதல். Vilipender நிந்தித்தல்.
Vinaigrer காடிவார்த்தல். Violenter கட்டாயஞ்செய்தல்.
Violer மீறுதல், கெடுத்தல். Virer திரும்புதல்.

Viser இலக்குபார்த்தல், நாடுதல். Visiter சந்தித்தல்.
Visser மறுசுற்றுபோடுதல். Vitrer கண்ணாடிபோடுதல்.
Vivifier உயிர்தருதல். Vivre பிழைத்தல்.
Vociférer கூவுதல். Voiler மறைத்தல்.
Voir பார்த்தல், விசாரித்தல். Voler பறத்தல், திருடுதல்.
Voltiger அங்கங்கேபறத்தல். Vomir வாந்தித்தல், கக்குதல்.
Voter அநுமதிசொல்லுதல். Vouer நேர்தல்.
Vouloir மனதாயிருத்தல். Voûter வளைத்தல்.
Voyager பயணஞ்செய்தல். Vulgariser வழங்குவித்தல்.

PARAGRAPHE LIX. ௫௰௯-ம். பிரிவு.

Participe பெயரெச்சம்.

Lisant, qui lit வாசிக்கிற. Lu, lue, qui *ou* qu'on a lu வாசித்த.
Qui *ou* qu'on lira வாசிக்கும். Qui est lu வாசிக்கப்படுகிற.
Qui a été lu வாசிக்கப்பட்ட. Qui sera lu வாசிக்கப்படும்.
Qui ne lit pas வாசிக்காத; non lu *ou* qu'on ne lit pas வாசிக்காத, வாசிக்கப்படாத. Disant, qui dit சொல்லுகிற.
Dit, dite, qui ou qu'on a dit சொன்ன.
Qui ou qu'on dira சொல்லும். Qui est dit சொல்லப்படுகிற.
Qui a été dit சொல்லப்பட்ட. Qui sera dit சொல்லப்படும்.
Qui ne dit pas சொல்லாத; non dit ou qu'on ne dit pas சொல்லாத, சொல்லப்படாத.

PARAGRAPHE LX. ௬௰-ம். பிரிவு.

Adverbes வினையுரிச்சொற்கள்.

Locutions adverbiales வினையுரிக்கடுத்த வார்த்தைகள்.
Autrefois, jadis முற்காலத்திலே, பூர்வகாலத்திலே.
Avant-hier முந்தைநாள், முன்றுநாள்.
Avant trois jours மூன்றுநாளைக்குமுன்.
Dans trois jours மூன்றுநாளைக்குள்ளாக.
Hier நேற்று. Aujourd'hui இன்று, இன்றைக்கு.
Dans huit jours எட்டுநாள்பொறுத்து.
Demain நாளைக்கு, நாளையதினம்.
Après-demain நாளையினன்றைக்கு, நாளைநின்று.
La veille முந்தினநாளில். Le lendemain மறுநாள்.
Alors அப்போ, அப்போது. Maintenant இப்போ, இப்போது.

Quand எப்போ, எப்போது. Toujours எப்போதும்.
Pour toujours எப்போதைக்கும். Jamais ஒருக்காலுமில்லை.
Désormais, dorénavant இனி, இனிமேல், இனிமேலைக்கு.
Bientôt கொஞ்சத்துக்குள்ளே. Promptement சீக்கிரமாய்.
Aussitôt, à l'instant உடனே, தக்ஷணமே.
Le matin காலமே. De grand matin அதிகாலமே.
Le soir சாயங்காலத்தில். Soir et matin அந்திசந்தி. [லே.
De jour பகலிலே. De nuit இரவில், இராத்திரியி
Déjà ஏற்கனவே, இப்போதானே.
Souvent அடிக்கடி. Rarement அருமையாய்.
Quelquefois சிலவேளை. Peut-être சிலவிசை, ஆக்கும். [ய்.
Tard தாமதமாய். De bonne heure அதிகாலமே, சீக்கிரமா
Ici இங்கே. Là அங்கே. Où எங்கே?
D'ici இங்கேயிருந்து. De là அங்கேயிருந்து.
D'où எங்கேயிருந்து? Partout எங்கும்.
Dedans உள்ளே. Dehors வெளியே, புறம்பாய்.
En haut மேலே, உயரத்திலே. En bas கீழே.
Loin, au loin தூரமாய். En avant முன்னாக.
En arrière பின்னாக. Pourquoi ஏன், என்னத்துக்கு?
Comment எப்படி, என்னமாய்? Comme எவ்விதமாய்.
Combien de fois எத்தனைவிசை? Dix fois பத்துவிசை.
Certainement நிச்சயமாய். Sans doute சந்தேகமற.
Oui ஆம், ஆமாம். Non இல்லை, அல்ல.
N'est-ce pas இல்லையா, அல்லவா, இல்லையோ, அல்லவோ?
Point du tout, nullement பரிச்சேதமில்லை.
Ainsi இப்படி. Comme cela அப்படி. [யே.
Ensemble ஒருமிக்க. Séparément, à part தனியே, தனித்தனி
Autrement வேறேவிதமாய், இல்லாவிட்டால்.
Voici இதோ. Voilà அதோ. Bien நன்றாய்.
Combien எத்தனை, எவ்வளவு, எம்மாத்திரம்.
Beaucoup மிகவும், மெத்த, மிகுதியாய்.
Peu, un peu கொஞ்சம், கொஞ்சமாய், அற்பமாய்.
Plus அதிகமாய். Plus vite அதிகசீக்கிரமாய். [ம்மாத்திரம்.
Moins குறைவாக. Autant que ceci இவ்வளவு, இத்தனை, இ
Autant que cela அவ்வளவு, அத்தனை, அம்மாத்திரம்.
Assez போதும். Passablement bien ஏறக்குறைய நன்றாய். [ம்
Trop அதிமிச்சமாய், அதிகமாய். Entièrement அற, முழுது
Médiocrement மத்திமமாய், நடுத்தரமாய். [க.
Volontiers, de son plein gré வலிய. Vite கடிய, சுறுக்கு, முடு

N. B. La plupart des adjectifs tamouls deviennent adverbes en changeant leurs terminaisons ஆன ou உள்ள en ஆய். *Ex.* Joyeux சந்தோஷமுள்ள, சந்தோஷமான; joyeusement சந்தோஷமாய்.



PARAGRAPHE LXI. சங்கம். ௬௧

Prépositions முன்னிடைச்சொற்கள்.

A Pondichéry புதுச்சேரியில். A Rome உரோமாபுரியில்.
A cause de vous உம்மைப்பற்றி, உமது நிமித்தமாக.
A côté de la rivière ஆற்றின் பக்கத்திலே, ஆற்றருகில்.
A force de larmes கண்ணீர் மிகுதியால்.
A la place de son frère அவன் சகோதரனுக்குப் பதிலாக ou இடமாக. A ma place எனக்குப்பதிலாய்.
Après cela அதுக்குப்பின் ou பின்பு,— பிறகு, — பிற்பாடு.
A l'égard de cette affaire அந்தக்காரியத்தின்மட்டில்,
A l'insu de sa mère தன் தாயார் அறியாமல்.
Attendu son âge அவன் வயதைப்பற்றி.
A travers les champs வயல்களின் நடுவே.
Au travers des ennemis சத்துருக்கள் நடுவிலே.
Auprès de la ville பட்டணத்துக்குக்கிட்ட.
Au milieu de la rivière ஆற்றின் நடுவில்.
Au-delà de la rivière ஆற்றுக்கு அப்பாலே.
Autour du soleil சூரியன் சுற்றிலும். [யோடு.
Avant cela அதுக்குமுன்னே. Avec la main கையால், கை
Il est chez mon père என் தகப்பன் வீட்டிலிருக்கிறான்.
Contre le prochain புறத்தியானுக்கு விரோதமாய்.
Dans l'Inde இந்துதேசத்தில். Dans la maison வீட்டிலே.
La porte de la maison வீட்டின் கதவு.
De la terre au ciel பூமியினின்று பரலோகம்வரைக்கும்.
Des pieds à la tête பாதாதிகேசம்.
Depuis ce temps-là அந்தக்காலத்துமுதல்.
Derrière la porte கதவுக்குப்பிறகே.
Dès le commencement ஆதிமுதல், ஆதிமுதற்கொண்டு.
Devant l'église கோயிலுக்குமுன்னே, ou—முன்பாக.
Durant la guerre சண்டைக்காலத்திலே.
En ami சிநேகிதனாக. En paix சமாதானமாய்.
En place de ce livre அந்தப்புஸ்தகத்துக்குப்பதிலாக.
En présence de Dieu சர்வேசுரனுடைய சந்நிதியிலே.

[மட்டில்.
En-deça du fleuve நதிக்குஇப்பால்.
Entre eux தங்களுக்குள்ளே. Envers les pauvres தரித்திரர்
Environ huit heures ஏறக்குறைய எட்டுமணி.
Excepté *ou* hormis cela அதுதவிர *ou* ஒழிய,— அல்லாமல்.
Hors de la ville பட்டணத்துக்குவெளியே.
Chasser hors de la caste சாதிக்குப்புறம்பாய்த்தள்ளுதல்.
Jusqu'à la mort மரணம்வரைக்கும், மரணபரியந்தம்.
Très-loin de Pondichéry புதுச்சேரிக்குவெகுதூரமாய் *ou* துலையாய். Le long du rivage கரைநெடுக.
Malgré cela அப்படியிருந்தாலும்.
Malgré moi என்மனமற, என்சம்மதியில்லாமல்.
Moyennant la grâce de Dieu தேவகிருபையின் உதவியைக்கொண்டு, தேவஅனுக்கிரகத்தைக்கொண்டு.
Nonobstant la difficulté வருத்தத்தைச்சட்டைபண்ணாமல்.
Outre cela அதல்லாமல், அதுதவிர, அதொழிய.
Par force கட்டாயத்திலே, பலவந்தமாய். [இல்.
Parmi nous நமக்குள்ளே. Pendant la nuit இராக்காலத்
Pour vous உமக்காக, உம்மைப்பற்றி, நிங்களோவென்று
Près de la mer கடல் அருகில் *ou*— கிட்ட. [ல்.
Quant à moi நானோவென்றால்.
Sans doute சந்தேகமில்லாமல் *ou* இன்றி.
Sauf l'honneur மகிமையொழிய *ou* தவிர.
Selon ses moyens தன் அவகாசத்துக்குத்தக்கபடி.
Selon la loi de Dieu தேவகட்டளையின்படியே.
Sous terre பூமியின்கீழ். [காரமாய்.
Suivant ses désirs தன் ஆசையின்படியே, தன் ஆசைப்பிர
Sur la table மேசையின்மேல்.
Touchant cette affaire இந்தக்காரியத்தைக்குறித்து.
Vers le ciel வானத்தைநோக்கி.
Vis-à-vis de l'église கோவிலுக்குஎதிரே *ou* நேராய்.
Vu cela அதைப்பார்த்து, அதைப்பற்றி.

PARAGRAPHE LXII. ௬௨-ம். பிரிவு.

Conjonctions கூட்டிடைச்சொற்கள்.

Afin de vivre long-temps வெகுநாள்சீவிக்கும்படிக்கு, சீவிக்கும்பொருட்டு, சீவிக்கத்தக்கதாக, சீவிக்கிறதற்கு.
Ainsi que j'ai dit நான்சொன்னதுபோலே.
A l'instant qu'il fut arrivé அவன்வந்தக்ஷணமே.

A moins que vous ne veniez நீங்கள்வந்தாலொழிய, நீர்வ
ராவிட்டால். [பின்பு.
Aprés qu'il fut venu அவன்வந்தபிற்பாடு, வந்ததுக்குப்
Attendu que vous ètes son ami நீரவனுக்குச் சிநேகிதனாயி
ருக்கிறபடியால்.
Au cas que vous veniez நீர்வந்தக்கால், நீர்வருவீரானால்.
Au lieu d'être paresseux sois diligent சோம்பேறியாயி
ராமல் சுறுசுறுப்புள்ளவனாயிரு.
Au lieu que vous ètes paresseux நீங்களோவென்றால் சோ
ம்பேறிகளாயிருக்கிறீர்கள்.
Au moins, du moins ஆகிலும், ஆவது.
Au plus, tout au plus அதிகமானால். [த்திலே.
Aussitôt qu'il fut mort அவன்செத்தவுடனே *ou* மாத்திர
Aussitòt que vous serez mort நீங்கள்மரித்தமாத்திரத்தில்,
ou உடனே. [மட்டும்.
Autant que vous pourrez உங்களாலேகூடின *ou* இயன்ற
Il est arrivé autrement que je ne désira s நான் ஆசித்ததற்
குவித்தியாசமாய்ச் சம்பவித்தது.
Il a dit avant de mourir, *ou* avant qu'il mourut அவன்சா
குமுன்னே *ou* சாகிறதற்குமுன்னே *ou* சாவதற்குமுன்
னேசொன்னான்.
Bien plus மேலும், அல்லாமலும். [இருந்தபோதிலும்.
Bien que vous soyez fort நீர் பலத்தவரா யிருந்தாலும் *ou*
Car அதேனென்றால், அதெப்படியென்றால். [னாலும்.
Cependant இப்படியிருந்தாலும், ஆகிலும், ஆயினும், ஆ
C'est pourquoi ஆகையால், ஆனதைப்பற்றி.
Comme je vous ai ordonné நான்உங்களுக்குக் கற்பித்தது
போலே, கற்பித்ததின்படியே, கற்பித்தபிரகாரமாய்.
D'ailleurs, d'un autre côté மேலும், மற்றப்படி, இதல்லா
மல், வேறேபக்கத்தில்நின்று.
D'autant plus que vous ètes l'aîné நீர்மூத்தவரா யிருக்கிற
படியினாலும், மீளவும் மூத்தவராயிருக்கிறீர். [ரகாரம்.
De même que j'ai fait நான்செய்ததுபோலே *ou* செய்தபி
De peur de tomber விழாதபடிக்கு.
De plus மேலும், அல்லாமலும், மீளவும், இதுவுந்தவிர.
Dés qu'il fut parti அவன் புறப்பட்டவுடனே *ou* மாத்தி
ரத்திலே.
Dés qu'il sera parti, venez வன்புறப்பட்டவுடனேவாரும்.
De sorte qu'il a obtenu un emploi இவ்வகையாய் *ou* ஆ
கையால் உத்தியோகத்தையடைந்தான்.

Donc ஆகையால், ஆதலால். [ளாக.
En attendant que vous reveniez நீர்திரும்பி வருவதற்குள்
En cas que vous ne puissiez pas உம்மாலே கூடாதேபோ
னல்.
Enfin கடைசியில், கடைசியாய்.
Faites en sorte de venir நீர்வரும்படிக்குப் பிரயாசப்படும்.
En tant qu'homme மனுஷன் ஆகியமட்டும்.
En tout cas எப்படியானாலும், என்னமாயிருந்தாலும்
Père et mère பிதாவும் மாதாவும். [ம் ou மட்டுக்கும்.
Jusqu'à ce que je revienne நான்திரும்பிவருகிற வரைக்கு
Lorsque vous lisez, vous lirez நீர்வாசிக்கிற,வாசிக்கும்போ
து ou நேரத்தில்,— சமையத்தில். [பின்பு.
Lorsque vous avez lu நீர்வாசித்தபோது ou நேரத்தில் ou
Néanmoins je ne le ferai pas ஆயினும் நானதைச்செய்ய
மாட்டேன். [வன் அஞ்சுகிறதில்லை.
Il ne craint ni père ni mère தகப்பனுக்குந் தாய்க்கும் அ
Or ஆனால், ஒவென்றால்.
Ou, ou bien ஆவது, அல்லது, ஒன்றில்; ou ceci ou cela இ
தாவது அதாவது, இது அல்லது அது, இது ஆனாலு
ம் அது என்கிலும், ஒன்றில் இது ஒன்றில் அது.
Outre que je ne le connais pas நானவனை அறியாதிருக்கி
றதுந்தவிர. [லாமல்.
Outre que vous êtes riche நீர் ஆஸ்திக்காரனாயிருக்கிறதல்
Parce que vous l'avez dit நீர் இதைச் சொன்னபடியினாலே
ou சொன்னதினாலே.
Parce que vous n'avez pas travaillé நீர்வேலைசெய்யாதிருந்
தபடியினாலே ou செய்யாததினாலே.
Par conséquent ஆகையினாலே, ஆதலால்.
Pourtant ஆகிலும், ஆனாலும்.
Pourvu que vous alliez au ciel நீங்கள்மோட்சத்தையடை
ந்தால், அடைவீர்களேயாகில்.
Puisque vous avez étudié நீங்கள்படித்தபடியினாலே.
Quand viendrez-vous me voir எப்போ என்னைப்பார்க்கவ
ருவீர்கள்? [ரும்போது.
Quand vous viendrez me voir நீங்கள் என்னைப் பார்க்கவ
Quand même vous viendriez நீங்கள் வந்தாலும்.
Je crois que tu es malade வியாதியாயிருக்கிறயென்று நி
னைக்கிறேன். [ந்தேகப்படுகிறேன்.
Je doute que tu sois gueri நீ குணமானதைக்குறித்துச் ச


Quoique vous soyez savant நீர் சாஸ்திரியாயிருந்தாலும்.
Sans que je le dise நான் அதைச்சொல்லாமல் *ou* சொல்லாதிருந்தாலும். [ன்றுவதுபோலே.
Selon qu'il vous paraîtra bon உமக்குச் சரியென்று தோ
Si vous venez நீங்கள் வந்தால், வந்தக்கால், வருவீர்களேயாகில் *ou* ஆனால். [ல்.
Si vous ne venez pas நீங்கள் வராவிட்டால், வராதேபோனா
Sinon இல்லாவிட்டால்.
Soit ஆகட்டும், இருக்கட்டும், ஆவது, ஆனாலும், என்கிலும்: soit le matin soit le soir காலமேயாவது சாயங்காலமாவது, காலமேயானாலும் சாயங்காலமென்கிலும்; soit que vous vouliez ou que vous ne vouliez pas உங்களுக்கு மனதிருந்தாலுஞ் சரி இல்லாதேபோனாலுஞ் சரி: vous le voulez, soit உமக்கு மனசுண்டு ஆகட்டும். [ண்ணுக.
Supposé que vous veniez நீர் வந்தக்கால், வருவீரென்றெ
Tandis que vous lisiez நீர் வாசிக்கிறபோது.
Tantôt il rit, tantôt il pleure சிலவிசை சிரிக்கிறான் சிலவிசை அழுகிறான். [ருக்குமளவும்.
Tant que vous serez heureux நீங்கள் பாக்கியவான்களாயி
Toutefois ஆகிலும், ஆயினும். [போதெல்லாம்.
Toutes les fois que je vous vois நான் உம்மைப் பார்க்கிற
Vu que vous êtes pieux நீர் பத்திமானாயிருக்கிறபடியினாலே, *ou* இருக்கிறதைப்பார்த்து.

PARAGRAPHE LXIII. ௬௩-ம்-பிரிவு.

Interjections உணர்த்தியவிடைச்சொற்கள்.

Ah! ஆ, அ. Aie! ha! hélas ஐயோ, ஐயையோ.
Fi! fi donc! சீ, சீச்சீ.
Ho! oh! ஓ, ஓகோ, ஓஓ Hé! eh! ஏ.
Ça, Courage, கெட்டி, உறுதி.
Chut! paix! சும்மா, பேசாதே.





DEUXIÈME PARTIE. — உ-ம். பிரிவு.

PARAGRAPHE I. — முதற்பிரிவு.

L'étude. — படிப்பு.


Il est temps d'étudier.	படிக்கநேரமாயிற்று.
Le maitre vient.	வாத்தியார் வருகிறார்.
As-tu appris ta leçon?	உன்பாடங்கற்றுக்கொண்டியா?
Je la sais un peu.	அது எனக்குக் கொஞ்சந் தெரியும்.
Récite la.	அதை மனப்பாடமாய்ச் சொல்லு.
Je ne la sais pas par cœur.	அது மனப்பாடமாய் எனக்குத் தெரியாது.
Ne t'avais-je pas dit de l'apprendre par cœur.	அதைப்பாடம்பண்ண நான் உனக்குச் சொல்லவில்லைவோ?
Je n'ai pas bonne mémoire.	எனக்கு நல்ல நினைப்பில்லை.
Une autre fois ne fais pas le paresseux.	வேறொருவிசை சோம்பத்தனம்பண்ணாதே.
Je puis la lire, si vous le voulez.	உமக்குச் சித்தமானால் நான் அதைவாசிக்கலாம்.
Commence à la lire à cet endroit-là.	அவ்விடத்தில் அதை வாசிக்கத்துவக்கு.
Lis plus distinctement.	அதிக தெளிவாய் வாசி.
Il faut bien prononcer chaque mot et chaque syllabe, et ne pas aller trop vite.	அந்தந்த வார்த்தையையும் அசையையும் நன்றாய் உச்சரிக்கவும் அதிக படபடப்பாய் வாசிக்கா திருக்கவும்வேணும்.
Ce jeune homme à une belle prononciation.	இந்தவாலன் நன்றாய் உச்சரிக்கிறான்.
Mais celui-ci prononce très-mal.	இவனோவென்றால் மெத்தத் தப்பிதமாயுச்சரிக்கிறான்.
Sais-tu lire le tamoul?	தமிழ்ப்பாஷை வாசிக்க உனக்குத்தெரியுமா?

Français	Tamil
Je le sais; il y a trois ans que je l'apprends.	தெரியும், மூன்று வருஷமாய் அதைப்படிக்கிறேன்.
Et le français?	பிராஞ்சுப்பாஷையோ?
Je ne le sais pas encore bien.	அது எனக்கு இன்னம் நன்றாய்த் தெரியாது.
Tu n'as pas encore l'usage de le parler.	அதைப்பேச உனக்கு இன்னம் அப்பியாசமில்லை.
Cela viendra peu à peu.	அது கொஞ்சங் கொஞ்சமாய் வரும்.
Pour apprendre, il faut de la bonne volonté et de l'attention.	கற்றுக்கொள்ள நல்ல மனசுங் கவனமும்வேணும்.
J'en ai suffisamment; mais le succès n'est pas donné à tout le monde.	போதுமானமட்டும் அதுகள் எனக்கு உண்டு, ஆனால் அநுகூலம்எல்லாருக்குங்கொடுக்கப்படாது.
C'est vrai; néanmoins un travail constant surmonte bien des difficultés.	அதுமெய்தான், ஆயினும் பிடிமானமான பிரயாசம் அநேகந் தடைகளைச் செயிக்கும்.
Lis un peu de français.	பிராஞ்சுப் பாஷையிலே கொஞ்சம் வாசி.
Quel livre faut-il lire?	எந்தப்புத்தகம் வாசிக்கவேணும்?
Celui-ci; car c'est un bon livre.	இந்தப்புத்தகத்தைவாசி. ஏனெனில்இதுவே நல்லபுத்தகம்
Est-ce qu'il y a de mauvais livres?	கெட்டபுத்தகங்களுண்டோ?
Il y en a beaucoup.	அநேகமுண்டு.
Quels sont les mauvais livres?	கெட்ட புத்தகங்களாவதென்ன?
Tous ceux qui contiennent de mauvaises doctrines ou des choses contraires à la vraie religion et aux bonnes mœurs.	கெட்ட துர்ப்போதனைகள் அல்லது சத்தியவேதத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் விரோதமானகாரியங்கள் அடங்கிய சகல புத்தகங்களாம்.
Ces livres font-ils du mal?	அந்தப் புத்தகங்கள் தின்மைசெய்யுதோ?
Ils en font beaucoup.	வெகு தின்மைசெய்யும்.

Comment cela?	அதெப்படி?
Ils corrompent l'esprit et le cœur, et portent au mal.	புத்தியையும் இருதயத்தையுங்கெடுத்துத் தின்மைக்குத் தூண்டிவிடும்.
Puisqu'il en est ainsi, je ne lirai pas de mauvais livres.	அப்படியிருக்கிறபடியினாலே கெட்ட புத்தகங்களை வாசிக்கமாட்டேன்.
As-tu appris à écrire?	எழுதக் கற்றுக்கொண்டாயா?
J'ai appris un peu.	கொஞ்சங் கற்றுக்கொண்டேன்.
Apporte une plume.	ஓரிறகு கொண்டுவா.
En voici une ici sur la table.	இதோ இங்கே மேசையிலொன்றுண்டு.
Y a-t-il de l'encre et du papier?	தீத்தாவுங் கடுதாசியுமுண்டோ?
Il n'y en a pas ici, mais je vais en apporter.	இங்கே அதுகள் இல்லை, ஆனால் இப்போது அதுகளைக் கொண்டுவருகிறேன்.
Il faut tailler la plume.	இறகு சீவவேணும்.
Je la taillerai bien.	அதை நன்றாய்ச்சீவுவேன்.
N'as-tu pas encore fini de la tailler?	இன்னம் அதைச்சீவிமுடிக்கவில்லையா?
C'est fini, je suis prêt.	ஆச்சுது, முஸ்திப்பா யிருக்கிறேன்.
Sais-tu bien tenir ta plume?	இறகு நன்றாய்ப்பிடிக்க உனக்குத் தெரியுமோ?
N'est-ce pas comme cela? Voyez.	இப்படியல்லவா? பாரும்.
C'est cela même; écris.	அப்படிதான், எழுது.
Que faut-il que j'écrive?	நான் எழுதவேண்டியதென்ன?
Ce que je vais te dicter.	நான் உனக்குச் சொல்லிக்கொடுப்பதை எழுது.
Forme bien tes lettres.	உன் எழுத்துகளைச் சரியாய்வரை.
Je tâche de les former sur le modèle qui m'a été donné.	எனக்குக் கொடுக்கப்பட்ட மாதிரியின் பாவனையாக அ

	ளுகளை வரையப் பிரயாசப்படுகிறேன்.
Où est ton modèle d'écriture?	உனக்கிருக்கிற எழுத்துச் சட்டம் எங்கே?
Le voici. On dit qu'il est bien.	இதுதான், நல்லதாயிருக்குதென்கிறார்கள்.
C'est vraiment une belle écriture.	மெய்யாகவே நல்ல கையெழுத்துதான்.
Après cela ai-je encore beaucoup de choses à apprendre?	அதுக்குப்பின் நான் கற்றுக்கொள்ளவேண்டிய அநேக காரியங்களுண்டோ?
Oui certes, il y en a encore beaucoup.	ஆம், இன்னம் அநேகம் உண்டென்பது நிச்சயம்.
Quelles sont-elles?	அதுகளென்ன?
La grammaire, le calcul, l'histoire, la géographie et autres matières semblables.	இலக்கணம், கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம் முதலான விஷயங்களாம்.
A quoi bon se casser la tête, à apprendre tant de choses?	இத்தனை காரியங்களைக் கற்றுக்கொள்ளத் தன் தலையை யுடைப்பதற்கு என்ன அவசரம்?
C'est nécessaire pour devenir intelligent et capable de remplir quelqu'emploi qui aide à vivre.	புத்திசாலியாகவும் பிழைப்பதற்கு உதவியாகும் ஓர் உத்தியோகம் பண்ணத் தக்கவனாகவும் அது அவசரமாமே.
Est-il nécessaire d'en savoir tant pour avoir un emploi?	ஒருத்தியோகத்தில் அமர அம்மாத்திரம் கல்வி வேணுமோ?
Pour un petit emploi, il en faut peu; pour un grand emploi il en faut beaucoup.	கொஞ்ச வுத்தியோகத்துக்குக் கொஞ்ச படிப்பும், பெரிய வுத்தியோகத்துக்குப் பெரிய படிப்பும்வேண்டியது.
S'il en est ainsi, j'étudierai bien.	அப்படியானால் நன்றாய்ப் படிப்பேன்.
Mais pour être heureux dans ce monde et dans l'autre, il faut quelques autres choses de plus.	ஆனால் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் பாக்கியமாயிருக்க இன்னம் வேறே சிலதுகள்வேணும்.

Qu'est-ce donc?	அது என்னவாம்?
Une bonne conduite et la pratique de la vraie religion.	நல்லொழுக்கமுஞ் சத்தியவேதானுசாரமுமாம்.
Pourquoi cela?	என்னத்தைப்பற்றி?
C'est que le vice conduit à toutes sortes de désordres et d'infortunes.	பாவதுர்க்குணஞ் சகல துர்நடத்தைகளிலும் நிர்ப்பாக்கியங்களிலுங் கொண்டுபோய்விடும்.
C'est vrai, j'en ai vu bien des exemples.	அது மெய்தான், அதுக்கு அநேகந் திஷ்டாந்தங்களைக் கண்டேன்.
La vertu au contraire rend heureux.	புண்ணியமோவெனில் பாக்கியவானாகப்பண்ணும்.
Donnez moi quelque bon livre?	ஐயா தார் நல்ல புத்தகம் எனக்குக்கொடும்.
Je t'en donnerai quand tu seras bien studieux.	நீ படிப்பின்மேல் சரியான கவனிப்பாயிருக்கும்போது கொடுப்பேன்.
Voyez ce jeune homme; il n'appreud rien, il ne fait que jouer.	இந்த வாலிபனைப் பாருங்கள். அவன் ஒன்றும் படிக்கிறதில்லை, எந்நேரமும் விளையாடுகிறான்.
C'est lui qui m'a appris à jouer.	விளையாடுகிறவகை அவன்தான் எனக்குக்கற்றுக்கொடுத்தான்.
Ne l'imite pas; car s'il ne se corrige, il ne fera qu'un vaurien.	அவனைக் கண்டுபாவிக்காதே. ஏனெனில் அவன் திருந்தாவிட்டால் பொல்லாதவனாவதொழிய மற்றப்படியல்ல.
Ensuite á quoi sera-t-il bon?	பின்னும் எதுக்கு உதவுவான்?
Tout au plus à faire un goujat, un couli.	அவன் ஓர் சொற்றூழியன், ஓர் கூலியாளாவானேயலாஇல் பெரியகாரியமகான்.



PARAGRAPHE II.	உம்.– பிரிவு.
Le Domestique.	*வீட்டுழியன்.*
Il y a une heure que je te cherche; où es-tu allé courir?	ஒருமணிநேரம் உன்னைத் தேடுகிறேன், எங்கேபோய்த்திரிந்தாய்?
Je n'ai été nulle part.	நானெங்கும் போகவில்லை.
Tu mens; car tu n'étais pas à la maison.	பொய் சொல்லுகிறாய், ஏனெனில் நீ வீட்டிலே யிருந்ததில்லை.
J'ai été aux nécessités.	அவசரத்துக்குப் போனேன்.
Tu donnes de vaines excuses. Il ne faut pas ainsi mentir; car cela est mal, et puis, je le saurai bientôt, et je n'aurai plus de confiance en toi.	வீண் சாக்குபோக்கு சொல்லுகிறாய், இப்படிபொய்சொல்லவேண்டாம். ஏனெனில் அது குற்றமாமே. மிகவுங்கொஞ்சத்துக்குள்ளே அதையறிவேன், பின்னும் உன்னை நம்பமாட்டேன்.
S'il en est ainsi, je vous dirai la vérité: j'ai été me baigner dans l'étang.	அப்படியானால் உமக்கு உண்மைசொல்லுவேன், ஏரியிலே குளிக்கப்போனேன்.
Tu ne dois pas sortir ainsi sans ma permission.	என் உத்தரவில்லாமல் நீ அப்படிவெளியே போகக்கூடாது.
Je ne le ferai plus: mais il fait si chaud, qu'il faut bien se baigner de temps en temps.	இனியப்படி செய்யேன், ஆனால் கடினவுஷ்ணம் வழங்குகிறதினாலே வேளைக்குவேளை தலைமுழுக அவசரந்தானே.
Tu peux te frotter d'huile ici, et te verser de l'eau sur la tête, quand il est nécessaire.	இங்கே அவசரமான போது எண்ணெய்தேய்த்துத் தலைக்குத்தண்ணீர் வார்க்கலாம்.
C'est ce que je ferai désormais.	இனிமேலைக்கு அப்படிசெய்வேன்.
Il y a bien long-temps qu'on n'a pas balayé ma chambre; elle est très-malpropre.	என் அறையைப் பெருக்கி வெகுநாளாகிப் போச்சுது, அது வெகு அசுத்தமா யிருக்குது.

Monsieur, il n'y a pas de balai.	ஐயா துடைப்பமில்லை.
Pourquoi n'y en a-t-il pas? n'est-ce pas un meuble nécessaire et à bon marché?	ஏனில்லை? அது அவசரமும் நயமுமான சாமானல்லவா?
Je vais en faire acheter et faire balayer votre chambre aussitôt.	உடனே துடைப்பம் வாங்குவித்து உம்முடைய அறையைப் பெருக்கச் செய்வேன்.
Elle devrait l'être tous les deux ou trois jours.	அது இரண்டுமூன்று தினந்தோறும் பெருக்கப்படக்கடவது.
Celui qui doit faire ce travail, ne fait pas toujours ce que je lui dis.	இந்தவேலைசெய்ய வேண்டியவன் நான்சொல்லுகிறதை எப்போதுஞ் செய்கிறதில்லை.
Avant de balayer, il faut arroser légérement la chambre, afin que la poussière ne s'éléve pas; balayer, sans arroser, ne fait que faire voler la poussiére, sur les meubles et partout ailleurs.	தூசி எழும்பாத படிக்குப் பெருக்குவதற்குமுன் அறையிலே தண்ணீர் தெளிக்கவேணும், தண்ணீர் தெளிக்காமல் பெருக்குகிறது சாமான்களிலும் மற்ற எவ்விடத்திலுந் தூசியைப்பரப்புவதொழிய மற்றப்படியல்ல.
Aprés avoir balayé, il faut essuyer les chaises et autres meubles de la chambre, et les mettre à leur place.	பெருக்கினபின்பு அறையிலுள்ள நாற்காலி முதலியசாமான்களைத் துடைத்து அதுகளைத்தங்களிடங்களிலே வைக்கவேணும்.
Pour cela, il nous faut des torchons.	அதற்கு எங்களுக்குத் துடைதுணிகள் வேண்டியது.
Prends ceux-ci.	இதுகளையெடுத்துக்கொள்.
As-tu mis de l'huile dans la lampe?	விளக்கிலே எண்ணெய் ஊற்றினியா?
Je vais en verser.	அதிலே எண்ணெய் வார்க்கப்போகிறேன்.
Tu n'y a pas même mis de mèche. Comment veux-tu qu'elle brûle?	அதிலே திரி முதலாய்ப்போடவில்லை, அது எப்படி எரியக்கூடும்?

Ouvre cette fenêtre, et ferme cette porte.	இந்தச் சன்னலைத் திறந்து அந்தக் கதவைச் சாத்து.
Faut-il la fermer à clef ou au verrou?	அதைப் பூட்டவேணுமோ அல்லது தாழ்ப்பாள் போடவேணுமோ?
Pendant le jour, il suffit de la fermer simplement.	பகலிலே அதைச் சும்மா சாத்தினாற் போதும்.
La nuit, il faut la fermer au verrou, et quand nous sortons, la fermer à clef.	இராத்திரியில் அதற்குத் தாழ்ப்பாள் போடவும், நாங்கள் வெளியே போகிறபோது அதைப் பூட்டவும் வேணும்.
Quand je sors, sois le gardien de la maison.	நான் வெளியே போகிறபோது நீ வீட்டுக்குக் காவலாயிரு.
Veille toujours à ce qu'il ne disparaisse rien de la maison; car tu es responsable de tout.	வீட்டிலே ஒன்றுங் காணாமற் போகாதபடிக்கு எப்போதுங் கவனித்துப் பார். ஏனெனில் நீ எல்லாத்துக்கும் உத்தரவாதம்.
Monsieur, voici un gentilhomme qui demande à vous parler.	ஐயா! இதோ ஓர் துரை உம்மைக் கண்டு பேசக் கேட்கிறார்.
Sais-tu qui il est?	அவர் ஆரென்று உனக்குத் தெரியுமோ?
Non, monsieur.	ஐயா தெரியாது.
Fais-le entrer.	அவனை உள்ளே வரச் சொல்லு.

PARAGRAPHE III. ௩ம். பிரிவு.

Les nouvelles. செய்திகள்.

Bonjour, monsieur.	சலாம் ஐயா.
Monsieur, je vous présente mes respects.	ஐயா உமக்கு வந்தனம் பண்ணுகிறேன்.
Comment vous portez-vous maintenant?	இப்போ உமக்குச் சரீர சவுக்கியமெப்படி?
Je me porte passablement bien.	எனக்கு நயச் சவுக்கியமாயிருக்கிறேன்.

Il y a long temps que je désirais savoir l'état de votre santé.
வெகுநாளாக உமது க்ஷேமசுகம் அறிய ஆசையாயிருந்தேன்.

Vous êtes trop bon.
நீர் அதிக பக்ஷமாயிருக்கிறீர்.

J'avais entendu dire que vous étiez malade.
வியாதியாயிருக்கிறீரென்று கேள்விப்பட்டிருந்தேன்.

Effectivement je l'ai été; mais maintenant je suis guéri.
உண்மையே வியாதியாயிருந்தேன், ஆனால் இப்போது சொஸ்தப்பட்டிருக்கிறேன்.

Vous êtes encore bien maigre: je désire vous voir bien rétabli.
இன்னம் மெத்தவும் மெலிந்திருக்கிறீர், நீர் நன்றாய்த் தேறியிருக்கிறதைக் காண ஆசைப்படுகிறேன்.

Dans peu, j'espère être tout-à-fait bien-portant.
கொஞ்சத்துக்குள்ளே முழுதுஞ் சவுக்கியமாயிருப்பேனென்று நம்புகிறேன்.

Comment se porte toute votre famille?
உமது குடும்பத்தார் எல்லாரும் என்னமாயிருக்கிறார்கள்.

Elle se porte bien.
க்ஷேமமாயிருக்கிறார்கள்.

Votre frère a-t-il obtenu l'emploi qu'il désirait auprès du Raja de Mysore?
உம்முடைய சகோதரன் மைசூர் ராசாவினிடத்தில் அபேட்சித்திருந்த உத்தியோகத்தை யடைந்தானோ?

Oui, mais il a un antagoniste, qui cherche à le supplanter.
ஆம், ஆனால் அவனை நீக்கி யேற்படத் தேடுகிற ஒரெதிராளி அவனுக்குண்டு.

Oh! ne craignez pas; ce rival est un sot, qui ne saurait réussir.
ஓகோ நீர் பயப்படவேண்டாம், அந்த எதிரி அநுகூலப்படமாட்டாத மடையனாயிருக்கிறான்.

Il est sot, c'est vrai; mais il a bien des protections.
அவன் மடையனென்பது மெய்தான், ஆயினும் அவனை யநேகர் ஆதரிக்கிறார்கள்.

Le mariage de votre cousin aura-t-il lieu bientôt?
உம்முடைய மச்சானின் கலியாணங் கொஞ்சத்துக்குள்ளே நடக்குமோ?

On dit qu'il se fera dans deux ou trois semaines.	இரண்டுமூன்று வாரத்துக்குள்ளே ஆகுமென்கிறார்கள்.
Quelle est la cause de ce retard?	இந்தத்தாமதத்துக்குக் காரணமென்ன?
On fait divers bijoux à la future, et divers autres préparatifs pour le mariage.	பெண்ணுக்குப் பலநகைகளையுங் கலியாணத்துக்கு மற்றநேக முஸ்திப்புகளையும் பண்ணுகிறார்கள்.
On fera donc ce mariage avec une bien grande pompe?	அந்தக்கலியாணம் மிகுந்த ஆடம்பரத்தோடே செய்யப்போகிறார்களோ?
N'est-ce pas la coutume de ce pays d'en déployer dans les mariages, même au-dessus de ses moyens?	கலியாணங்களிலே தன்னவகாசத்துக்கு மேலாகவும் ஆடம்பரம்பண்ணுவது இத்தேசத்து வழக்கமல்லவா?
Oui; mais aussi combien de gens qui s'endettent pour cela! Que s'en suit-il?	ஆம், ஆனால் அதற்காகக் கடன்படுகிறவர்கள் எத்தனையோ பேர்களாம்! அதினாலாவதென்ன?
Bien des calamités ensuite.	பின்னும் வெகு துன்பங்களாகும்.
Savez-vous la grande nouvelle de Madras?	சென்னபட்டணத்துப் பெரியசெய்தி யுமக்குத் தெரியுமோ?
Quelle nouvelle? Je l'ignore peut être.	என்னசெய்தி? எனக்குத்தெரியாதிருப்பதாக்கும்.
La mort subite d'un tel.	இன்னானுடைய சடுதியான மரணம்.
Quoi! Ce grand richard est mort? et comment est-il mort?	அந்தப் பெரிய திரவியசம்பன்ன னிறந்தானோ? அவனெப்படிசெத்தான்?
Immédiatement après avoir mangé, il est tombé roide mort.	அவன் சாப்பட்டமாத்திரத்திலே விறைத்திறந்து விழுந்தான்.
Et quoi! lui aurait-on donné quelque poison violent?	இதேது! அவனுக்குக் கடும் நஞ்சூட்டியிருப்பார்களோ?
Je ne le sais, mais on en parle beaucoup.	அதெனக்குத்தெரியாது, ஆனா லதின்பேரிலே வெகுவாய்ப் பேசுகிறார்கள்.

On a fait, dit-on, l'autopsie, et l'on n'a rien trouvé.

அவனுடையசவங்கிழிப்பாத்து ஒன்றுங் காணவில்லையென்கிறார்கள்.

Combien de lacs de roupies laisse-t-il à ses héritiers?

தன்னுஸ்திச் சுதந்தாரர்களுக்கு எத்தனைலக்ஷம்ரூபாய் விட்டான்?

Six lacs de roupies, dit-on.

ஆறுலக்ஷம் ரூபாய் விட்டாராம்.

Combien en a-t-il emporté avec lui?

தன்னோடே எம்மாத்திரங் கொண்டுபோனான்?

Pas même une cache.

ஒருகாசுங் கொண்டுபோகவில்லை.

A quoi lui ont servi ses grandes richesses?

அவனுடைய பெரிய ஆஸ்திகள் அவனுக்கு என்னத்துக்குஉதவினது?

A rien qu'à lui donner du tracas dans ce monde.

இவ்வுலகத்தி லவனுக்குத் தொந்தரை கொடுக்கிறதற்கு உதவினதொழிய மற்றப்படியல்ல.

Au moins, s'il avait connu le vrai Dieu et observé ses commandements, cela lui aurait servi.

அவன் மெய்யான கடவுளையறிந்து அவருடைய கற்பனைகளை யநுசரித்திருப்பானேயாகில் அதுஆகிலும்அவனுக்கு உதவியிருக்குமே.

Mais son esprit n'était occupé que de ses richesses.

ஆனு லவனுடையபுத்திதன்னுஸ்தியின்பேரிலே மாத்திரங் கவலையாயிருந்தது.

Qu'a-t-on fait de son corps?

அவன்பிரேதத்தை என்ன செய்தார்கள்?

On l'a brûlé comme celui des autres.

மற்றவர்களுடைய பிரேதத்தைப்போலே அதைச் சுட்டார்கள்.

Voilà donc comment les biens et les plaisirs de ce bas monde s'en vont en fumée pour ceux qui ne servent pas le vrai Dieu.

அப்படியோ இந்தப் பூலோகத்துநன்மைகளுமின்பங்களும் மெய்யான சர்வேசுரனைச் சேவியாதவர்களுக்குப் புகையாய்ப்போகுது.

C'est bien vrai, et per-

அது உண்மைதான் ஆயி

sonne n'y pense sérieusement.

னு மிகுதச்சரியாய்க் கவனிக்கிறவர்களொருவருமில்லை.

Quelles sont les autres nouvelles de la ville?

ஊரிற் பரம்பிய மற்றச்செய்திகளென்ன?

A quelque distance d'ici, les voleurs ont pillé une maison. Un peu plus loin, ils ont assassiné un homme.

இதற்குக் கொஞ்சதூரத்திலே திருடர் ஓர்வீட்டில் கொள்ளையடித்தார்கள், கொஞ்சம் அதிகத்தொலைவிலே ஓர்மனிதனைக் கொலைசெய்தார்கள்.

Les voleurs ont-ils été saisis?

திருடர்அகப்பட்டார்களோ?

Ils l'ont été; mais les objets n'ont pas été retrouvés, et on ne sait pas encore comment leur affaire tournera.

அகப்பட்டார்கள், ஆயினும் உடைமைகள்அகப்படவில்லை, மேலும் அவர்களுடைய காரியம் என்னமாய்த்திருமோ தெரியாது.

Depuis quelque temps, les crimes se multiplient en divers lieux de ce pays.

சிலகாலந் துவக்கிப் பாதகங்கள் இத்தேசத்துப் பலவிடங்களிலே பலுகிவருகின்றது.

Aussi les châtimens et les malheurs s'y multiplient également.

ஆதலால் அதற்கொத்தபடி ஆக்கினைகளுந் துன்பங்களும்அதிலேபலுகுது.

Oui, depuis quelques mois, que de malheurs sont survenus dans ce pays?

ஆம், சிலமாதந் துவக்கி இத்தேசத்தில் எத்தனையோ துன்பங்கள்நேரிட்டது.

Par exemple, quels désastres l'inondation a causés à Mangsacoupam et dans les environs!

அதற்குச்சாட்சியாகவெள்ளப்பெருக்குமஞ்சகுப்பத்திலுஞ் சுற்றுப்புறங்களிலும்எத்தனையோ சேதப்படுத்தினது!

Que de gens y ont perdu la vie!

எத்தனையோ பேர் அதிலே உயிரையிழந்தார்கள்!

A Masulipatam, dans une tempête, la mer furieuse s'est gonflée et s'est jetée sur la ville et les environs, où elle a causé des dégâts horribles.

மசூலிப்பட்டணத்தில் ஓர்புசலிலே கொந்தளித்த கடலுப்பிப்பொங்கிப் பட்டணத்திலுஞ் சுற்றுப்புறங்களிலும் பாய்ந்து பயங்கரத்துக்குரிய சேதங்களுக்குக்காரணமாயிற்று.

Là aussi que de gens sub-

அங்கேயும் எத்தனையோபே

mergés, que de maisons anéanties!

ர் சலத்தில் அமிழ்ந்திப்போனுர்கள், எத்தனையோ வீடுகள் நிர்மூலமாயிற்று!

Presque dans le même temps, à Calcutta et à Chandernagore une autre tempête a causé aussi d'affreux ravages.

ஏறக்குறைய அக்காலத்தில் கல்க்குத்தாவிலுஞ் சந்திரநகரத்திலும் மற்றொருபுசல் அகோர நஷ்டங்களுக்கு ஏதுவாயிற்று.

Là encore, que de navires et de gens ont péri misérablement!

அங்கேயும் எத்தனையோ கப்பல்களுஞ் சனங்களு நிர்ப்பாக்கியமாய்ச்சேதமாயிற்று!

Il y a peu de temps, une île des Lakedives a disparu engloutie dans la mer, avec tous ses habitans.

கொஞ்சகாலத்துக்கு முன்னே இலக்கத்திவுகளிலொன்று தன் சகலகுடிகளோடுஞ் சமுத்திரத்திலே முழுகிக் காணுமற்போயிற்று.

Quels désastres et combien d'autres encore sont arrivés dans un court espace de temps!

அதுகள் எப்படிப்பட்ட கேடுகள்! குறுக்கமான காலத்திடையில் மற்றெத்தனையோ தின்மைகள் சம்பவித்தது.

J'aurais bien encore d'autres nouvelles à vous dire; mais je n'en ai pas le temps.

உமக்குச்சொல்ல இன்னம் வேறுநேகஞ் சமாச்சாரங்களெனக்குண்டு, ஆனால் அதற்கெனக்குநேரமில்லை.

Dites-les moi au moins en deux mots?

இரண்டுவார்த்தையிலேயாவது அதுகளை எனக்குச்சொல்லும்.

Dans les pays étrangers, il y a des nouvelles de guerre, de paix, d'alliances entre certaines nations, de morts et de naissances de princes, et autres semblables.

பிறதேசங்களில் சண்டை சமாதானச் சமாச்சாரங்களுஞ் சில சனங்களுக்குள் ஐக்கியமும், இராசபுத்திரர்களின் பிறப்புஞ் சாவுமுதலிய சமாச்சாரங்களுமுண்டு.

Et dans la ville, quelles sont les autres nouvelles?

ஊரிலேயு மற்றச்செய்திகள் என்ன?

Comme de coutume, on fait courir des bruits infa-

வழக்கத்தின்படியே இவனைவன்பேரிலே அவலாதிபேச்சுக

mants sur celui-ci, sur celui-là. Mais je n'aime pas à m'ingérer dans de pareils cancans.	ளைப் பரப்புகிறார்கள், ஆனால் அப்படிப்பட்ட புரணிகளிலே நுழைய எனக்கு மனதில்லை.

PARAGRAPHE IV. — ச-ம். பிரிவு.
Le bazar. — கடை.

Où allez-vous, madame?	எங்கேபோகிறீர் அம்மா?
Je vais au bazar; j'ai diverses choses à acheter.	கடைக்குப்போகிறேன், அநேககாரியங்களை நான் வாங்கவேண்டியது.
Voulez-vous que je vous y accompagne? Je vous rendrai les services que je pourrai.	நானும்மோடே வரட்டா? என்னாலாகத்தக்க உதவியுமக்குச்செய்வேன்.
Qui es-tu, jeune fille?	நீயார் சிறுவி?
Une pauvre orpheline à votre service.	உமக்கூழியம்பண்ண விரும்பிய தாய்தகப்பனில்லாத தரித்திரப்பெண்ணு.
Où est la boutique au riz?	அரிசிக்கடையெங்கே?
Voici la meilleure boutique.	முக்கியமானகடையிதுவே.
Combien donnez-vous de mesures de riz au fanon?	பணத்துக்கு எத்தனை படியரிசிகொடுக்கிறீர்கள்?
Deux mesures et demie.	இரண்டரைப்படி.
Ne m'en donnerez-vous pas davantage?	எனக்கு அதிகமாய்க்கொடுக்கமாட்டீர்களோ?
C'est maintenant le prix courant.	இப்போது இதுவே அகவிலை.
Le riz a donc baissé? Car on en donnait trois mesures la semaine dernière.	அரிசி குறைந்ததோ? ஏனெனில் போனவாரம்மூன்றுபடி கொடுத்தார்கள்.
Il avait même augmenté, et était allé jusqu'à trois mesures et demie.	அதுவும் அதிகமாகி மூன்றரைப்படிவரைக்கும் உயர்ந்திருந்தது.

Autrefois on en donnait cinq et même six mesures; quelle différence!
முற்காலத்தில் அஞ்சாறு படிமுதலாய்க் கொடுப்பார்கள், எம்மாத்திரம் வித்தியாசம்!

Ces temps sont passés; peut-être reviendront-ils.
அந்தக்காலங்கள் கடந்துபோயிற்று, சிலவிசை திரும்பி வரும்.

Comment s'appelle cette espèce de grain?
இந்தவகைத்தானியத்துக்குப்பேரென்ன?

Madame, c'est du cambou.
அம்மா, கம்புஎன்னப்படும்.

Combien de mesures en donne-t on au fanon?
அதிலே பணத்துக்கு எத்தனை படி கொடுப்பார்கள்?

On en donne cinq mesures.
அதிலே ஐந்துபடி கொடுப்பார்கள்.

Mesurez et donnez-moi sept mesures et demie de riz; voilà trois fanons. Vous ne faites pas bonne mesure.
எனக்கு ஏழரைபடி அரிசி அளந்துபோடுங்கள், இதோ மூன்றுபணம், நீங்கள் பூர்த்தியாய் அளக்கிறதில்லை.

Je mesure comme tous les autres.
மற்றச் சகலரையும்போலே அளந்துபோடுகிறேன்.

Cette mesure n'est pas étalonnée. Voulez-vous me tromper.
இந்தப் படிக்கு முத்திரையில்லை. என்னை மோசம்பண்ணத் தேடுகிறீர்களோ?

Non, madame, sans le savoir, j'ai pris une mesure pour une autre.
இல்லையம்மா, தெரியாமல் ஒருபடிக்குப் பதிலாக மற்றொன்றையெடுத்தேன்.

Avez-vous du tamarin, du sel, du piment, des cloux de girofle et de la muscade?
உங்களுக்குப்புளி, உப்பு, மிளகாய், கிராம்பு, சாதிக்காயிருக்குதா?

En fait de fourniture de cuisine, j'ai tout ce que vous pouvez désirer.
சமையல்வீட்டுச்சேகரவிஷயத்தில் நீங்கள் விரும்பத்தக்கதெல்லாம் எனக்குண்டு.

Donnez-m'en pour six caches de chaque espèce.
அந்தந்த வகையிலே ஆறுகாசுக்காக எனக்குக் கொடும்.

Je vous donne le poids et même du surplus.
உமக்கு இடையும் மிச்சமுங்கொடுக்கிறேன்.

Cependant vous en donnez bien peu.
ஆயினும் பெத்தவங் கொஞ்சமாய்க்கொடுக்கிறீர்.

Tout est extrêmement cher maintenant.
இப்போது சகலமுங் கிராக்கியாயிருக்குது.

Quand les marchandises seront-elles à bon marché?	சரக்குகள் எப்போ மலிவா யிருக்கும்?
Dans trois mois, le prix diminuera un peu; mais augmentera ensuite.	மூன்றுமாசத்துக்குப் பிறகு விலைகொஞ்சங் குறையும், ஆனால் பின்னும் உசரும்.
Quel est le prix de ce fagot de bois?	இந்த விறகுக்கட்டுக்குவிலையென்ன?
Trois fanons et demi.	மூன்றரைப்பணம்.
C'est bien cher.	அதுவெகுவிலையாம்.
Avez-vous quelque marchandise un peu rare?	கொஞ்சமருமையான சரக்கு உமக்குண்டோ?
Oui, madame; voici des petits pois d'Europe.	ஆம் அம்மா, இதோசீமைப் பட்டாணிகள்.
Quel en est le prix?	அதுகளுக்கு விலையென்ன?
Un fanon la mesure.	பணத்துக்கு ஒருபடி.
Qu'avez-vous encore de curieux?	இன்னம் உம்மிடத்தில் நூதனமானதென்ன?
Des joujoux pour les enfants.	பிள்ளைகளுக்குச்சிலவிளையாட்டுடைமையுண்டு.
Voici un joli petit cheval sur des roulettes.	இதோ உருளைகளின்மேலேற்றியநேத்தியானசிறுகுதிரை.
Pour combien le donnez-vous?	அதைஎம்மாத்திரத்துக்குக் கொடுக்கிறீர்கள்?
Pour trois roupies.	மூன்றுரூபாய்க்கு.
Cela ne vaut pas autant, je vous en donne une roupie et demie.	அது அம்மாத்திரம் பெறாது, அதுக்கு ஒன்றரை ரூபாய்கொடுக்கிறேன்.
Puis-je vous le donner à perte?	நான் அதை நஷ்டமாகவுமக்குக்கொடுக்கக்கூடுமோ?
Eh bien, quel est votre dernier prix?	நல்லது, உமது தீர்ப்பான விலையென்ன?
Deux roupies.	இரண்டுரூபாய்.
Je n'en veux pas à un prix si élevé.	அவ்வளவு உயர்ந்த கிரயத்துக்கு எனக்குத் தேவையில்லை.
Vendez-vous cette table?	இந்தமேசையை விற்கிறீர்களோ?
Non, madame, je l'ai achetée à l'encan pour mon usage.	இல்லையம்மா, எனக்கு உதவியாக அந்த ஏலத்திலே எடுத்தேன்.

Combien l'avez-vous payée?
அதுக்கு என்னகிரயங்கொடுத்தீர்?

Deux roupies et demie.
இரண்டரைரூபாய்.

C'est bien bon marché.
மெத்தவும் நயமாயிருக்குது.

Si vous voulez ce coffre, je vous le vendrai.
உமக்குவேணுமானால் இந்தப்பெட்டியைஉமக்குவிற்பேன்.

Combien l'avez-vous acheté?
எம்மாத்திரத்துக்கு அதை வாங்கினீர்?

Je l'ai acheté une roupie et demie, je vous le donnerai pour deux.
அதை ஒன்றரை ரூபாய்க்கு வாங்கினேன், இரண்டுரூபாய்க்கு உமக்குக் கொடுப்பேன்.

C'est trop cher; me le donnerez-vous à meilleur marché?
அது அதிகவிலையாச்சுதே, சலக்கரணையாய் அதையெனக்குக் கொடுப்பீரோ?

Si je n'ai pas de gain de mon commerce, comment pourrais je vivre?
என் வியாபாரத்தால்எனக்கு ஆதாயமில்லாவிட்டால் நான்பிழைப்பதெப்படி?

C'est vrai, cependant il ne faut pas demander un prix exorbitant.
அது மெய்தான் ஆயினும் மிதந்தப்பின விலையைக் கேட்கலாகாது.

Eh bien, je vous le donne pour une roupie trois quarts.
நல்லது! ஒன்றேமுக்கால்ரூபாய்க்கு அதை யுமக்குக்கொடுக்கிறேன்.


Où est le marché aux toiles?
சேலைக்கடையெங்கே?

Il est trois rues plus loin.
அதுமூன்றுதெருவுக்கப்பாலேயிருக்குது.

Puisqu'il en est ainsi, j'irai un autre jour.
அப்படியிருக்கிற படியினாலே மற்றொருநாள் அங்கேபோவேன்.

Fillette, pourras-tu m'apporter ce que j'ai acheté?
பெண்ணே, நான்வாங்கினதைஎனக்குக்கொண்டுவர உன்னாலேகூடுமா?

Oui, madame, avec plaisir.
ஆம் அம்மா, சந்தோஷமாய்க்கொண்டுவருகிறேன்.



PARAGRAPHE V.	௫-ம். பிரிவு.
Le blanchisseur.	வண்ணான்.
Où est le blanchisseur?	வண்ணான் எங்கே?
Il se tient là à la porte.	அங்கே வாசலிலே நிற்கிறான்.
Pourquoi ne m'as-tu pas apporté mon linge?	நீ என் உடுப்பு ஏன் கொண்டுவரவில்லை.
Le voici; je l'ai apporté.	இதோ அதைக் கொண்டுவந்தேன்.
Ce mouchoir est bien sale;remporte-le.	இந்தக்கைக்குட்டை மெத்த அழுக்காயிருக்குது, அதை மறுபடி எடுத்துக்கொண்டுபோ.
Je le laverai mieux.	அதை அதிக சரியாய்ச்சலவை பண்ணுவேன்.
Tu n'as pas apporté justement le compte de mon linge.	நீ என் உடுப்புக்கணக்குசரியாய்க்கொண்டுவரவில்லை.
Monsieur,qu'y manque-t-il?	ஐயா அதற்கு என்னகுறைச்சலுண்டு?
Il manque un drap,deux mouchoirs, un gilet, trois pantalons.	துப்பட்டி ஒன்று, உறுமாலை இரண்டு,உட்சட்டை ஒன்று,காற்சட்டைமூன்று குறையுது.
Monsieur, ces objets sont chez moi.	ஐயா அதுகள் என்வீட்டிலேயிருக்குது.
Quand les apporteras-tu?	அதுகளை எப்போ கொண்டுவருவாய்?
Je vous les apporterai demain,quand je viendrai.	நாளைக்கு நான் வரும்போது அதுகளைக் கொண்டுவருவேன்.
Pourquoi les as-tu gardés ainsi dans ta maison?	ஏன் இப்படி அதுகளை உன் வீட்டிலே வைத்துக்கொண்டாய்?
Je les ai oubliés.	அதுகளை மறந்துவிட்டேன்.
As-tu pensé que je ne m'appercevrais pas de ce qui manque à mon linge?	என் உடுப்பிலே குறைவாயிருக்கிறதைக்கண்டுபிடிக்கமாட்டேனென்றுநினைத்தியா?

Non, monsieur, je ne suis pas de la caste des voleurs, je ne veux pas voler.	இல்லை ஐயாவே, நான் கள்ளர்சாதியானல்ல, திருடனெனக்குமனதில்லை.
Es-tu donc oublieux à ce point?	நீ யவ்வளவு மறதியுள்ளவனோ?
J'ai, il est vrai, peu de mémoire.	எனக்கு ஞாபகங் கொஞ்சமாயிருக்கிறது மெய்தான்.
Mais comment ne t'appercevais-tu pas que tant de linge manquait.	ஆயினும் இத்தனை துணிகுறையுதென்று நீகாணாமலிருந்ததெப்படி?
J'ai manqué d'attention.	எனக்குக்கவனந்தப்பிப்போயிற்று.
Laisse-là tous ces prétextes illusoires, et ne manque pas ainsi à l'avenir.	வீணான அந்தச் சாக்குபோக்கெல்லாம் விட்டுவிடு, இனிமேல் அப்படி தப்பிப்போகாதே.
Je serai dorénavant plus attentif.	இனிமேலைக்கு அதிக கவனிப்பாயிருப்பேன்.
Ce châle est d'une grande finesse: il faut le battre avec précaution.	இந்தச்சால்வை மெத்தமெல்லிசா யிருக்குது. எச்சரிக்கையோடே அதைத்தப்பவேண்டியது.
Je le battrai enveloppé dans un drap.	அதை யொரு துப்பட்டியிலே சுருட்டித்தப்புவேன்.
Sans cette précaution, il se déchirerait.	இந்த எச்சரிக்கையில்லாவிட்டால் கிழிந்துபோம்.
Je sais cela par expérience.	பரிட்சையால் அது எனக்குத்தெரியும்.
Tu n'as pas bien lavé ce vêtement.	நீ இந்தவஸ்திரத்தை நல்ல சலவைசெய்ததில்லை.
C'est vrai, il n'est pas bien blanchi.	அது உள்ளதுதான். அது நன்றாய் வெளுக்கப்பட்டதல்ல.
Pourquoi ne l'as-tu pas rendu bien blanc?	ஏனதைச்சுத்த வெள்ளையாக்கவில்லை?
C'est mon fils qui a fait cela; il faut lui pardonner.	என்மகன் அப்படி செய்தான், அவனை மன்னிக்க வேணும்.
Il y a des taches partout.	அது எங்குங்கறையா யிருக்குது.

Pour les faire passer, il faudrait pour trois caches de savon et un citron.	அதுகளைப் போக்குகிறதற்கு மூன்றுசாக்கு சவுக்காரமும் ஒரு எலுமிச்சம்பழமும் வேண்டியது.
Quel salaire faut-il donner au blanchisseur?	வண்ணானுக்கு என்ன கூலி கொடுக்கவேணும்?
C'est l'usage de lui donner une demi-roupie par mois.	மாசமாசம் அவனுக்கு அரைரூபாய் கொடுக்கிறது வழக்கம்.

PARAGRAPHE VI. ௬-ம். பிரிவு.

Le barbier. அம்பட்டன்.

Dis au barbier de venir.	அம்பட்டனை வரச் சொல்லு.
Le voici qui vient.	இதோ வருகிறான்.
Il faut me raser.	எனக்குச் சவரஞ் செய்யவேணும்.
Monsieur, je suis à vos ordres.	ஐயா, உமதுகட்டளைசெய்யக் காத்திருக்கிறேன்.
Tu ne m'as pas bien fait la barbe.	நீயெனக்கு முகச்சவரஞ்சரியாய்ப்பண்ணினதில்லை.
Aujourd'hui, je n'ai pas un bon rasoir.	இன்று எனக்கு நல்லகத்தியில்லை.
Pourquoi n'as-tu pas pris un bon rasoir?	நல்லகத்தியை ஏன் எடுக்கவில்லை?
Il est chez moi, je l'ai oublié.	அது வீட்டிலே யிருக்குது. அதைமறந்துவிட்டேன்.
Il faut repasser celui-ci.	இதைச் சாணைபிடிக்கவேணும்.
Je le repasserai aujourd'hui même.	இன்றுதான் இதைச் சாணைபிடிப்பேன்.
Mais qu'as-tu fait? tu m'as blessé au visage; le sang vient.	ஆனால் என்ன செய்தாய்? என்னை முகத்திலே காயம்படுத்தினாய், இரத்தம்வருகுது.
Oh! ce n'est rien, monsieur, c'est un bouton que j'ai coupé par mégarde.	ஓஓ அய்யா, அதொன்றுமல்ல, நான்தெரியாமல் அறுத்தது ஒருபருவாம்.

Peut-on couper ainsi les boutons? ne dois-tu pas faire attention?	அப்படி பருவை அறுக்கலாமோ? நீ எச்சரிக்கையாயிருக்கவேண்டாமோ?
J'en aurai davantage à l'avenir.	இனி அதிக எச்சரிக்கையாயிருப்பேன்.
Il faut me couper les cheveux.	எனக்குத்தலைமயிர் கத்தரிக்கவேணும்.
Je le veux bien.	எனக்கு மனசுதான்.
As-tu un peigne et des ciseaux?	உனக்குச் சீப்புங் கத்திரிக்கோலுமுண்டோ?
J'en ai, et de bons.	உண்டு, அதுகளும் நல்லதுகள்.
Il faut les couper également partout, et ni trop courts ni trop longs.	அதுகளை எங்கும் ஒருமிட்டாய்க் கத்தரிக்கவேணும், அதிககட்டையும் நெட்டையும் வேண்டாம்.
Je les couperai ainsi.	அப்படியே கத்திரிப்பேன்.
Tout en faisant ton travail, tu ne contes pas les nouvelles de la ville, comme le font d'ordinaire les barbiers.	உன் வேலை செய்யக்கொள்ள அம்பட்டர் வழக்கமாய்ச் சொல்லுகிறதுபோலே ஊர்ச் செய்திகளை நீ சொல்லுகிறதில்லை.
Aujourd'hui il n'y a pas de nouvelles importantes.	இன்றைக்குப்பெரிதான செய்திகளில்லை.
Il faut aussi me couper les ongles des mains et des pieds.	என் கைகால் நகங்களையும் வாங்கவேணும்.
C'est vrai, car ils sont bien longs.	அது மெய்தான், ஏனெனில் அதுகள்மிகவும் வளர்ந்திருக்கின்றது.
Oublies-tu le cérumen des oreilles?	காதுகளின் குறும்பியை மறக்கிறாயோ?
Je vais aussi l'ôter.	அதையும் வாங்கப் போகிறேன்.

PARAGRAPHE VII. ௭-ம். பிரிவு.

Le palefrenier. குதிரைக்காரன்.

Je vais me mettre en route, prépare le cheval.	இப்போது பயணமாய்ப் போவேன், குதிரையை முஸ்தி

ப்புபண்ணு.

Il n'a pas encore fini de manger ses lentilles.
அது இன்னங் கொள்ளுதின்று முடிக்கவில்லை.

En attendant mets la selle et le tapis.
அதற்குள்ளாகச் சேணியுஞ் சமுக்காளமும் போடு.

Le tapis a disparu.
சமுக்காளங் காணமற்போச்சுது.

Détache le cheval et amène-le; je veux monter.
குதிரையை அவிழ்த்துப் பிடித்துவா. நான் ஏறவேணும்.

Je mets la bride et je vous amène le cheval.
இலகாம்போட்டுக் குதிரையைக்கூட்டிக்கொண்டு வருகிறேன்.

Cette courroie est rompue; porte-la vite au Sakili, pour la faire coudre.
இந்தவார் அறுந்துபோச்சுது. சீக்கிரம் அதைத்தைக்கச் சக்கிலியனுக்குக் கொண்டுபோ.

En voici une autre qui est bonne.
இதோ நல்லதாகிய வேறொன்று இருக்குது.

Tu n'as pas assez serré la sangle.
நீ சேணிப் பட்டையைச் சரியாயிறுகக்கட்டவில்லை.

Je vais la serrer d'avantage.
அதை அதிகமா யிறுக்கிக் கட்டுகிறேன்.

L'étrier est trop bas.
அங்கவடி அதிகதாழ்த்தியா யிருக்குது.

Faut-il l'exhausser de quatre trous?
நாலுபொத்தலாய் அதை உசத்தவேணுமோ?

Maintenant l'étrier est trop haut; il faut l'abaisser de deux trous.
இப்போது அங்கவடி அதிக உசத்தியாய்ப் போச்சுது, இரண்டு பொத்தலாய் அதைத் தாழ்த்தவேணும்.

Est-il juste maintenant?
இப்போது சரியா யிருக்குதா?

Oui; suis-moi, je vais aller au galop.
ஆம், என்னைப் பின்செல்லு முழுவோட்டமாய்ப் போவேன்.

Si vous allez au galop, je ne pourrai pas vous suivre; je le pourrais si vous n'al-
நீர் முழு வோட்டமாய்ப் போனால் உம்மைப் பின்செல்ல என்னாலேகூடாது, சிறு

liez qu'au trot.	வோட்டமாய்ப்போனால் கூடும்.
j'irai peu de temps au trot; ensuite je n'irai qu'au pas.	கொஞ்சநேரஞ் சிறுவோட்டமாய்ப் போய்ப் பின்னும் வெறும் நடையாய்ப் போவேன்.
Bien, monsieur.	நல்லது ஐயா.
Prens le cheval, je veux descendre.	குதிரையைப்பிடி, நான் இறங்கவேணும்.
Le cheval est en nage.	குதிரைக்கு மிகவும் வேர்க்குது.
Ote la selle, et proméne un peu le cheval.	சேணிகழற்றிக் குதிரையைக்கொஞ்சம் உலாத்து.
Attache les pieds du cheval, et laisse-le paitre.	குதிரையைக் கால்கட்டிமேயவிடு.
Quand on laisse paitre ce cheval, il s'en va çà et là, et il est difficile de le retrouver.	இந்தக் குதிரையை மேயவிட்டால் அங்கங்கே போகுது, பின்னும் அது அகப்படுகிறது வருத்தம்.
Puisqu'il en est ainsi, attache-le à un arbre et donne lui de l'herbe.	இப்படியாகையால் அதையொருமரத்தில் கட்டி அதற்குப்புல்லுபோடு.
C'est ce que je fais.	அப்படியே செய்கிறேன்.
As-tu mené boire le cheval?	குதிரைக்குத்தண்ணீர் காட்டப்போனியா?
Le cheval a bu, il y a peu de temps.	சற்றுநேரத்துக்கு முன்னே குதிரைதண்ணீர்குடித்தது.
As-tu bien frotté le cheval?	குதிரையைநன்றாய்த் தேய்த்தியா?
Je le frotte tous les jours deux fois.	நித்தம் இரண்டுவேளை அதைத்தேய்க்கிறேன்.
L'as-tu étrillé ou l'as-tu frotté seulement avec la main?	அதற்குக் குராப்பமிட்டியா அல்லது கையினாலே மாத்திரமதைத்தேய்த்தியா?
Je l'ai frotté et étrillé.	அதைத்தேய்த்துங் குராப்பமிட்டுமிருக்கிறேன்.
Il faut parfois baigner le cheval.	சிலவேளைகுதிரையைக்குளிப்பாட்டவேணும்.

Je le baigne toutes les semaines. — வாரந்தோறுமதைக் குளிப்பாட்டுகிறேன்.

Tu ne dois pas monter sur le cheval et le faire courir. — நீ குதிரைமேலே ஏறிஅதையோட்டவேண்டாம்.

C'est bien rare que je le fasse. — நான் அப்படி செய்கிறது மெத்தவும் அருமை.

Tu dois toujours le conduire par le licou. — எப்போதுங்கழுத்துக்கயிற்றைப் பிடித்து அதை நடத்தக்கடவாய்.

As-tu fait cuire des lentilles pour le cheval? — குதிரைக்குக்கொள்ளு வேவித்தியா?

Elles sont bien cuites. — அது நன்றாய் வெந்திருக்குது.

En voyage, il faut que tu portes toujours du collou cuit pour une fois. — பயணத்தில் நீயெப்போதும்ஒருவேளைக்குவேவித்தகொள்ளு கட்டிக்கொண்டுவரவேணும்.

C'est ma coutume; de plus il faut avoir deux mesures de lentilles crues. — அது எனக்கு வழக்கமாயிற்று, மேலும் இரண்டுபடிபச்சைக்கொள்ளு கொண்டிருக்கவேண்டியது.

Quand le collou est cuit, il faut l'étendre sur une vieille natte, pour qu'il se refroidisse. — கொள்ளுவெந்தபிறகு ஆறிப்போகும்படிக்கு ஒரு பழம்பாயின்மேல் அதைப் பரப்பவேணும்.

Oui, monsieur, car c'est seulement lorsqu'il est refroidi qu'il faut le mettre dans le sac et le donner au cheval. — ஆம் ஐயா, ஏனெனில் அது ஆறினபிற்பாடுமாத்திரமே அதைத் தோற்பையிலேவைத்துக்குதிரைக்குக்கட்டவேணும்.

Il faut acheter un paquet d'herbe pour le cheval. — குதிரைக்கு ஓர்புல்லுக்கட்டு கொள்ளவேணும்.

En voici un paquet que l'on apporte; il coûte un ana. — இதோ ஓர்கட்டு கொண்டுவருகிறார்கள், அது ஒருஅணா பெறும்.

Dans le village où nous allons, il n'y a pas de marchands d'herbe; le palefre- — நாம்போகிற கிராமத்திலே புல்லுக்காரரில்லை, குதிரைக்காரன் தானே புல்லுக்குப்

nier doit lui-même aller à l'herbe.

போகவேணும்.

Pour couper de l'herbe, il me faut une pioche à cette fin.

புல்லுவெட்டுகிறதற்கு எனக்கு ஒரு புற்செதுக்கி வேணும்.

Il faut chercher les endroits où il y a du chiendent, et après avoir coupé l'herbe, il faut bien la laver.

அறுகம்புல்லு இருக்கிறஇடங்களைத்தேடிப் புல்லுவெட்டினபின்பு அதை நன்றாய்க்கழுவவேணும்.

Oui, car la terre ferait mal au cheval.

ஆம், ஏனென்றால் மண்ணு குதிரைக்கு நோவுகொடுக்கும்.

Quand tu achetteras de l'herbe, il faut ouvrir le paquet, et en rejeter toutes les herbes, qui ne conviennent pas au cheval.

விலைக்குப் புல்லுவாங்கும்போது கட்டுஅவிழ்த்து அதிலேகுதிரைக்கு ஆகாத புல்லெல்லாந் தள்ளிவிடவேணும்.

C'est ce que je fais habituellement.

வழக்கமாய் அப்படியேசெய்கிறேன்.

Le cheval n'a plus de fers; il faut le conduire à la ville pour le faire ferrer.

குதிரைக்கு லாடமில்லையே, அதுக்குலாடங்கட்டுவிப்பதற்கு அதைப் பட்டணத்துக்குக் கூட்டிக்கொண்டு போகவேணும்.

J'irai quand vous voudrez.

உமக்குச்சித்தமானபோது போரவேன்.

Que donne-t-on au maréchal pour quatre fers et vingt-quatre clous, et pour les poser?

நாலுலாடத்துக்கும் இருபத்துநாலு ஆணிகளுக்கும் அதுகளைப்போடுவதற்கும் லாடக்காரனுக்கு என்னகொடுக்கிறது?

L'usage est de donner une roupie.

ஒருரூபாய் கொடுக்கிறது வழக்கம்.

Le palefrenier doit toujours veiller sur le cheval pendant qu'on le ferre.

குதிரைக்கு லாடங் கட்டும்போது குதிரைக்காரன் அதின்பேரில் எப்போதுங் கண்காணிப்பாயிருக்கவேணும்.

Oui, car si on le ferrait mal, le cheval boiterait.

ஆம், ஏனென்றால் வித்தியாசமாயிலாடங்கட்டுவார்களேயாகில் குதிரைநொண்டும்.

Ce cheval est malade; il faut lui donner le remède dit massâlé.	இந்தக்குதிரை வியாதியாயிருக்குது, அதுக்குமசாலைகொடுக்கவேணும்.
Le cheval serait bien si chaque mois on lui en donnait.	மாசாமாசம் குதிரைக்கு மசாலைகொடுத்தால் அதுசவுக்கியமாயிருக்கும்.

PARAGRAPHE VIII. — அ-ம். பிரிவு.

Manière d'indiquer l'heure. — மணிநேரங்குறிக்கும்வகை.

Quelle heure est-il maintenant?	இப்போ எத்தனைமணி?
Il est six heures, six heures un quart, six heures et demie, ou six heures trois quarts.	ஆறுமணி, ஆறேகால்மணி, ஆறரைமணி, அல்லது ஆறேமுக்கால்மணி.
Non, il est cinq heures moins dix minutes.	அப்படியல்ல, பத்துமினுத்துக்குறைய அஞ்சுமணியாச்சுது.
A quelle heure doit venir ton frère cadet?	உன்தம்பி எத்தனைமணிக்கு வரவிருக்கிறான்.
Il viendra à neuf heures cinq minutes.	ஒன்பதுமணிக்குமேல் ஐந்துமினுத்து ஆகிறபோது வருவான்.
Quelle heure était-il quand tu es sorti hier?	நேத்து நீபுறப்பட்டபோது எத்தனை மணியிருந்தது?
Il était midi et demi.	மத்தியானத்துக்குமேலே அரைமணியிருந்தது.
Demain il faut venir à une heure ou deux après midi.	நாளைக்கு மத்தியானத்துக்குமேல் ஒன்று அல்லது இரண்டுமணிக்கு வரவேணும்.
Ne puis-je pas venir de grand matin ou le soir avant le coucher du soleil?	நான் அதிகாலமே அல்லது சாயந்திரஞ் சூரியன் அஸ்தமிக்கிறதுக்கு முன்னே வரக்கூடாதோ?
Connais-tu cet homme?	இந்தமனுஷனை அறிவாயோ?
Oui, c'est un importun: il est venu pendant le jour,	ஆம், அவன் அலட்டுக்காரன், பகலிலேயும் இராத்திரி

pendant la nuit, et même à minuit, puis au chant du coq.

யிலேயும் நடுச் சாமத்திலேயும் முதலாய்ப் பின்னுஞ்சாவல் கூவுகிற நேரத்திலேயும் வந்தான்.

Dans ce temps ci tout est bien cher.

இக்காலத்தில் சகலமும் மெத்தவும் கிராக்கியா யிருக்குது.

Oui. Il faut travailler jour et nuit pour vivre.

ஆம். பிழைப்பதற்கு இரவும்பகலும் வேலை செய்யவேணும்.

N'avez-vous pas un voyage à faire?

நீர் பயணமாய்ப்போக விருக்கிறீரல்லவோ?

Oui, demain je me lèverai et je me mettrai en route au chant du coq.

ஆம், நாளைக்குக் கோழி கூவுகிற நேரத்திலே யெழுந்திருந்து பயணப்படுவேன்.

Et vous, quand vous êtes-vous mis en route?

நீரும் எப்போ புறப் பட்டீர்?

Je suis parti au point du jour.

விடியற்காலமாகிறபோது புறப்பட்டேன்.

A quelle heure vous êtes-vous arrêté pour déjeûner?

பழையது சாப்பிட எத்தனை மணிக்குத் தங்கினீர்?

Lorsque le soleil était à la hauteur d'un palmier.

சூரியன் ஒருபனைமர உசரத்துக்கு வந்திருக்கிறபோது.

Quand repartez-vous?

மறுபடி எப்போ புறப்படுகிறீர்?

Lorsque l'aurore commencera à poindre.

பொழுது பலபலவென்று விடியத் துவக்கும்போது.

A quel moment ton père est-il parti?

எந்தநேரத்திலே உன்தகப்பனார் புறப்பட்டுப் போனார்?

Au moment où l'on détache les bœufs; lorsque le soleil était à telle hauteur.

மாடுகளை அவிழ்த்து விடுகிறபோது; சூரியன் இம்மாத்திரம் உயர்ந் திருக்கிறபோது.

Quand doit-il revenir?

மறுபடியெப்போ வருவார்?

Au moment où l'on mange ou lorsqu'on allume les lampes.

சோற்றுநேரத்திலே அல்லது விளக்கு ஏற்றுகிறநேரத்திலே வருவார்.

PARAGRAPHE IX. *Les voyages.*	கூ-ம். பிரிவு. பயணங்கள்.
Quand devez-vous partir?	எப்போபுறப்பட விருக்கிறீர்?
Demain à quatre heures du matin.	நாளைகாலமே நாலுமணிக்குப்புறப்படுவேன்.
Comment voyagerez-vous?	எப்படிபயணஞ் செய்வீர்?
A cheval.	குதிரையேறிப் போவேன்.
Combien de gens vous faut-il pour porter vos bagages?	உமது சாமான்களைக்கொண்டுபோக எத்தனை ஆள்வேணும்?
Outre le panier du cuisinier, j'ai encore la charge de quatre hommes.	சுயம்பாகி பெட்டியல்லாமல் இன்னம் நாலுபேர் சுமையுண்டு.
Il faut donc cinq coulis ou porteurs.	ஆதலால் ஐந்து கூலிக்காரர் அல்லதுசுமையாட்கள்வேணும்.
Quel est le salaire qu'on donne à chaque porteur de bagages?	ஒவ்வொரு சுமையாளுக்குக்கொடுக்கிற கூலியென்ன?
Il est d'usage de donner un quart de roupie à chacun, pour chaque jour de voyage.	அந்தந்தப்பயணத் தினத்துக்காகஒவ்வொருத்தனுக்கு ஒவ்வோர்கால்ரூபாய்கொடுக்கிறதுவழக்கம்.
S'il en est ainsi, il en coûterait moins de prendre une charrette.	இப்படியாகில் ஒருபண்டியையமர்த்துகிறது அவ்வளவுசெலவுபிடிக்காது.
Oui, certainement.	ஆம், அது நிச்சயம்.
Mais maintenant on ne trouvera pas de voiture, et une voiture ne peut suivre que les grands chemins.	ஆனால் இப்போதுபண்டி கிடையாது, மேலும் ஓர்பண்டி பெரிய பாதையிலே போகலாமொழியமற்றப்படியல்ல.
Alors nous prendrons des porteurs.	அப்படியிருக்கச் சுமையாட்களை அழைத்துக்கொள்ளுவோம்.
Combien de câdams fait-on par jour?	ஒருநாளைக்கு எத்தனை காதவழிபோவார்கள்?

C'est la coutume de faire deux câdams par jour.

நாளொன்றுக்கு இரண்டு காதவழிபோகிறதுவழக்கம்.

N'en peut-on pas faire davantage?

அதிக தூரமாய்ப் போகக்கூடாதோ?

Il est pénible et fatigant de faire trois câdams par jour.

ஒருநாளைக்கு மூன்றுகாதம்போகிறது பிரயாசமும் களைப்புக்கேதுவுமாமே.

On ne peut pas marcher durant la grande chaleur.

பெரியவெயில்நேரத்திலே நடக்கக்கூடாது.

Il faut toujours s'arrêter à neuf heures du matin, et se reposer sous l'ombrage d'un arbre touffu.

எப்போதும்ஒன்பதுமணிக்குக்காலமே இறங்கித்தங்கவும்அடர்ந்தமரத்தின் நிழலிலே இளைப்பாறவும்வேணும்.

Ensuite à quelle heure repart on?

பின்னும் எத்தனைமணிக்குத் திரும்பிப்புறப்படுகிறது?

Le soir à trois heures, il faut se remettre en route.

சாயந்திரம் மூன்றுமணிக்குத்திரும்பப்பயணப் படவேணும்.

Dans le village où nous allons y a-t-il des boutiques?

நாம்போகிற ஊரிலேகடைகளுண்டோ?

Il y en a quelques-unes.

அதிலேசிலதுகளுண்டு.

Peut - on y trouver à acheter tout ce qui est nécessaire pour manger?

சாப்பாட்டுக்கு வேண்டியதெல்லாம் அவ்விடத்தில் கிரயத்துக்கு அகப்படுமோ?

Je le crois; mais je n'en suis pas sûr.

அப்படிநினைக்கிறேன், ஆயினும் அது எனக்குநிச்சயமல்ல.

Il ne faut donc jamais être sans riz et autres provisions nécessaires.

ஆகையால் ஒருகாலும்அரிசிமுதலிய அவசரமான போசனவருக்கமில்லாமல் இருக்கலாகாது.

Pour n'être pas pris au dépourvu, il faut toujours porter les choses nécessaires au moins pour une fois.

திடீரென்று குறைபடாதபடிக்கு எப்போதும் ஒருவேளைக்காகிலும் அவசரமானதுகளைக்கொண்டுபோகவேணும்.

Oui, de cette façon on a toujours avec soi ce qui est nécessaire.

ஆம்,இவ்விதமாய்த்தனக்குவேண்டியதுகள் தன்னோடே எப்போதும் இருக்கும்.

Où allons-nous loger cette nuit?	இந்த இராத்திரி எங்கே தங்கப்போகிறோம்?
Dans le village que vous voyez à une lieue d'ici.	இதுக்கு ஒருகோசத்துலே விலேகாணுகிற அந்தஊரிலே தான்.
Dans le village où nous allons nous arrêter, y a-t-il une chauderie ou un bangalas?	நாம் தங்கப்போகிற ஊரிலே சத்திரம் அல்லது பங்கலாவுண்டோ?
Il y a une vieille chauderie et un nouveau bangalas.	அதிலே பழையசத்திரமுப்புதுப்பங்கலாவுமுண்டு.
Pourquoi nos gens s'arrêtent-ils maintenant?	இப்போது நம்முடையஆள்க்கள் ஏன் நின்று பேசுகிறார்கள்?
Monsieur, les porteurs ont la tête toute en feu; ils désirent déposer leur fardeau pour un peu de temps.	ஐயா சுமையாட்களுக்குத்தலைமிகவும்எரியுது. கொஞ்சநேரந் தங்கள் சுமையையிறக்க ஆசைப்படுகிறார்கள்.
Ont-ils la tête en feu? qu'ils déposent leur charge.	அவர்களுக்குத்தலை எரியுதோ? சுமை இறக்கட்டும்.
Quand ils se seront reposés, ils marcheront mieux.	அவர்கள் இளைப்பாறினபிறகு அதிக நேர்த்தியாய் நடப்பார்கள்.
C'est vrai; moi aussi je suis fatigué, j'ai le corps tout échauffé.	அது மெய்தான், நானுமிளைப்பாயிருக்கிறேன், என்னுடம்புக்குமெத்த வெப்பமுண்டு.
Reposez-vous aussi.	நீரும் இளைப்பாறும்.
On s'est assez reposé, il faut se rendre au bourg avant qu'il fasse nuit.	இளைப்பாறினது போதும், இருட்டிப்போகுமுன்னே ஊரிலேபோய்ச்சேரவேணும்.
Ils vont partir, ils lèvent et prennent leurs fardeaux.	புறப்படப்போகிறார்கள், தங்கள்சுமைகளைத் தூக்கியெடுக்கிறார்கள்.
Aide-leur à les prendre, soulève-les.	அதுகளை எடுக்க அவர்களுக்குதவிசெய், தூக்கிவிடு.
Prenez vos fardeaux et marchez.	உங்கள் சுமைகளையெடுத்துக்கொண்டு போங்கள்.
La route est bonne, nous	வழிநல்லது, எட்டி நடப்

marcherons vite.	போம்.
La nuit approche; il faut aller plus vite.	இரவு வருது. அதிகசீக்கிரம் போகவேணும்.
Connaissez - vous bien cette route?	இந்தவழி உங்களுக்குநன்றாய்த்தெரியுமோ?
Nous la connaissons un peu.	அது எங்களுக்குக் கொஞ்சந்தெரியும்.
Si vous ne la connaissez pas, il faut la demander.	அது உங்களுக்குத்தெரியாதானால் அதைக்கேட்கவேணும்.
Ceux à qui nous la demanderons, nous l'indiqueront, s'ils la connaissent.	அதைநாங்கள் ஆரைக்கேட்போமோ அவர்களுக்குத்தெரிந்திருந்தால் எங்களுக்குக்காட்டுவார்கள்.
Si nous venions à nous perdre dans ce bois, où irions-nous aboutir?	இந்தக்காட்டிலே நாம்வழிதப்பிப்போனால் எங்கேபோய்ச்சேருவோம்?
Nous serions bien embarrassés.	அது எங்களுக்குப் பெரிய தொந்தரவாயிருக்குமே.
Y a-t-il dans ce bois des animaux malfaisants?	இந்தக்காட்டிலே துஷ்டமிருகங்களுண்டோ?
Il y en a de diverses sortes, des tigres, des éléphants, des ours, des loups, des renards et toute sorte de serpents.	அதுகள் இதிலே பலவகையாயிருக்கும், புலிகள், யானைகள், கரடிகள், ஓநாய்கள், நரிகள் இதுகளும் பலவகைச்சர்ப்பங்களுமுண்டு.
Tout cela n'est pas fort plaisant.	இதெல்லாம் மிகவும் பிரியப்படாது.
Aussi faut-il en sortir le plus vite possible.	அதைப்பற்றி ஆனமட்டும் சீக்கிரத்தில் இவ்விடத்தினின்று புறப்படவேணும்.
Quel est le chemin qui conduit à Sâlem?	சேலத்துக்குப்போகிறவழியெது?
Quand vous serez un peu plus loin, il faut tourner au sud, puis au nord; les chemins qui vont à l'est et à l'ouest vont aboutir ailleurs.	கொஞ்சமதிகதூரம் போனபிறகு தெற்கேயின்னும் வடக்கேதிரும்பவேணும், கிழக்கேயுமேற்கேயும் போகிறவழி வேறிடத்திலே சேரும்.
Sommes-nous loin de la douane?	தீர்வைச்சாவடிக்குத் தூரமாயிருக்கிறோமோ?

Nous en sommes encore un peu éloignés.
அதுக்கு இன்னங் கொஞ்சதூரமாயிருக்கிறோம்.

Il faut payer les droits de diverses choses.
பல காரியத்துக்காகத் தீர்வைசெலுத்தவேணும்.

Quels sont les objets qui paient des droits?
தீர்வைகொடுக்கிற காரியங்களென்ன?

Le tabac, les toiles, les liqueurs etc.
புகையிலை, சேலைகள், சாராயங்கள் முதலியதுகள்.

Outre ces objets, en avez-vous quelqu'autre sujet à la douane?
இந்தக்காரியங்களையல்லாமல் தீர்வைகொடுக்கும்வேறேயெதாகிலும் உங்களுக்குண்டோ?

Non; il faut m'apporter le reçu de la douane et le permis de passer.
இல்லை, தீர்வைதீர்ந்தசீட்டும் இராதாரியும் எனக்குக் கொண்டுவரவேணும்.

Les voici; il faut les conserver avec soin; peut-être ils seront demandés sur la route.
இதுகளோவாம், இதுகளைப் பத்திரமாய் வைக்கவேணும், சிலவிசை இதுகள் வழியிலே கேட்கப்படும்.

Combien de câdams y a-t-il d'ici à Sâlem?
இதுக்குஞ்சேலத்துக்கும் எத்தனைகாதவழி?

Il y en a trois.
மூன்றுகாதமுண்டு.

Combien y a-t-il de milles de Pondichéry à Nilaghiri?
புதுச்சேரியிலேயிருந்து நீலகிரிவரைக்கும் எத்தனை நாழிவழி?

On dit qu'il y en a 260.
௨௱௬௰ - நாழி யுண்டென்றுசொல்லுகிறார்கள்.

Y a-t-il plus loin ou plus près de Pondichéry à Trichinapaly?
புதுச்சேரிக்குந் திரிசிராப்பள்ளிக்கும் அதிகதூரமோகிட்டவோ?

Trichinapaly n'est pas si loin.
திரிசிராப் பள்ளி அவ்வளவுதூரமல்ல.

Pour aller à Karikal on passe par Tranquebar, n'est-ce pas? N'y a-t-il pas d'autre route?
காரைக்காலுக்குப்போகத் தரங்கம்பாடியின் வழியாகப்போகிறார்களல்லவோ? வேறே வழியில்லையா?

Il y en a une autre à l'ouest de Tranquebar.
தரங்கம்பாடியின்மேற்கே வேறொன்றுண்டு.

Demain matin, il faut se lever à trois heures et se
நாளைக்கு மூன்றுமணிக்கு எழுந்திருந்து பயணப்பட

mettre en marche. — வேணும்.

En ce cas, il faut vite aller se coucher. — அப்படியானால் சீக்கிரம் போய்ப் படுக்கவேணும்.

Pour déjeûner demain matin, as-tu lié en paquet du riz cuit? — நாளைக்குப்பழைய சாப்பட்டுக்கட்டுசோறு கட்டிவைத்தியா?

Il est en paquet. — கட்டியாச்சுது.

Combien faut-il par jour de riz pour les porteurs? — சுமையாட்களுக்காக நாளொன்றுக்கு எம்மாத்திரம் அரிசிவேணும்?

Il faut leur en donner à chacun une mesure. — ஒவ்வொருத்தனுக்கு ஒருபடிகொடுக்கவேணும்.

L'endroit où nous nous arrêterons à midi pour faire la cuisine, sera-t-il commode? — நாம் மத்தியானத்துக்குச்சமையல்பண்ண இறங்குமிடம் வசதியாயிருக்குமோ?

Il est assez commode. — போதுமானமட்டும் வசதியாயிருக்குது.

Cet endroit est-il loin? combien est-il éloigné? combien y a-t-il d'ici là? — அந்த இடந் தூரமோ? எம்மாத்திரந் தூரமாயிருக்கும்? இதுக்கும் அதுக்கும் எத்தனை தூரம்?

Il y a la distance de deux postes. — இதுக்கும் அதுக்கும் இரண்டுதபாலுண்டு.

D'une poste à l'autre, combien y a-t-il de milles indiens? — ஒருதபால்முதல் வேறேதபால்வரைக்கும் எத்தனை நாழிவழி?

Environ six milles. — ஏறக்குறைய ஆறுநாழியிருக்கும்.

Combien faut-il donner d'anas, pour envoyer une lettre à Trichinapaly? — திரிசிராப் பள்ளிக்கு ஒருகாகிதத்தையனுப்ப எத்தனை அணாகொடுக்கிறது?

C'est six caches pour une simple lettre. — ஒற்றைக்காகிதத்துக்கு ஆறுகாசாகும்.

Dans l'endroit où nous nous arrêtons, y a-t-il quelque pièce d'eau? — நாம் இறங்குகிற தாவிலேயாதோர் குளமுண்டோ?

Oui, mais l'eau de ce réservoir est toute verte. — ஆம், ஆனால் அந்தக்குளத்துத்தண்ணீர் முழுதும் பச்சையாயிருக்குது.

N'y a-t il pas près d'ici — இதுக்குக்கிட்டயாதோர் ஏ

quelqu'étang?	கிடைக்கலையோ?
Non, monsieur, il n'y a qu'une petite mare.	இல்லை ஐயா, ஓர்சின்னகுட்டைமாத்திரமுண்டு.
Y a-t-il encore de l'eau dans cette mare, ou bien est-elle tarie?	அந்தக்குட்டையிலே தண்ணீர்இன்னம் இருக்குதா அல்லது வற்றிப்போச்சுதா?
L'eau en est toute bourbeuse.	அதின்தண்ணீர் முழுதுஞ் சேறுயிருக்குது.
Il faut la purifier avec le noyau de l'arbre strychnos; alors toute la boue tombera au fond du vase.	தேற்றாங் கொட்டையோடே அதனைத் தேற்ற வேணும். அப்போசேறெல்லாங் குடத்தின் அடியிலே இறங்கும்.
Un des coulis est tombé malade.	கூலிக்காரரிலொருவன் வியாதியாய் விழுந்திருக்கிறான்.
Alors il faut nécessairement louer une charrette.	அப்படியிருக்க அகத்தியமாய் ஒருவண்டியை அமர்த்தவேணும்.
Il y aurait eu du profit à la prendre dès le commencement du voyage.	பயணத்தின் துவக்கமுதல் அதை யமர்த்தியிருந்தால இலாபமாயிருக்கும்.
Oui, la dépense aurait été moindre.	ஆம், செலவுகுறைந்திருக்கும்.
Maintenant, cela va nous faire double dépense.	இப்போததுநமக்கு இரட்டிப்பானசெலவாகும்.
C'est vrai, mais il n'y a pas lieu de faire autrement.	அதுமெய்தான், ஆனால்வேறேவிதமாய்ச் செய்யஇடமில்லை.
Monsieur, on a trouvé une voiture.	ஐயா ஒருபண்டியகப்பட்டது.
C'est bon, pour le louage, que demandera-t-on par câdam?	நல்லது வாடகைக்கு அந்தந்தக்காதவழிக்கு என்னகேட்பார்கள்?
Une demi-roupie.	அரைரூபாய் கேட்பார்கள்.
J'y consens, mais ce bœuf est boiteux; il faut en amener un autre.	அதுக்குச்சம்மதிக்கிறேன், ஆனால் அந்தமாடு கால்நொண்டியாயிருக்குது, வேறொன்றைக் கூட்டிக்கொண்டுவரவேணும்.
Oui, car cela embarrasse-	ஆம், ஏனென்றால் அதுவழி

rait fort en route.
யிலே மெத்தவுந் தொந்தரவு கொடுக்கும்.

Va me changer cette roupie.
இத்தரூபாய் மாற்றப்போ.

Il semble qu'elle ne vaut rien;elle ne sonne pas
அது செல்லாததுபோலே காணுது, சத்திக்காது.

On a pris deux caches d'escompte pour la changer.
அதைமாற்றுகிறதுக்கு இரண்டுகாசு வட்டம் எடுத்துக்கொண்டார்கள்.

Va me changer aussi cette roupie, rapporte-moi la moitié en liards ou en sous et le reste en fanons.
இந்தவேறேரூபாயும் போய் மாற்றி அதிலே பாதி காசு அல்லது துட்டு ஆகவுஞ் சொச்சம்பணமாகவுங் கொண்டுவா.

Les voleurs sont-ils à craindre dans la route que nous tenons?
நாம்போகிறவழியிலே திருடர்பயம்உண்டோ?

Ils le sont. Il y a trois jours qu'un gentilhomme a été volé.
உண்டு, மூன்றுநாளுக்குமுன்னே ஒருதுரைகொள்ளையிடப்பட்டான்.

Comment s'appelle le village où nous allons?
நாம்போகிறஊருக்குப்பேரென்ன?

J'en ai oublié le nom.
அதின்பேரை மறந்துபோனேன்.

Est-ce un grand bourg ou un petit village?
அது பெரியவூரா சின்னகிராமமா?

C'est un gros bourg, où il y a un dasildar et une catchérie.
அது, பெரியவூர்தான் அதிலேதாசில்தாரும் கச்சேரியுமுண்டு.

Comment s'appelle la province et le district où nous sommes maintenant?
நாம் இப்போஇருக்கிறநாட்டுக்குஞ் சில்லாவுக்கும் பேர் என்ன?

Nous sommes dans la province du Baramal et le district d'Ousour.
பரமால்நாட்டிலும் ஊசூர்ச்சில்லாவிலு மிருக்கிறோம்.

Combien avons-nous de rivières à passer?
நாம்எத்தனை ஆறுகளைக் கடக்கவேணும்?

Il y en a trois; mais il n'y a que la première qui
மூன்று ஆறுண்டு, ஆனால் முதல் ஆற்றுக்குமாத்திரங்க

ait un pont de pierre ou de bois.

ல் அல்லது மரப்பாலம் உண்டு.

Et comment passe-t-on les autres?

மற்றதுகளை எப்படி கடக்கிறார்கள்.

A la seconde rivière, il y a un grand bac, sur lequel passent les hommes, les chevaux et les charrettes; on passe l'autre rivière dans une grande corbeille couverte de peaux, nommée parisou, ou sur un radeau supporté par des cruches.

இரண்டாம் ஆற்றிலே பெரிய தோணி உண்டு, அதிலே மனுஷர்களும் குதிரைகளும் வண்டில்களும் ஏறிப்போகுது. வேறே ஆற்றைத் தோல்மூடிய பரிசென்னும் பெரிய கூடையிலாவது பானைகள்தாங்கிய ஓர்தெப்பத்திலாவது கடக்கிறார்கள்.

Comment fait-on?

எப்படி செய்கிறார்கள்?

Il faut descendre tous les objets de la charrette, puis en démonter les roues, et ensuite mettre la charrette et les bagages dans le parisou ou sur le radeau: on fait passer les chevaux et les bœufs à la nage.

சகலசாமான்களையும் இறக்கவும் வண்டியின் சக்கரங்களைக் கழற்றவும் பின்னும்பரிசிலல்லது தெப்பத்தில்வண்டியையுஞ்சாமான்களையும் ஏற்றவும்வேணும். குதிரைகளும் மாடுகளும் நீஞ்சிக்கடக்கும்படி செய்வார்கள்.

Tout cela doit être très-long et très-ennuyant.

இதெல்லாம் வெகுநேரம் பிடித்து மிகுந்த தொந்தரவு கொடுக்கும்.

Voici deux routes: l'une est bonne, mais a de longs circuits; l'autre est directe, mais inégale.

இதோ இரண்டுவழி யுண்டு. அதுகளில்நல்லதாகிய ஒன்று நெடுஞ்சுற்றுள்ளது, மற்றொன்று செவ்வையானாலுங் கரடுமுரடாம்.

Il faut prendre la route sans circuit; qu'il y ait des buttes et des creux, c'est égal; je ne veux pas de détours.

சுற்றில்லாத வழியாய்ப் போகவேணும். அது மேடுபள்ளமாயிருந்தாலுஞ்சரி, சுற்று வேண்டாம்.

Elle est plus courte, c'est vrai, mais elle est difficile.

அது அதிக சுருக்கமுள்ளது மெய்தான், ஆயினும் வருத்தமுள்ளதாம்.

N'importe, je veux le chemin le plus droit et le plus court.
பறவாயில்லை. அதிகநேரஞ் சுறுக்குமானவழி எனக்குவேணும்.

Quelle est cette maison que je vois - là?
அங்கேதான்பார்க்கிறவீடு என்னை?

C'est le bangalas du collecteur.
அது தண்டலதிகாரி (கல்க்கட்டேர்) துரையின் பங்களாதான்.

Il faut que je le voie.
நான் அவரைக்கண்டுபேசவேணும்.


J'irai avec vous.
உம்மோடேபோவேன்.

Monsieur est-il ici?
துரை இங்கேயிருக்கிறாரா?

Il est en haut.
மேல்மெத்தையிலிருக்கிறார்.

Quel est celui qui vient au-devant de nous?
நமக்குஎதிரேவருகிறவனார்?

C'est le gentilhomme accompagné de deux de ses pions.
துரைதான் தமது சேவகரில் இரண்டுபேரோடேவருகிறார்.



PARAGRAPHE X. ௰-ம். பிரிவு.

La chasse. வேட்டை.

Bottleur, demain je vais à la chasse avec quatre autres gentilshommes.
உக்கிராணக்காரா நாளைக்குவேறேநாலுதுரைகளோடே வேட்டைக்குப் போகிறேன்.

A quelle heure reviendrez-vous?
எத்தனைமணிக்குத் திரும்பிவருவீர்கள்?

Nous reviendrons à cinq heures du soir pour diner.
பகலசனத்துக்குச் சாயந்திரம் அஞ்சுமணிக்குத் திரும்பிவருவோம்.

A quelle heure partez-vous.
எத்தனைமணிக்குப் புறப்படுகிறீர்கள்?

De bon matin, au chant du coq.
அதிகாலமே சாவற்கூவுகிறநேரத்திலேதானே.

Que prendrez-vous alors?
அப்போது நீங்கள் சாப்பிடுவதென்ன?

Des biscottes, du café au lait, et quelque boisson fortifiante.	பிஸ்கோத்தும் பாலோடே கோப்பித்தண்ணீரும் பலன்கொடுக்கிறவாதோர் பானமுஞ்சாப்பிடுவோம்.
Où déjeûnerez-vous?	காலையசனம் எங்கே பண்ணுவீர்கள்?
Dans la forêt, au bord de quelqu'étang, ou sous un arbre.	காட்டிலேயாதோர்குளத்தங்கரையிலாவது ஓர்மரத்தின்கீழேயாவது பண்ணுவோம்.
Que faut - il vous envoyer pour votre déjeûner?	உங்கள் காலையசனத்துக்கு உங்களுக்கு அனுப்பவேண்டியதென்ன?
Un jambon d'Europe, du fromage, du beurre frais, des raisins secs, des fruits, les boissons nécessaires, et des vivres pour nos gens.	சீமை வற்றற் பன்றித்தொடையும் பாற்கட்டியும்வெண்ணெயும் காய்ந்ததிராட்சங்களும்பழங்களும் வேண்டியபானங்களும்எங்கள்சனங்களுக்குஉணவுகளும் அனுப்பவேணும்.
J'enverrai tout cela avec vous.	உங்களோடேகூட இதெல்லாம் அனுப்புவேன்.
N'oublie pas de mettre des couteaux, des fourchettes, des verres et tout ce qui est nécessaire.	மேசைக்கத்திகளையும் முள்ளுகளையும் கிளாசுகளையும் அவசரமானதெல்லாவற்றையும் வைக்கமறவாதே.
Je n'y manquerai pas.	அதுக்குத்தப்பமாட்டேன்.
Et pour le diner, que faut-il vous préparer?	பின்னும்பகலசனத்துக்கு உங்களுக்கு என்னமுஸ்திப்புபண்ணவேண்டியது?
Prépare-nous un petit festin; car nous sommes cinq et nous serons fort affamés.	ஓர்சின்னவிருந்து முஸ்திப்புபண்ணு, ஏனெனில் ஐவராயிருக்கிறோமேயல்லாமல் மிகவும் பசித்திருப்போம்.
Et bien! Il est temps de partir. Êtes - vous bien lestés?	ஒகோ! புறப்படநேரமாயிற்று, நன்றாய் அடிப்பாரம் போட்டீர்களா? (நன்றாய்ச் சாப்பிட்டீர்களா)?
Oui, nous sommes prêts.	ஆம், முஸ்திப்பாயிருக்கிறோம்.
Les chevaux, les chiens	குதிரைகளும் வேட்டைநா

de chasse, les piqueurs, tous les autres gens sont-ils prêts? — ய்களுமல்லாமல் அதுகளைத் தூண்டுகிறவர்களும் மற்றஆள்களெல்லாரும் அசிராயிருக்கிறார்களோ?

Oui, monsieur. — ஆம் ஐயா.

Allons, partons. Le temps est frais et le ciel serein. — புறப்பட்டுப் போவோமாக. ஆகாசங் குளுத்தியும்வானந் தெளிவுமாமே.

Les bois étant près d'ici, nous y serons bientôt. — காடுகளிதுக்குக்கிட்டவிருப்பதால் சீக்கிரத்தில் அதுகளிலேசேர்ந்திருப்போம்.

Ces bois sont vastes et touffus en quelques endroits. — இந்தக்காடுகள்விஸ்தாரமுஞ் சிலவிடத்தில்அடர்த்தியுமாயிருக்கின்றது.

Y a-t-il des animaux féroces? — அதுகளில் துஷ்டமிருகங்களுண்டோ?

Il y en a quelques-uns. — சிலதுகளுண்டு.

Il faut donc être sur ses gardes. — ஆதலால் எச்சரிக்கையாயிருக்கவேணும்.

Oh! il n'y a pas à craindre; nous sommes en grand nombre. — ஓகோபயப்படவிடமில்லை; வெகுபேராயிருக்கிறோம்.

Quels beaux arbres il y a dans ce bois! — இந்தக்காட்டில் எப்படிப்பட்ட நேத்தியான மரங்களுண்டு.

Voyez ce chacal qui emporte une poule sauvage. — ஓர் காட்டுக் கோழியைக் கொண்டு போகிற அந்தநரியைப்பாருங்கள்.

Oh, l'animal voleur! il faut qu'il rende la poule; je le tire. — ஓகோஅதுதிருட்டுமிருகம்! அந்தக்கோழியை உத்தரிக்கக்கடவது. அதைச் சுடுகிறேன்.

C'est bien dommage; il était déjà trop loin, le coup n'a pas porté. — இதுஅரதிஷ்டமாம், அது முன்னமே அதிகதூரமாயிருந்தது, குண்டுஎட்டாதேபோச்சுது.

Ah! voyez ce loup qui s'enfuit à notre approche. — ஆ! நாம்வருகிறதைக்கண்டு ஓடிப்போகிற இந்த ஓநாயைப்பாரும்.

Ne voyez-vous pas qu'il — ஓராட்டுக்குட்டியைக்கொ

emporte un agneau?	ண்டுபோகுதென்று நீர்பார்க்கவில்லையா?
Tirez-le, il est à moins d'une portée de fusil.	அதைச்சுடும், துப்பாக்கிவெட்டுத் தொலைவுக்குட் பட்டிருக்குது.
Il me semble l'avoir blessé.	அதைக் காயப் படுத்தினேனென்று எனக்குத்தோற்றுது.
Oui, mais il ne s'en sauve pas moins avec sa proie.	ஆம், ஆயினுங் குறையின்றித் தன் இரையோடே ஓடிப்போகுது.
Ah! Voyez ces deux chevreuils qui gambadent et folâtrent ensemble.	ஆ! அக்கூடத் துள்ளியாடு[illegible] இரண்டு வெள்ளாட்டுக் குட்டிகளைப்பாருங்கள்.
Voilà une belle proie: ne faites pas de bruit, restez là; je vais approcher doucement derrière les buissons et les tirer à portée.	இது நல்ல இரை, சந்தடி பண்ணாதேயுங்கள், அங்கேயிருங்கள். நான் புதர்களுக்குப்பின் மெள்ள அணுகிப்போய் எட்டின தூலையில் அதுகளைச் சுடுவேன்.
Un des deux chevreuils a attrapé du plomb dans la queue et s'est sauvé en l'agitant; l'explosion a fait sauver l'autre.	இரண்டு வெள்ளாட்டுகளில் ஒன்று வாலில் குண்டுபட்டு அதையாட்டி ஓடிப்போயிற்று. மற்றொன்றை வெடியே ஓட்டிவித்தது.
C'est bien dommage.	அது மிகு நஷ்டம்.
Mais, voici une belle occasion de nous dédommager; voyez cette troupe de paons.	ஆனால் நஷ்டப் பரிகாரஞ் செய்ய இதோ நல்லசமயம். இந்த மயிற்கூட்டத்தைப் பாருங்கள்.
Allons, nous de ce coté-ci, et vous de ce coté-là, et cernons-les; nous tirerons tous ensemble et nous en tuerons infailliblement.	நீங்கள் அப் பக்கத்திலும் நாங்கள் இப் பக்கத்திலும் போய் அதுகளைச் சூழுவோமாக. ஒருமிக்கச்சுட்டுத் தப்பாமற் சிலதுகளைக் கொன்றுபோடுவோம்.
Hélas! je suis blessé, j'ai attrapé deux grains de plomb dans le bras.	ஐயோ! காயம்பட்டேன், இரண்டு இரவை என்கையிலேபட்டது.
C'est un accident fa-	இது துரிதமான துரதிஷ்

cheux. Toutefois nous avons le plaisir d'avoir abattu cinq paons.

டமகம். ஆயினும் ஐந்து மயில்களை விழ்த்தின சந்தோஷம் நமக்குண்டு.

Oui, mais vous auriez bien pu me tuer aussi. Peut-on tirer ainsi les uns sur les autres?

ஆம், ஆனால் என்னையுங் கொன்றுபோடக் கூடுமாயிருந்தது. அப்படி ஒவ்வொருத்தர் ஒவ்வொருத்தரை நோக்கிச் சுடலாமோ?

Mais entendez-vous ces cris répétés?

ஆனால் இரட்டித்த இந்தக் கூக்குரல்களைக் கேட்கிறீர்களோ?

C'est un sanglier que nos gens et nos chiens dirigent de notre côté.

நம்முடைய சனங்களும் நாய்களும் நமது புறமாய் ஓட்டிவருகிற காட்டுப்பன்றியாம்.

Ah! voilà une belle occasion de montrer son habileté.

ஆ! தன் சாமர்த்தியத்தைக் காட்ட இதுவே நல்ல சமயம்.

Oh! quel danger vient de courir un de nos compagnons!

ஓ! நம்முடைய தோழரில் ஒருவன் எப்படிப்பட்ட ஆபத்திற்குள்ளானான்!

Comment cela?

அதெப்படி?

Il a tiré, et blessé légèrement le sanglier par-devant; alors l'animal furieux venait pour se jeter sur lui, lorsque deux chiens l'ont saisi. Le sanglier s'est débattu avec eux et en a mis un en pièces. Pendant que l'autre le tenait, deux de nos gens profitant de l'occasion, l'ont percé de leurs lances et l'ont tué.

அவன் முன்புறத்திலே காட்டுப்பன்றியைச் சுட்டு இலேசாய்க் காயப்படுத்தினான்; அப்போது அம்மிருகங் கோபவெறியுற்று அவன்மேல் பாயவருகிறதருணத்தில் இரண்டு நாயதைக் கவ்விற்று. பன்றி அதுகளோடே போராடி அதுகளிலொன்றைப் பீறிற்று. மற்றொன்று அதைக் கவ்வியிருக்கிற சமயம்பார்த்து நமது சனங்களில் இரண்டுபேர் தங்களீட்டிகளாலதை யுருவிக்கொன்றுபோட்டார்கள்.

Notre compagnon l'a échappé belle?

நமது தோழன் நல்ல ஆபத்துக்குத் தப்பித்துக் கொண்டான்.

Ah! voici une autre aventure curieuse.

ஆ! இதோ மற்றோர் நூதனமான சங்கதி.

Qu'est-ce donc?

என்ன அது?

Là, près de ce teck, étant fatigué, je me mis à dire: voilà un tronc d'arbre, je vais m'asseoir un peu. Mais, mon compagnon le voyant bouger, m'a crié: arrêtez, arrêtez, c'est un serpent boa, et aussitôt nous avons tué ce hideux reptile.

அங்கே அந்தத் தேக்குமரத்தின் கிட்ட இளைப்பாயிருந்து இதோ ஓர் மரக்கட்டை, சற்று நேரம் அதின்மேல் உட்காருவேனென்று சொல்லத் துவக்கினேன். ஆனால் என தோழன் அதையசையப்பார்த்து நில்லும் நில்லும் அது மலைப்பாம்பென்று என்னை நோக்கிக் கூவினான். உடனே அந்த அவலக்ஷண சர்ப்பத்தை யடித்துப்போட்டோம்.

En voilà bien assez pour une matinée; allons-nous reposer un peu et prendre notre déjeûner.

ஓர்தினக்காலைக்கு இவ்வளவு போதுமே, சற்றுநேரம் இளைப்பாறவுங் காலையசனம் பண்ணவும் போவோமாக.

Il y a, à dix pas d'ici, un petit étang, dont l'eau paraît bonne; sur ses bords de beaux arbres nous donneront de l'ombre.

இதுக்குப்பத்தடித் தூரத்தில் ஓர்சின்ன குளமுண்டு. அதின் தண்ணீர் நல்லதாகத் தோன்றுது. அதின் கரையில் நேத்தியான மரங்கள் நமக்கு நிழலிடும்.

Eh bien! allons-y; venez, servez à déjeûner.

அப்படியிருக்க அங்கே போவோமாக, வாருங்கள். காலையசனம் பரிமாறுங்கள்.

Au lieu de fourchettes l'intendant a mis des cuillères.

காரியக்காரன் முள்ளுகளுக்குப்பதிலாய்க் கரண்டிகளை வைத்தான்.

Que faire à cela? Nous nous servirons de la fourchette du père Adam.

அதுக்குஎன்னசெய்கிறது? ஆதித்தகப்பன் முள்ளு (ஆகிய நமது கையை) உதவியாகக் கொள்ளுவோம்.

Que la faim est un bon cuisinier; jamais je n'ai mangé d'aussi bon cœur.

பசியானது எவ்வளவோ நல்லசுயம்பாகியாம். நானொருபோதும் அவ்வளவு தாற்பரியத்தோடே சாப்பிடவில்லை.

Ce jambon est excellent.

இந்தவற்றற் பன்றித் தொடைமெத்தவு நல்லது.

Le beurre, le fromage, les fruits sont aussi délicieux.

வெண்ணெயும் பாற்கட்டியும் பழங்களுங்கூட இனிய

	உருசிகரமாயிருக்குது.
Tout est bon quand on a faim.	பசியுற்றவனுக்குச் சகலவுணவும் நல்லதாம்.
Oh! voyez ces tourterelles vertes qui viennent nous provoquer.	ஓகோ! நம்மைத்தூண்டவருகிற இந்தப்பச்சைப்புறுக்களைப் பாருங்கள்.
Restez tranquilles; je vais en abattre quelques-unes.	சும்மாவிருங்கள், சிலதுகளைவீழ்த்தப்போகிறேன்.
Il en a réellement abattu trois.	உள்ளபடி அதுகளில்மூன்றுவீழ்த்தினார்.
En voilà d'une autre sorte sur cet arbre-là.	அந்தமரத்தில் மற்றோர்வகைப்புறுக்களுண்டு.
Allons en abattre aussi.	நாமும் அதுகளிற் சிலதுகளைவீழ்த்தப்போவோமாக.
Ah! prenez garde à ce serpent capelle, qui déploye sa tète et se dirige vers nous.	ஆஅ! தன்படத்தைவிரித்து நமக்குநேராய்வருகிறஇந்தநல்லபாம்பின் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள்.
Tenez, du coup je l'abats.	பாருங்கள், ஓர் வெடியினாலேயதைவீழ்த்துகிறேன்.
Il est réellement tombé, comme il se roule!	உள்ளபடியது விழுந்தது. அது எம்மாத்திரம்உருளுது!
Allons à la recherche des tourterelles, venez.	புறுக்களைத்தேடப்போவோமாக, வாருங்கள்.
En voilà une bande, tirons.	அதோ அங்கே ஓர்கும்பலுண்டு, சுடுவோமாக.
Il y en a quatre de tuées.	அதுகளில் நாலுபட்டது.
Mais quels cris se font entendre?	ஆனால் எப்படிப்பட்டகூக்குரல் கேட்கப்படுது?
O Dieu! un tigre emporte un de nos gens.	ஆசுவாமீ! ஓர்புலிநமது சனத்திலொருவனைக் கொண்டுபோகுது.
Il faut le tirer et le tuer.	அதைச் சுட்டுக்கொன்றுபோடவேணும்.
Tirez-le, car je crains de tuer l'homme qu'il emporte.	அது கொண்டுபோகிற மனுஷனைக்கொல்லப்பயப்படுகிறேன், ஆதலால் நீங்களேயதைச்சுடுங்கள்.
Il est blessé, il a jeté l'homme par terre; mais il vient se jeter sur nous.	அதுக்குக்காயம்பட்டது, கீழே ஆளைத்தள்ளிற்று. ஆனால் நமதுமேலே பாயவருது.

Vite, tirons deux autres coups	சீக்கிரம்வேறிரண்டுவெடி சுடுவோமாக.
Enfin le voilà par terre.	கடைசியாய் அது தரையிற் கிடக்குதே.
Oh! quel danger nous avons couru!	ஓகோ! எப்படிப்பட்ட ஆபத்துக்குட்பட்டிருந்தோம்!
Il faut vite soigner l'homme que le tigre avait saisi et emporttait.	புலிகவ்வியெடுத்திருந்த மனுஷனைச் சீக்கிரம் விசாரிக்கவேணும்.
Il n'est pas mort; mais il est bien blessé.	அவன்சாகவில்லை, ஆனால்மிகவுங் காயம்பட்டிருக்கிறான்.
Après avoir pansé ses plaies, il faut le mettre sur la charrette et l'emporter à la maison.	அவனுடைய காயங்களைக் கட்டினபின்பு பண்டியில் அவனையேற்றி வீட்டுக்குக்கொண்டுபோகவேணும்.
Je suis rassasié de la chasse. Je n'en veux plus à jamais. Il est temps aussi d'aller dîner.	எனக்குவேட்டையாசைதீர்ந்தது, இனிஎப்போதும் அது எனக்குவேண்டாம். பகலசனஞ்செய்யப்போகவும்நேரமாயிற்று.

PARAGRAPHE XI. — ௰௧-ம். பிரிவு.

Le festin. — விருந்து.

Cuisinier, allume vite le feu.	சுயம்பாகி, சீக்கிரம் நெருப்புகொளுத்து.
Il est allumé depuis longtemps.	வெகுநேரந்துவக்கி அது கொளுத்தியிருக்கின்றது.
Attise le feu, et fais promptement la cuisine.	நெருப்புமூட்டித் தீவிரமாய்ச் சமயல்பண்ணு.
Bien des choses sont déjà prêtes.	அநேகங்காரியங்கள் ஏற்கனவே முஸ்திப்பாயிருக்கின்றது.
Messieurs, reposez-vous un peu, tandis qu'on met la table.	துரைமாரே அசனமேசை போடப்படுகிறதற்குள்ளாகச் சற்றுநேரமிளைப்பாறுங்கள்.
Domestiques, préparez vite la table.	ஊழியரே அசனமேசையைச் சீக்கிரத்தில் முஸ்திப்புசெய்யுங்கள்.
Cette nappe est sale; met-	இந்தமேசைத்துப்பட்டி அ

tez-en une autre.	ழுக்கா யிருக்குதே, வேறொன்று போடுங்கள்.
A-t-on moulu le poivre?	மிளகு அரைத்தார்களோ?
Je l'ai moulu hier.	நேற்று அதை அரைத்தேன்.
A-t-on apporté de la bonne eau?	நல்லதண்ணீர் கொண்டுவந்தார்களோ?
Oui, monsieur.	ஆம், ஐயா.
Ce verre n'est pas bien rincé; lave-le comme il faut.	இந்தக்கிளாஸ் நன்றாயலம்பவில்லை, அதைச்சரியாகக்கழுவு.
Mets sur la table le sel, le poivre, les couteaux, les cuillères, les fourchettes etc...	மேசையில் உப்பு மிளகு கத்தி கரண்டி முள்ளுமுதலியதுகளைவை.
Apporte de l'eau dans la gargoulette.	கூசாவிலே தண்ணீர்கொண்டுவா.
Monsieur, la gargoulette est cassée; j'ai apporté de l'eau dans un chimbou.	ஐயா கூசா உடைந்திருக்கிறது, செம்பிலே தண்ணீர் கொண்டுவந்தேன்.
Il y a une autre gargoulette dans ma chambre; prends-la.	நமதறையில் வேறேகூசாவுண்டு, அதையெடுத்துக்கொள்.
As-tu acheté du lait?	பால்வாங்கினையா?
J'en ai acheté quatre sêrs.	நாலுசேர்பால் வாங்கினேன்.
Est ce du lait de vache ou du lait de bufflesse?	அது பசுப்பாலோ எருமைப்பாலோ?
C'est du lait de vache, je sais que le lait de bufflesse est malsain.	அது பசுப்பால்தான், எருமைப்பால் சவுக்கியத்துக்குத் தகாதென்றறிவேன்.
Il faut aussi, pour ceux qui en désirent du lait caillé et du lait de beurre.	அதுகளை விரும்புகிறவர்களுக்குத் தயிரும் மோரும் வேணும்.
Messieurs, vous avez faim, sans doute.	துரைமாரே சந்தேகமறப் பசித்திருக்கிறீர்கள்.
Oui, monsieur, j'ai grande faim et grande soif, je tombe de fatigue.	ஆம், ஐயா, எனக்கு மிகுந்த பசியுந்தாசமுமுண்டு. இளைப்பினாலே சோர்ந்துபோகிறேன்.

Prenez, en attendant, un peu de ce vermouth.	பொறுத்துக் கொள்ளவே இந்த வேர்முத் திரசத்திலே கொஞ்சஞ்சாப்பிடுங்கள்.
Un peu suffit pour rendre les forces.	பலந்திரும்பவருவிப்பதற்குக்கொஞ்சமேபோதும்.
Mettons-nous à table.	அசனமேசைக்கு உட்காருவோமாக.
Garçon, apporte la grande cuillère.	பையா அகப்பைக்கொண்டுவா.
Cette soupe est délicieuse, surtout pour des gens fatigués.	இளைத்தவர்களுக்கு விசேஷமாய் இந்த உரொட்டியாணம் வெகு உருசிகரமா யிருக்குது.
Messieurs, choisissez, parmi ces divers mets, ceux qui vous conviennent le mieux.	துரைமாரே இந்தப்பலபதார்த்தங்களுக்குள்ளே உங்களுக்கு அதிக இஷ்டமாயிருக்கிறவைகளைத்தெரிந்துகொள்ளுங்கள்.
Voici du riz cuit et du cari pour ceux qui l'aiment.	இதோசோறுங்கறியும் பிரியப்படுகிறவர்களுக்குஉண்டு.
Ce riz est un peu trop cuit.	இந்தச்சோறு கொஞ்சமதிகமாய்வெந்திருக்குது.
Ce cari est un peu trop pimenté. Il y a aussi trop de sel.	இந்தக் கறியில் மிளகாய் கொஞ்சமதிகமாய்ப் போட்டிருக்குது, அதிலே அதிக உப்புமுண்டு.
Voici les tourterelles que nous avons tuées; on les a fait frire.	இதோ நாஞ்சுட்டபுறுக்கள் அதுகளைப் பொரித்தார்கள்.
Elles seraient bonnes; mais elles sont brûlées.	அதுகள் நல்லதா யிருக்குமே, ஆனால் தீஞ்சுபோயிற்று.
Messieurs, à votre bonne santé.	ஐயன்மாரே உங்களுக்குச் சுகசவுக்கியமுண்டாக.
Ce Madère est de première qualité.	இந்தமதேர்ரசம் முதல்த்தரமாயிருக்குது.
Voilà du vin rouge pour ceux qui veulent étancher leur soif avec de l'eau.	தங்கள்தாகத்தைத் தண்ணீரோடே தீர்க்க விரும்புகிறவர்களுக்கு இதோ சிவப்பிரசமுண்டு.
Cette eau est très-fraîche	இந்தத்தண்ணீர்வெகுகுளு

et délicieuse.

த்தியு மின்பமுமாயிருக்கின்றது.

Il est certain que l'eau fraîche est encore la meilleure boisson du monde.

உலகத்திலுண்டான பானங்களில் தண்ணீர்தான் அதிக நன்மையானதென்பது நிச்சயம்.

Ce paon, que l'on a fait cuire dans son jus, est un de ceux que nous avons tués.

தன்சாரத்தில் வேவிக்கப்பட்ட இந்தமயில் நாஞ்சுட்டதுகளிலே ஒன்றுதான்.

Ces poulets mis en ragoût paraissent bien apprêtés; prenez-en.

கறியாக்கப்பட்ட இந்தக் கோழிக்குஞ்சுகள் நன்றாய்ச்சமைக்கப்பட்டதாகக் காணுது. அதுகளி லெடுத்துக்கொள்ளுங்கள்.

La sauce en est aussi bonne que les poulets.

அதுகளின்குழம்பு கோழிக்குஞ்சுகளோடொத்த உருசிகரமாம்.

Voilà des œufs apprêtés de diverses manières, à la coque, au miroir, en omelette.

அதோவெந்நீரில் வெந்ததும் வட்டிலில்பொரித்ததும் அடித்துப் பொரித்ததுமாகிய நாலுவிதமாய்ச் சமைக்கப்பட்ட முட்டைகளுண்டு.

On n'y a pas épargné le beurre.

அதுகளில் நெய்குறைச்சலாய் வைக்கவில்லை.

J'aurais bien désiré faire paraître sur la table quelque morceau du sanglier que nous avons tué; mais cela aurait pris trop de temps.

நாம்அடித்துப்போட்ட காட்டுப் பன்றியில் யாதோர்துண்டு மேசையில் காட்டவெகுவாயபேட்சித்தேன், ஆனாலது அதிகநேரம் பிடித்திருக்கும்.

Voici des plats de légumes de diverses sortes, des herbes potagères, des petits pois verts, des bringelles, des pommes de terre frites, etc. Que chacun choisisse à son goût.

இதோபலவகை மரக்கறிகளாகிய கீரைகள் சிறுபச்சைப்பட்டாணி கத்தரிக்காய்பொரித்த உருளைக்கிழங்குகள் முதலியதுகளுண்டு. அவரவர்தம திஷ்டத்துக்குத் தக்கபடி தெரிந்துகொள்ளட்டும்.

Vraiment vous avez mis trop de choses. C'est de la prodigalité.

மெய்யாகவே அதிக காரியங்களை வைத்தீர். இதுஊதாரித்தனமாம்.

Les grands festins sont souvent plus contraires à la santé qu'ils n'y sont utiles.	பெரியவிருந்துகள் சவுக்கியத்துக் குதவுகிறதைவிட அநேகமுறை அதற்குஅதிககெடுதியாயிருக்கும்.
Ah! monsieur, quel malheur!	ஐயோஐயாவே,எப்படிப்பட்டநிர்ப்பாக்கியம்!
Qu'est-ce donc? cuisinier.	அதென்னசமயற்காரா?
J'avais fait rôtir un dindon. Il était gros, dodu, bien apprêté; et tandis que j'étais occupé ailleurs, le chat l'a emporté.	ஓர் வான்கோழியைச் சுடுவித்திருந்தேன்,அதுபெரிசுங்கொழுத்ததும்நன்றாய்ச்சமைக்கப்பட்டதுமாயிருந்தது. நான்வேறிடத்திலே அலுவலாயிருக்கிறபோது பூனையதைக்கொண்டுபோச்சு.
Le chat? c'est impossible, ou ce sera un chat à deux pattes?	பூனையோ?கூடாது. அல்லது அதுஇரண்டுகால்பூனையாயிருக்கும்.
Comment? monsieur, est-ce qu'il y a des chats à deux pattes?	எப்படி? ஐயா, இரண்டுகாலுள்ள பூனைகளுண்டோ?
Les chats qui emportent un si gros dindon doivent avoir deux pattes.	அத்தனை பெரியவான்கோழியைக் கொண்டுபோகிற பூனைகளிரண்டுகாலுள்ளதாயிருக்கவேணும்.
Ah! monsieur, je voudrais bien l'attraper.	ஆஅ! ஐயாவே! அதைக்கண்டுபிடிக்கஎனக்குமிகவுமாசையுண்டு.
Il se trouvera quelque part.	அதுயாதோரிடத்திலகப்படும்.
Apporte le dessert.	பழபலகாரச்சோடிப்பைக் கொண்டுவா.
Voici diverses sortes de fruits du pays, et quelques-uns d'Europe.	இதோ இத்தேசத்துப் பலவகைப் பழங்களுஞ் சீமையினின்றுவந்த சிலதுகளுமுண்டு.
Ces oranges, et ces mangues sont magnifiques; ces pamplemousses et ces bananes ont un goût exquis.	இந்த நாரத்தம்பழங்களும் மாம்பழங்களும் வெகுநேர்த்தியாயிருக்குது.இந்தப்பொம்மல்மாசுப்பழங்களும் வாழைப்பழங்களும் இனியவுருசியுள்ளதாம்.
Ces figues et ces pommes	சீமையினின்றுவந்த இந்த

d'Europe sont aussi très-bonnes.

அத்திப்பழங்களும் பொம்மெளிளும் பழங்களுங் கூடவுத்தமமே.

Que d'excellents fruits le Seigneur a crées!

சர்வேசுரன் எத்தனையோ நேர்த்தியான கனிகளை யுண்டாக்கினார்!

Ces confitures de gouyave sont délicieuses.

இந்தக் கொய்யாப்பழத்தித்திப்பு இனிப்பாயிருக்குது.

Ces diverses sortes de gâteaux et de pâtisseries sont très-bien faites.

இந்தப்பலவகைப் பலகாரங்களும் பணியாரங்களும்மெத்த நேர்த்தியாய்ச் செய்யப்பட்டிருக்குது.

Cette crême fait honneur au talent de votre cuisinier.

இந்தப்பாலாடைப் பதார்த்தம் உம்முடைய சயம்பாகியின் சாமர்த்தியத்தைக் கனப்படுத்துகின்றது

Il parait que la chasse vous a donné tant d'appétit, qu'il vous a fait trouver tout bon.

வேட்டையுங்களுக்குப் பெருவித்தமிருந்த பசியானது உங்களுக்குச் சகலமும் நல்லதாக்காணும்படி செய்ததென்று தோற்றுது.

Non, monsieur, mais réellement tout était excellent.

ஐயா அப்படியல்லவே, உள்ளபடி சகலமும் உச்சிதமாயிருந்தது.

Vous ne suivez guère l'usage du pays, qui est de trouver toujours quelque chose à critiquer dans un festin; ne serait- ce que quelques petites pierres dans le riz, ou quelqu'autre défaut.

நீங்கள்இத்தேசவழக்கஞ்சரியா யநுசரிக்கிறதில்லை. அதேதெனில் எப்போதும் ஓர்விருந்தில் சோற்றிலே சிலகல்லுகளாகிலும் மற்றயாதோர்குறையாகிலும் பிடித்துக்கண்டிப்பதேயாம்.

Si vous voulez nous allons prendre le café pur ou avec du lait, au gré de chacun.

உங்களுக்குச் சித்தமானால் அவரவ ரிஷ்டத்தின் படியே கோப்பித்தண்ணீராக் கலப்பின்றி அல்லது பாலோடே சாப்பிடுவோம்.

Après cela un peu de liqueur aide à la digestion.

அதற்குப்பின்கொஞ்சமது சீரணத்துக்கு உதவும்.

Les gens de ce pays ont aussi certaines liqueurs, qui, prises en petite quantité,

இத்தேசத்தார்களுக்குச் சில மதுபானங்களுமுண்டு. அதுகள்கொஞ்சமா யுட்கொள்

pourraient être bienfaisantes à la santé, telles que le toddy, le jus non enivrant du cocotier et l'arack.

ளப்பட்டால் சவுக்கியத்துக்கு நலமாயிருக்கலாம். அதுகள் கள்ளு பதநீர் சாராயமுதலியதுகளாம்.

C'est vrai; mais ils ne savent guère qu'en abuser.

அதுமெய்தான். ஆனால் அதுகளைத் துர்ப் பிரயோகஞ் செய்ய அவர்களுக்குத்தெரிந்திருக்கிறதேயல்லாதே மற்றப்படியருமையாம்.

Combien y en a-t-il qui, par l'usage immodéré des liqueurs enivrantes, dépensent tout leur avoir, se rendent misérables, eux et leur famille, par la pauvreté et les querelles que cause l'ivrognerie!

எத்தனையோபேர் இலாகிரியானவஸ்துகளை யதிகமாய்எடுக்கிறதினால் தங்களுக்குண்டானதெல்லாஞ் செலவழிக்கிறார்கள், குடிகொண்டுவருகிற எளிமையினாலுஞ் சச்சரவுகளினாலுந் தங்களையுந்தங்கள் குடும்பத்தையுநிர்ப்பாக்கியப்படுத்துகிறார்கள்!

Combien n'y en a-t-il pas aussi qui en perdent la santé, la vie, et le salut éternel!

மற்ற எத்தனையோபேர் அதினாலே சவுக்கியத்தையும் உயிரையு நித்தியசீவியத்தையுமுதலா யிழக்கிறார்கள்.

C'est pour cela que les anciens leur ont fait un crime de boire des liqueurs enivrantes.

இதினிமித்தம்பூர்வீகர் மதுகுடிக்கிறதை அவர்களுக்குப் பாதகமாக ஏற் படுத்தினார்கள்.

Aujourd'hui nos domestiques auront dequoi manger à satiété.

இன்று எங்கள் ஊழியர் திருத்தியாய்ச் சாப்பட அவர்களுக்கு உணவிருக்கும்.

Ils ne diront pas aujourd'hui qu'ils n'ont rempli que la moitié de leur ventre.

தங்கள் வயிற்றை யரை வாசியாய் மாத்திரம் நிறைத்ததாக இன்றைக்குச்சொல்லார்கள்.

Bottleur, avant que tu ailles te coucher, tu me serviras du thé, du beurre frais, et du pain.

உக்கிராணக் காரா நீபடுக்கப் போகிறதுக்கு முன் எனக்குத் தேத்தண்ணீரும் வெண்ணெயும் உரொட்டியுங் கொடுப்பாய்.

Où est ma tasse? — என்கோப்பை எங்கே?

Monsieur, la voici. — ஐயா இதுதான்.

Bien, cela suffit. — நல்லது, அதுபோதும்.

PARAGRAPHE XII. — ௰௨-ம். பிரிவு.

Les maladies. — வியாதிகள்.

Dans ce collége, il y a quelques enfans qui sont tombés malades.	இந்தக் கல்விமடத்தில் வியாதியாய் விழுந்த சிலபிள்ளைகளுண்டு.
Où sont-ils? Il faut les voir.	எங்கே யிருக்கிறார்கள்? அவர்களைப்பார்க்கவேணும்.
Les voici dans cette salle.	இதோ இந்தச்சாலையி லிருக்கிறார்கள்.
Quel mal a cet enfant?	இந்தப்பிள்ளைக்கு என்ன நோவு?
Il a un grand mal de tête.	அவனுக்குத் தலை மிகவு நோகுது.
A-t-il en même temps de la fièvre?	அத்தோடே அவனுக்குக் காய்ச்சலுண்டோ?
Non, monsieur.	இல்லை ஐயா.
Faites-lui prendre pendant un quart d'heure un bain de pieds suffisamment chaud, avec des cendres dedans.	போதுமானமட்டுஞ் சூடுள்ள வெந்நீரில்சாம்பல்போட்டு அதிலே கால்மணிநேரம் அவனுக்குக்கால் ஸ்நானம்பண்ணுவியுங்கள்.
Et celui-ci qu'a-t-il?	இவனுக்குப் என்னநோவு?
Il a mal aux yeux; ses yeux sont tout rouges.	இவனுக்குக் கண் நோவுண்டு, இவன் கண் முழுதுஞ் சிவந்திருக்குது.
Qu'il se bassine les yeux avec de l'eau de guimauve refroidie.	அத்திமலைப்பூட்டுக் காய்ச்சி ஆறவைத்த தண்ணீரோடே அவன் தன் கண்களைக் கழுவட்டும்.
Et cet éléve qu'a-t-il?	இந்தமாணாக்கனுக்கும் என்ன?
Il a mal au ventre et n'a pas d'appétit.	இவனுக்கு வயிறு வலிக்குது, பசியில்லை.
Va-t-il à la selle?	அவனுக்கு வயிறு போகுதோ?
Non. Il y a deux jours qu'il n'a pas été aux nécessités.	இல்லை, இரண்டுநாளாவச்சி இவன் மலோபாதைக்குப்போகவில்லை.

Il faut lui donner un purgatif.	அவனுக்குச் சுகபேதிக்குகியமருந்துகொடுக்கவேணும்.
C'est ce que je pensais.	அப்படிநினைத்திருந்தேன்.
Quelle maladie a cet autre élève?	இந்த வேறேமாணாக்கனுக்கு வியாதி யென்ன?
Celui-ci a joué toute la journée hier; il est fatigué, a grande envie de dormir, et nulle envie d'aller en classe, parce qu'il ne sait pas ses leçons.	இவன் நேற்றுப்பொழுதெல்லாம் விளையாடி யிளைப்பாயிருக்கிறன், இவனுக்குத்தூக்கமெத்த, பாடம் இவனுக்குத்தெரியாதபடியினாலே கிளாசுக்குப்போக மனசில்லை.
Oh! oh! Sa maladie est un peu de paresse. Une punition quelconque la fera bientôt disparaitre.	ஓஓ! அவன் வியாதி கொஞ்சஞ் சோம்பல்த்தனம். யாதொரு தண்டனை அதைச்சீக்கிரத்திலே போக்கும்.
Je m'en charge; il sera bientôt guéri.	அது என்பாரமாம், சீக்கிரத்திலே சொஸ்தப்படுவான்.
En voici un qui a mal à la jambe, n'est-ce pas?	இவனுக்குக் கால் நோவிருக்கிறதல்லவா?
Oui, monsieur; hier en jouant, il a butté et est tombé; et aujourd'hui ses genoux et ses mains sont enflés.	ஆம், ஐயா, நேற்று அவன் விளையாடுகிறபோது காலிடறிவிழுந்தான். இன்றைக்கு அவனுக்கு முழங்கால்களுங்கைகளும் வீக்கமா யிருக்குது.
Il n'y a qu'à lui mettre aux endroits enflés un cataplasme de riz cuit avec de la guimauve.	அந்தயிலையோடு வேவித்த சோறு அவனுக்கு வீக்கமான இடங்களிலே கட்டிவைத்தால் போதும்.
Les deux élèves qui nous restent à voir sont les plus malades.	நாம் பார்க்கிறதுக்கு மீதியான இரண்டுமாணாக்கர் அதிகவியாதியுள்ளவர்களா யிருக்கிறார்கள்.
Quelle maladie ont-ils?	அவர்களுக்கு என்ன வியாதி?
Celui-ci a une forte fièvre.	இவனுக்குக் கடின காய்ச்சலுண்டு.
Effectivement il a le pouls très-agité et le corps brûlant.	உள்ளபடி அவனுக்கு நாடி வெகுவா யடிக்குது, உடம்பு மெத்தவுங்காயுது.
Que faut-il lui faire?	அவனுக்குச் செய்யவேண்டியதென்ன?

Il faut appeler le médecin, et le lui faire voir.

வைத்தியனை யழைப்பித்து அவனையவருக்குக் காட்டவேணும்.

En attendant, mettez-le à la diète, et faites-lui prendre une infusion de fleurs de tilleul ou de la limonade cuite.

அதற்குள்ளாகத் தியன் என்னுமரத்து மலர்க் கஷாயமாவது காய்ச்சின எலுமிச்சம்பழத்துத் தண்ணீராவது அவனுக்குக் கொடுத்து இலங்கனமாய் வையுங்கள்.

Cet autre a mal à la poitrine, et crache le sang.

இந்தமற்றொருவனுக்குமார் நோவுண்டு, இரத்தங் கக்குகிறான்.

Il faut aussi le montrer au médecin, et faire ce qu'il prescrira.

இவனையும் வைத்தியருக்குக்காட்டி அவர் கற்பிப்பதைச்செய்யவேணும்.

Je l'appellerai et soignerai ces malades, d'après ses prescriptions.

அவரை அழைத்து அவருடைய கட்டளைப்பிரகாரமாய் இந்த வியாதிக்காரரை விசாரிப்பேன்.

Je dois m'absenter pendant deux jours. Je reviendrai les voir après mon retour; pendant mon absence, soignez bien tous ces malades.

இரண்டு நாள் வரைக்கும் நானிங்கே யிருக்கமாட்டேன். திரும்பி வந்தபிறகு இவர்களை மறுபடி பார்க்கவருவேன். நானில்லாதபோது இந்தச்சகல வியாதிக்காரர்களையும் நன்றாய் விசாரித்துப் பாருங்கள்.

Vous pouvez compter sur mes soins assidus.

சாக்கிரதையுள்ள என் விசாரணையை நீர் நம்பிக்கொண்டிருக்கலாம்.

Depuis mon départ, comment ont été nos malades?

நான் போய்விட்ட நேரந்துவக்கி நம்முடைய வியாதிக்காரர் எங்ஙனமா யிருந்தார்கள்.

Parmi ceux qui n'avaient que des indispositions, deux sont complètement guéris; deux vont mieux; un va encore comme cela; le poitrinaire va de plus en plus

வெறும் அசவுக்கியமாயிருந்தவர்களுக்குள்ளே இரண்டுபேர் முழுதுஞ் சொஸ்தமானார்கள். இரண்டுபேருக்கு வாசியாகுது, ஒருவன் இன்னமப்படியே ஒருவிதமாயிருக்கிறான்.

mal; celui qui a la fièvre est à l'extrémité. — மார்நோவாயிருக்கிறவனுக்கு வியாதி அதிகரித்துவருது. காய்ச்சலுள்ளவன் அவஸ்தையாயிருக்கிறான்.

Comment a-t-il passé la nuit? — இராத்திரியிலெவ்வண்ணமாயிருந்தான்.

Il a été très-agité et presque toujours en délire: il est bien mal maintenant. — மிகுந்த ஆருட்டப்பட்டான். சந்நிக்குறைவா எப்பொழுதும் புத்திமாருட்டமாயிருந்தான், இப்போது மெத்தவுஞ் சங்கட்டமாயிருக்கிறான்.

Le pouls tombe, et semble sur le point de cesser. — நாடி விழுது, அது அற்றுப்போகிறாப்போலே யிருக்குது.

Il ne peut vivre longtemps. — நெடுநேரம் பிழைக்கமாட்டான்.

Ses yeux s'obscurcissent et s'éteignent. — அவன் கண் மங்கி அவிந்துபோகுது.

Il est temps de dire les prières des agonisants. — அவஸ்தைப் பிரார்த்தனை சொல்லநேரமாச்சுது.

Entendez-vous, il a le râle de la mort? — அவன் கேவுகிற சத்தங்கேட்கிறீர்களோ?

Il rend l'âme. — உயிர் விடுகிறான்.

Il est mort. — இறந்துபோனான்.

Comme c'était un bon chrétien, et qu'il s'est bien préparé à la mort, il y a tout lieu de croire qu'il est allé au ciel. — அவன் நல்ல கிறீஸ்துவனாயிருந்தபடியினாலும் மரணத்துக்கு நல்ல ஆயத்தஞ் செய்தபடியினாலும் பரலோகத்துக்குப்போயிருக்கிறானென்றுசர்வ நம்பிக்கையுண்டு.

PARAGRAPHE XIII. — ௰௩-ம். பிரிவு.

La pluie. — மழை.

Il y a longtemps qu'il n'y a pas de pluie; la terre est toute desséchée. — வெகுகாலத்துவக்கி மழையில்லை, பூமியெங்குங்காய்ந்திருக்குது.

A peine trouve-t-on de l'herbe pour les animaux. — மிருகங்களுக்குப் புல்லு அகப்படுகிறது அருமை.

Il n'y a plus que très-peu d'eau dans les étangs.	ஏரிகளிலே வெகு கொஞ்சமான தண்ணீர் இருக்கிறதொழிய மற்றப்படியல்ல.
Tous les petits étangs sont à sec.	சின்ன ஏரிகளெல்லாம் வற்றிப்போயிற்று.
On a mis à l'enchère la pêche du grand étang.	மீன்பிடிக்கப் பெரிய ஏரி ஏலத்தில் விடப்பட்டது.
C'est ce qui se fait tous les trois ou quatre ans, et quelquefois tous les ans.	அது மூன்று நாலு வருஷத்துக்கு ஒருவிசையுஞ் சிலவேளைகளிலே வருஷந்தோறும் அப்படி செய்கிறதுண்டு.
A combien s'est élevé l'enchère de cette pêche?	அந்த மீன்பிடிக்கிற எம்மாத்திரத்துக்கு ஏலம் ஏறிப்போச்சுது?
Elle s'est élevée à deux cents roupies.	இருநூறு ரூபாய்க்கு ஏறிப்போச்சுது.
Combien y a-t-il encore de mois jusqu'aux grandes pluies?	பெரிய மழைவரைக்கும் இன்னம் எத்தனை மாசமுண்டு?
Il y a encore trois mois.	இன்னமூன்று மாசமுண்டு.
Si la pluie manque, il y aura famine.	மழையில்லாதேபோனால் பஞ்சமிருக்கும்.
Il faut espérer qu'il n'en sera pas ainsi.	இப்படியாகமாட்டாதென்று நம்பிக்கொள்ளவேண்டியது.
Sans pluie, point de récolte.	மழையின்றி வெள்ளாண்மையில்லை.
Mais quand les pluies sont abondantes, la récolte l'est aussi.	ஆனால் மழைத் தாராளமானால் வெள்ளாண்மையுந் தாராளமாமே.
Il viendra bientôt de la pluie; car il y a un grand cercle autour de la lune.	சந்திரன் சுற்றிலும்பெரிய கோட்டையிருக்கிறபடியினாலே கொஞ்சத்துக்குள்ளே மழைவரும்.
Oui, car le proverbe de ce pays dit: si le cercle est proche, la pluie est éloignée; si le cercle est éloigné, la pluie est proche.	ஆம், ஏனெனிற் சேரமண்டலம் தூரமழை, தூரமண்டலஞ் சேரமழையென்று இந்தத் தேசத்துப் பழமொழிச்சொல்லுகின்றது.
Il est tombé une bonne	இந்த இரண்டுநாள் நல்ல

pluie ces deux jours-ci; il y a de l'eau pour trois mois dans l'étang.

மழை பெய்தது. ஏரியிலே மூன்று மாசத்துக்குத்தண்ணீர் உண்டு.

Il en est tombé bien davantage dans les environs.

சுற்றுப்புறங்களில் மிகவுமதிகமான மழை பெய்தது.

Les étangs sont remplis; si la pluie continue, leurs digues se briseront.

ஏரிகள் நிறைந்திருக்குது, மழை தொடர்ந்து பெய்தால் அதுகளின் அணைகள் உடைந்து போம்.

Après quelques jours de pluie, comme la campagne est verte!

சிலமழைநாளுக்குப் பிறகு மைதானம் எம்மாத்திரம் பச்சையாயிருக்குது!

L'herbe, les légumes, les plantes, tout croît à merveille.

புல்லு கீரை செடிகள் முதலிய சகலமும் ஆச்சரியத்துக்குரிய விதமாய் விளைகின்றது.

Y aura-t-il de la pluie aujourd'hui?

இன்றைக்கு மழை பெய்யுமோ?

Il y a bien quelques signes de pluie.

சில மழையடையாளங்களுண்டென்பது உள்ளதுதான்.

Si une forte pluie nous surprend en chemin, où irons-nous?

வழியிலே பெரியமழை நமக்கு நேரிட்டால் எங்கே போவோம்?

Les parapluies et les arbres ne pourront nous protéger; il faudra aller dans quelque chauderie.

குடைகளும் மரங்களும் நம்மை ஆதரிக்கக் கூடாதிருக்கும், யாதோர் சாவடியில் ஒதுங்கவேண்டியிருக்கும்.

Avant d'y arriver, il y a un torrent qui traverse la route; il nous sera difficile de le passer.

அதிற்சேருவதற்கு முன்வழியைக் குறுக்கிடுகிற ஓர் வெள்ளமுண்டு, அதைக் கடக்க நமக்கு வருத்தமாயிருக்கும்.

Je suis tout mouillé par la pluie.

மழையினால் முழுது நனைந்திருக்கிறேன்.

La pluie est venue à l'improviste.

மழை திடீரென்று வந்தது.

Mes vêtemens sont entièrement mouillés; mets-les sécher au soleil.

என் வஸ்திரங்கள் முழுமையும் நனைந்திருக்குது, அதுகளை வெயிலிலே காயவை.

Quand ils seront secs, tu les plieras et me les apporteras.

அதுகள் காய்ந்தபிற்பாடு அதுகளை மடித்து எனக்குக் கொண்டுவருவாய்.

Je vais les étendre sur ce buisson, et bientôt ils seront secs. — அதுகளை யவிழ்த்து முட்டுச்செடியிலே விரித்துப்போடுகிறேன், சீக்கிரமாய்க் காய்ந்துபோம்.

Ce bois est tout vert; on ne peut en faire du feu. Mets le sécher. — இந்த விறகுமுழுதும் பச்சையாயிருக்குது, அதைக்கொண்டு நெருப்புண்டாக்கக் கூடாது, அதை உணரவை.


N'y a-t-il pas du bois mort? — உலர்ந்த விறகில்லையா?

En voici; mais, il est tout humide de pluie; il faut aussi le mettre sécher. — இதோ சிலது உண்டு. ஆனால் அது மழையினால்முழுதும் ஈரமாயிருக்குது, அதையுங் காயவைக்கவேணும்.

Accroche ce sac au clou qui est à la muraille. — இந்தப் பையைச் சுவரிலுள்ள ஆணியிலேமாட்டு.

Je ne puis pas y atteindre. — அது எனக்கு எட்டாது.

Dresse-toi sur le bout de tes pieds, et tu y atteindras. — நுனிவிரல்களில் ஊன்றி நிமிர்ந்துகொள், அப்போது உனக்கு எட்டும்.



PARAGRAPHE XIV. — ௧௪-ம். பிரிவு.

La culture des terres. — நிலங்களைப்பயிரிடல்.



Monsieur, j'ai appris que vous désiriez un jardinier. — ஐயா உமக்கு ஓர் தோட்டக்காரன் வேணுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

Oui, mais je voudrais un homme entendu dans la culture. — ஆம், ஆனால் பயிரிடுகிறதிலே தேர்ந்த மனுஷன் எனக்கு வேணும்.

C'est le métier que j'exerce depuis mon enfance. — சிறுபிராயந்துவக்கி நான் செய்கிறதொழில் அதுவே.

Sais-tu les diverses sortes de cultures, qui conviennent aux divers terrains? — வெவ்வேறு நிலங்களுக்குத் தகும் வெவ்வேறுவகைப்பயிர்களையறிவாயோ?

Oui, monsieur, je connais les diverses sortes de terrains, les cultures qui leur sont propres, et le temps qui leur convient. — ஆம், ஐயா, வெவ்வேறுவகை நிலங்களையும் அதுகளுக்குரிய பயிர்களையும் இதுகளுக்குத் தகுங் காலத்தையும் அறிவேன்.

Oh! oh! Tu es donc un habile homme?

ஓகோ! நீ கெட்டிக்காரனோ?

Par la grâce de Dieu, je le suis passablement.

சுவாமியுடைய கிருபையினாலே நான் ஏறக்குறையக் கெட்டிக்காரன்தான்.

Alors, je te confierai la culture de mon jardin. Le soigneras-tu bien?

அப்படியிருக்க என்தோட்டத்தைப் பயிரிடும் அலுவலையுனக்குஒப்பிப்பேன், அதைச் சரியாய் விசாரிப்பியா?

Soyez sûr que j'y travaillerai avec grand soin.

அதிலேமிகுந்த சாக்கிரதையோடு உழைப்பேனென்று நிச்சயமாய் நம்பிக்கொள்ளும்.

Eh bien, viens voir mon jardin. Le voici.

அப்படியிருக்க என்தோட்டத்தைப்பார்க்கவா, இதுதான்.

Jusqu'où s'étend-il?

அது எதுவரைக்குஞ்செல்லும்?

Depuis cette haie à l'est, jusqu'à ces tamariniers que tu vois dans le lointain à l'ouest; et depuis la route au nord, jusqu'à ce mur au sud.

கிழக்கில் இந்தவேலிதுவக்கி மேற்கிலே நீ துலைவில் காண்கிற அந்தப்புளியமரங்கள் வரைக்கும், பின்னும் வடக்கில்பாதைதுவக்கித்தெற்கில்அந்தச் சுவர்வரைக்குஞ் செல்லும்.

Il est vaste et renferme diverses sortes de terrains.

அது விஸ்தாரமாயிருக்கிறதுமன்றி அதிலேபலவகை நிலமுமுண்டு.

Oui, il y a une terre à nellou et une terre à menus grains.

ஆம், அதிலே நன்செயும்புன்செயுமுண்டு.

Que te semble-t-il de cette rizière?

இந்தக்கழனி உனக்கு எப்படிதோற்றுது?

Elle est belle; le riz y croît bien.

அதுநேத்தியா யிருக்குது; அதிலே நெல்லு நன்றாய்விளையுது.

Quelle est cette sorte de riz?

இதுஎன்னவகை நெல்லு?

C'est du riz fin de l'espèce dite Chamba.

இதுமெல்லிய சம்பா நெல்லு.

Voici qu'il commence à épier.

இதோ கதிர்வாங்கத்துவக்குது.

Cette rizière promet une belle moisson. — இந்தவயலில் நல்ல வெள்ளாண்மையாகுமென்று நம்பிக்கையாயிருக்குது.

Comme de coutume, les épis ne sortent pas également partout. — வழக்கத்தின்படியே கதிர்கள் எங்கும் ஒத்தபடி புறப்படுகிறதில்லை.

Cela ne fait rien. Cette rizière est-elle arrosée par l'eau de l'étang? — அதினாலே காரியமில்லை. இந்தக்கழனிக்கு ஏரித்தண்ணீர்ப்பாய்ச்சலுண்டோ?

Oui, et même elle est la première pour l'irrigation. — ஆம், மேலுமிதுவே முதல் மடை.

Cette rizière donne-t-elle deux récoltes ou une seulement? — இந்தக் கழனிக்கு இரண்டு போகமோ ஒன்று மாத்திரமோ?

Elle en donne deux, mais quelquefois l'eau de l'étang ne suffit pas, pour aller jusqu'à la maturité de la seconde récolte. — அது இரண்டுபோகங்கொடுக்கும், ஆனால் சிலவிசை இரண்டாம்போகம்முற்றிப்போக ஏரியின் தண்ணீர் பற்றாமையாயிருக்கும்.

Que faire alors? — அப்போது செய்கிறதென்ன?

Il faut arroser avec la picote du réservoir que voici. — இவ்விடத்திலுள்ள குளத்து ஏற்றத்தைக்கொண்டு இறைக்கவேணும்.

Ah! voici une belle pièce d'eau. — ஆ ஆ! இது நல்ல குளமாமே.

A-t-elle toujours de l'eau? — அதிலே எப்போதுந் தண்ணீருண்டோ?

Elle est intarissable. — அது வற்றாது.

Où est l'aire de cette rizière? — இந்தக் கழனியின் களமெங்கே?

La voilà près de ces cocotiers. — அதோ அந்தத் தென்னமரங்களின் கிட்டவிருக்கின்றது.

Elle est dans un endroit convenable et assez grande. — அது தக்கவிடத்திலும் போதுமான விசாலமுமாயிருக்குது.

Voici déjà une partie de la moisson qu'on a coupée. — இதோ ஏற்கனவே விளைவிலோர்பங்கு அறுப்பாயிற்று.

Combien de cougis de terre a-t-on moissonnés? — எத்தனை குழிநிலத்தை அறுப்பறுத்தார்கள்.

Soixante-quinze cougis, c'est-à-dire, les trois quarts d'un câni.	முக்காலகாணியாகிய எழுபத்தைந்துகுழி அறுத்தார்கள்.
On a battu les gerbes, fait fouler la paille aux pieds des bœufs, vanné le grain et mis la paille en meule.	அரிகளையடித்தார்கள், வைக்கோலைப் பிணைக்கவைத்தார்கள், நெல்லைத்தூற்றினார்கள், வைக்கோலைப் போராக வைத்தார்கள்.
Il paraît qu'il y a eu peu de balles sans grain ou d'épis non mûrs.	பதருங் கருக்காயுங் கொஞ்சமாயிருந்ததாகத் தோன்றுது.
Les padials les ont emportés.	படியாட்கள் அதுகளைக் கொண்டுபோனார்கள்.
Combien avez-vous eu de calams de nellou?	உமக்கு எத்தனை கலநெல்லு கண்டது.
Trente calams.	முப்பதுகலம்.
C'est bien. Mais voici la moitié d'un câni de terre à nellou qui reste en friche; on pourrait aussi la mettre en culture.	அது நல்லது. ஆனால் இதோ அரைக்காணி நன்செய் தரிசாய்க் கிடக்குது, அதையும்பயிரிடலாமே.
Oui, mais il y a certains travaux préparatoires à faire.	ஆம், ஆனால் அதற்குப்பிரயத்தனமாகச்செய்யவேண்டிய சிலவேலைகளுண்டு.
C'est vrai, il faut abaisser un peu et niveler le terrain, ensuite le labourer, y mettre de l'engrais et l'ensemencer, ou y planter du riz.	மெய்தான், நிலத்தைக்கொஞ்சந் தாழ்த்திச் சமமாக்கித் திருத்தவும் பின்னும் அதையுழுது எருப்போட்டுவிதைக்கவும் அல்லது நெல்லுநாற்று நடவும்வேணும்.
Tu as raison; cela fera une rizière comme celle qui est à côté.	நியாயமாய்ச் சொன்னாய், அதுபக்கத்திலுள்ள கழனியைப்போலே ஓர்வயலாகும்.
Dans cette rizière-ci, on n'a pas encore ôté les mauvaises herbes, ni égalisé les plants de riz.	இந்தக்கழனியில் இன்னங் களை பிடுங்கிக் கலப்புபோடவில்லை.
Dans la terre à menus grains, vois ce qu'il y aurait à faire.	புன்செய் நிலத்தில் என்ன செய்யத்தகுமென்றுபார்.

Dans ces trois cânis-ci les menus grains doivent bien venir.	இந்த மூன்று காணிகளிலே சிறுதானியங்கள் நன்றாய் விளையவேண்டியது.
Effectivement on y fait chaque année une bonne récolte des sortes de millet dites *Cambou* et *Kécerou*.	உள்ளபடி வருஷந்தோறும் அதிலே கம்புங் கேழ்வரகுமாகிய சிறுதானியங்கள் நல்ல வெள்ளாண்மையாயிற்று.
Cette tòppe(ou ce verger)de jeunes cocotiers et de manguiers demanderait encore à être arrosée dans le temps des chaleurs	கோடைக்காலத்தில் இந்த இளந்தென்னம்பிள்ளை மாமரத்தோப்பு இன்னமிறைப்பு கேட்குது.
Depuis quelques semaines on l'a un peu négligée.	சிலவாரந் துவக்கியதைக் கொஞ்சம் அசட்டைத்தனமாய் விட்டார்கள்.
Dans cette partie-ci, on ferait bien de planter des bananiers.	இந்தப் பங்கிலே வாழைகளை நட்டால் நன்மையாம்.
Je le pense aussi.	நானுமப்படி நினைக்கிறேன்.
Cet endroit conviendrait pour les légumes.	இவ்விடங் கீரைகிழங்குபயறு முதலியவற்றுக்குத் தகும்.
On y a déjà cultivé avec succès des herbes potagères, des bringelles, des fèves, des citrouilles etc...	ஏற்கனவே அதிலே கீரை, கத்தரி, அவரை, பூசுணி முதலியதுகளை யநுகூலமாய்ப் பயிரிட்டார்கள்.
Mais, voici un câni de terre que vous laissez sans culture.	ஆனாலிதோ நீர் பயிரிடாமல் விடுகிற ஓர்காணி நிலமுண்டு.
Je la laisse ainsi, parce que c'est une terre imprégnée de sel et où rien ne peut venir.	அது ஒன்றும் விளையமாட்டாத களர்பூமியாயிருக்கிறதினாலே அதையப்படி விடுகிறேன்.
Il ne faut pas la laisser ainsi: il y a un moyen de vaincre ce caractère salin et de bonifier cette terre.	அதையப்படி விடவேண்டாம், அந்தக்களரை முறித்து இந்தப்பூமியை நல்லதாக்கு முபாயமுண்டு.
Quel est-il?	அது என்ன?
Il faut y semer de l'acacia dit Vêlin. Il donnera du	வேலமரத்து விரை அதிலே விரைக்கவேண்டியது.

bois et corrigera le défaut de cette terre. — அது விறகுங்கொடுக்கும், இந்தப்பூமியின் குறையையுந் தீர்க்கும்.

Combien faut-il de paires de bœufs pour la culture de toutes ces terres? — இந்தச்சகல நிலங்களையும் பயிரிட எத்தனை ஏர்மாடுவேணும்?

Deux paires de bœufs et deux charrues suffisent. — ஈரணை மாடும் இரண்டு கலப்பையும்போதும்.

Quand cela ne suffit pas, on peut en mettre de louage. — அதுபற்றாதபோது சிலதுகளை வாடகைக்கு அமர்த்திவைக்கலாம்.

De même aussi pour les hommes de labeur. — வேலையாட்களையும் அப்படியே அமர்த்திவைக்கலாம்.

La récolte a-t-elle été bonne cette année? — இந்தவருஷத்திலே நல்லவெள்ளாண்மையாச்சுதோ?

En général, on a eu trois quarts de récolte;cependant quelques - uns n'en ont eu qu'une moitié ou un quart. — சாதாரணமாய் முக்கால்வாசி வெள்ளாண்மை யுண்டாயிற்று, ஆயினுஞ் சிலருக்கு அரைவாசி அல்லது கால்வாசிமாத்திரம் விளைந்தது.

Quand doit-on commencer de nouveau à cultiver? — மறுபடி எப்போ சாகுபடி செய்யத்துவக்குவார்கள்?

Dans quelques semaines. — சிலகிழமை பொறுத்துத் துவக்குவார்கள்.

Déjà quelques-uns commencent l'irrigation préparatoire. — ஏற்கனவே சிலர் சேடைவைக்கத் துவக்குகிறார்கள்.

PARAGRAPHE XV. — ௰௫-ம். பிரிவு.

Les bâtisses. — கட்டுக்கோப்புகள்.

Maitre maçon, voici une maison qui tombe en ruine, il faut la démolir et la rebâtir. — கொல்லற்று மேஸ்திரி இடிகிறஇந்தவீடுபார், அதையிடித்துத்திரும்பக்கட்டவேணும்.

Monsieur, je n'attends que vos ordres. — ஐயா, உம்முடைய கட்டளைக்குமாத்திரங் காத்திருக்கிறேன்.

Après avoir démoli,il faut — இடித்தபிற்பாடு முந்த அ

d'abord sonder et voir si les fondemens sont bons. — அஸ்திவாரங்களைப் பரிசோதித்து அதுகள் நல்லதோ அல்லவோ வென்று பார்க்கவேணும்.

J'ai déjà sondé et j'ai vu que les fondemens etaient bons partout, excepté ceux de cette chambre additionnelle. — நான் ஏற்கனவே பரிசோதித்துக்கூட்டப்பட்ட இந்த அறையின் அஸ்திவாரங்கள் தவிர மற்றதுகள் எங்கும் நல்லதாயிருக்கிறதாகக் கண்டேன்.

Cela étant, il faut aussi enlever les fondations de cette chambre et en mettre de nouvelles. — இப்படி யிருக்க இந்த அறையின் கடைக்கால்களையும் பெயர்த்துப்புதுசானதுகளை போடவேணும்.

Je le ferai. — அப்படியே செய்வேன்.

Il faut bien poser les fondemens. — அஸ்திவாரங்களைச் சரியாய்ப்போடவேணும்.

Oui, monsieur, car un bâtiment qui pèche par les bases n'est pas solide. — ஆம் ஐயா, ஏனெனில் அடியில் ஊனமான கட்டுக்கோப்பு உறுதியாயிராது.

Ici, pour les maisons, on creuse les fondemens jusqu'à ce qu'on trouve une couche de sable; ailleurs c'est jusqu'à ce qu'on rencontre une couche de terre dure et graveleuse. — இங்கேவீடுகளுக்கு மணற்படை அகப்படுகிற வரைக்குந் தோண்டுகிறார்கள். வேறேயிடங்களில் பரலுள்ளதும் கெட்டியானதுமாகிய மண்படை கிடைக்கு மட்டுந் தோண்டுவார்கள்.

Quelle largeur faut-il donner aux fondemens? — அஸ்திவாரங்களுக்கு எவ்வளவு அகலங் கொடுக்கவேணும்?

Deux pieds et un quart. — இரண்டேகாலடி.

Au niveau de terre, il faut faire une retraite de deux pouces de chaque côté. — தரை மட்டத்தில் அந்தந்தப்பக்கத்திலுமிரண்டங்குலப்பத்திரிப்பு செய்ய வேணும்.

Ne faut-il pas alors bâtir trois ou quatre rangées de briques avec de la chaux? — அப்போது மூன்று அல்லது நாலுகல்வரிசையைச் சுண்ணாம்போடே கட்டவேண்டியதல்லவா?

Oui, il en faut faire au- — ஆம், சுவருயரத்தில் ஏறக்

tant environ tous les trois pieds dans la hauteur du mur.

குறைய மூன்றடிதோறும் அப்படிதான் செய்யவேணும்.

Il faut bâtir trois chambres, donner à celle du milieu dix-huit pieds de long, et aux autres quinze sur quatorze de large pour toutes.

மூன்று அறை கட்டவேணும், நீளத்திலே நடுப்புற அறைக்குப்பதினெட்டு அடியும் மற்றதுகளுக்குப் பதினைந்து அடியும் அகலத்திலே சகல அறைகளுக்கும் பதினாலு அடியுமிடவேண்டியது.

Dans le plan sont marquées les portes, les fenêtres, une longue varangue au sud, et une petite varangue au nord, avec deux cabinets aux deux extrémités de cette varangue. La hauteur et la largeur des portes et des fenêtres y sont aussi désignées.

பணிக்கிலே கதவுகளுஞ் சன்னல்களும், தெற்கிலே ஓர் நீண்டதாழ்வாரமும் வடக்கிலே ஓர்சின்ன தாழ்வாரமுமிதின் இருபுறத்துங் கடைசியில் சின்ன அறைகளுங் குறித்திருக்கிறது. கதவுகளுக்குஞ் சன்னல்களுக்கு மிடவேண்டிய உயரமும் அகலமும் அதிலேகாட்டி யிருக்குது.

Les trois chambres seront surmontées d'un étage réparti de même; seulement il n'aura que onze pieds de hauteur, tandis que le rez-de-chaussée doit en avoir douze.

மூன்று அறைகளின்பேரில் மேற்றட்டு இருக்கும், அதுவும் அப்படியே அறையாகப்பிரிந்திருப்பது. ஆயினும் அதற்குப்பதினோரடி யுயரமாத்திர மிருக்கும். தரைமட்டவறைகளுக்கோவெனில் பன்னிரண்டடியிருக்கவேணும்.

Le toit de l'étage doit être en argamasse, celui des cabinets en demi-argamasse, et celui des varangues en tuiles.

மேற்றட்டின் மேன்கூரை மெத்தையாகவுஞ் சின்ன அறைகளின் மேன்கூரை அரைமெத்தையாகவுந் தாழ்வாரங்களின் மேன்கூரை ஓடுகளுள்ளதாகவுமிருக்கவேணும்.

Les poutres ne doivent se mettre ni sur les cintres des portes, ni sur ceux des fenêtres, mais sur les pans de murs, qui sont dans les intervalles des unes aux autres.

கதவுகளுக்குஞ் சன்னல்களுக்குமுண்டான வளைவுகளின்மேல் தூலங்களைவைக்காமல் அதுகளினிடையிலுள்ள சுவர்க்கட்டைகளின் மேலே வைக்கவேணும்.

Pour soutenir les varangues, le plus aisé serait de mettre des colonnes de bois; et le plus solide des arceaux; mais on peut prendre un moyen terme, et mettre des colonnes en maçonnerie.	தாழ்வாரங்களைத் தாங்க மரத்தூண்களைவைப்பது அதிகசுளுவாகவும் வில்வளைவுகளைக்கட்டுவது அதிக உறுதியாகவுமிருக்கும். ஆனால் மத்திமமானவகையெடுத்துக்கல்லாலேதூண்களைக்கட்டிவைக்கலாம.
Dans certains endroits, où la terre est très-dure, on bâtit quelquefois les murs en terre.	மண்ணுமெத்தவுங்கெட்டியானசிலவிடங்களிலே சிலவிசைசுவர்களைமண்ணாலேகட்டுவார்கள்.
Mais alors, il est difficile de les faire bien réguliers, et ces murs ne supportent pas d'étage.	ஆனால் அப்படிப்பட்டசுவர்களைமுழுதுமொழுங்காய்ச்செய்வதருமையாயிருக்கிறது அன்றி அதுகள்மேற்றட்டுதாளமாட்டாது.
On bâtit aussi avec des briques crues, c'est-à-dire, cuites au soleil.	வெயிலில்காய்ந்ததுகளாகிய பச்சைக்கல்லுகளோடுகட்டுகிறதுமுண்டு.
Mais, ces murs ne sont pas très-solides et il faut avoir grand soin de les préserver de la pluie, ainsi que les murs précédens en terre.	ஆனால் அந்தச்சுவர்கள் மெத்தவும்உறுதியல்லவே. மேலும் அதுகளும் மேற்சொல்லியமட்சுவர்களும் மழையில் நனையாதபடிக்கு அதுகளை வெகுபத்திரமாய்க் காப்பாற்றவேணும்.
Le plus solide serait de bâtir à briques et à chaux; mais cela est très-dispendieux.	செங்கலோடுஞ் சுண்ணாம்போடுங்கட்டுவது அதிகவுறுதியாகும். ஆனால் அது மிகுந்த செலவுபிடிக்கும்.
L'ordinaire est donc de bâtir en briques cuites et en terre glaise. Pour la solidité, on y entremêle, de place en place, trois ou quatre rangées de briques et de chaux.	ஆகையால் சுட்டகல்லோடேங்களிமண்ணோடேங் கட்டுவது வழக்கம். உறுதிக்கு இடையிடையாய் மூன்றுஅல்லது நாலுவரிசைகல்லு சுண்ணாம்போடே கூட்டுவார்கள்.
Maintenant il faut nous procurer des matériaux.	இப்போது சாமான்களைச் சம்பாதித்துக்கொள்ள வேணும்.

Vu la cherté des briques, il y aurait de l'économie à en faire faire une fournée, pourvu qu'on eût à proximité et le bois et un endroit convenable pour faire les briques.

செங்கல் கிராக்கியாயிருக்கிறதினால் விறகுஞ்செங்கல்அறுக்கத்தக்கவிடமுஞ்சமீபத்திலிருக்குமேயாகில் சூளைசெய்விப்பது நயமாயிருக்கும்.

Autrement, il vaut mieux les acheter; car il en coûte beaucoup et de tracas et d'argent pour faire couper les briques, pour les conserver, faire construire le four, acheter, faire couper et amener le bois, faire empiler les briques dans le four et les faire cuire comme il faut.

மற்றப்படியதுகளை வாங்கிறதுத்தமம். ஏனெனில் கல்லறுக்கச்செய்யவும் அதுகளைக்காப்பாற்றவுஞ் சூளைகட்டவும் விறகுவாங்கி வெட்டிக்கொண்டுவரவுஞ் சூளையிற் கல்லுகளையடுக்கச்செய்யவுந்தக்கபடியதுகளைச்சுடுவிக்கவுந் மிகுந்ததொந்தரவுஞ் செலவும் பிடிக்கும்.

On court même risque de grande perte, si le four n'est pas fait et soigné comme il faut.

மேலுஞ் சூளைதக்கபடிசெய்யவும் விசாரிக்கவும் படாதிருந்தால் வெகுநஷ்டத்து ஆபத்திருக்கும்.

Il faudra donc acheter des briques et avoir soin qu'on n'en mette pas de seconde qualité pour des briques de première qualité.

ஆதலால் செங்கல்லுகளை வாங்கவும் முதல்த்தரக்கல்லுக்குப்பதிலாய் இரண்டாந்தரக்கல்லு வைக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவும் வேண்டியிருக்கும்.

Les briques de seconde qualité sont celles qui sont mal cuites.

நன்றாய்வேகாத கல்லுகளே இரண்டாந்தரமாம்.

Il faut avoir soin aussi qu'il n'y ait pas de fraude dans la manière d'empiler les briques; car on y laisse des vides, ou on y met de petits fragments de briques.

கல்லுகளை யடுக்கிறவகையிலே மோசமிராதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்கவேணும். ஏனெனில் வெறுமையான சந்துகளைவிடுவார்கள் அல்லது பொடிக்கல்லுகளை யதிலேபோடுவார்கள்.

Il faut aussi acheter de la chaux. Combien en donne-t-on maintenant de *pareis*?

சுண்ணாம்பையும் வாங்கவேணும். இப்போது எத்தனை பறைகொடுப்பார்கள்?

On donne quatorze *pareis* de chaux de coquillage à la pagode.	வராகனுக்குப்பதினாலு பறைகிளிஞ்சில்ச் சுண்ணாம்பு கொடுப்பார்கள்.
Il ne faut pas acheter de chaux en poudre; car il n'y a pas à s'y fier; on y mêle de la cendre ou autres matières semblables.	தூளித்தநீறுவாங்கவேண்டாம். ஏனெனில் அதைநம்பக்கூடாது, அதிலே சாம்பல் முதலியதுகளைக் கலப்பார்கள்.
Puis, il faut dire d'amener quelques voitures de sable d'eau douce.	இன்றுஞ் சிலபண்டி நன்னீர்மணலைக்கொண்டு வரச்சொல்லவேணும்.
L'eau salée ne convient pas pour les travaux de bâtisse.	உப்புநீர் கட்டுக்கோப்புவேலைகளுக்குத்தகாது.
Il faut mélanger de la chaux avec du sable et la faire piler.	சுண்ணாம்பு மணலோடே கலவைபோட்டு இடிப்பிக்கவேணும்.
Ce sont des femmes qui font généralement ce travail.	சாதாரணமாய்ப்பெண்பிள்ளைகள் அந்தவேலைசெய்கிறார்கள்.
Il faut lever comme il faut le pilon et bien piler la chaux.	உலக்கை சரியாய்த்தூக்கிச் சுண்ணாம்பு நன்றாயிடிக்கவேணும்.
Les ouvriers sont-ils arrivés?	வேலையாட்கள் வந்திருக்கிறார்களோ?
Combien sont-ils?	அவர்களெத்தனைபேர்?
Il y a outre le maître maçon, deux maçons et quatorze journaliers, dont quatre à paye entière, huit à trois quarts de paye, et deux à demi-paye.	கொல்லற்றுமேஸ்திரி யல்லாதே-௨-கொல்லத்துக்காரரும்-௰௪-ஆள்க்காரருமிருக்கிறார்கள். இவர்களில் முழுஆள் நாலும் முக்கால்ச்சிற்றாளெட்டும், அரைச்சிற்று இரண்டுமுண்டு.
Les petits journaliers sont fort utiles dans les bâtisses.	கட்டுக்கோப்பு வேலைகளில் சிற்றாள்கள் மெத்தவு முதவியாயிருக்கிறார்கள்.
Tous ces ouvriers ont-ils apporté leurs outils?	அந்தவேலையாட்களெல்லாருந் தங்கள் ஆயுதங்களைக் கொண்டுவந்தார்களோ?
Oui, monsieur, ils ont des	ஆம்ஐயா, கொல்லறுகள்ம

truelles, des pioches, des corbeilles, des pilons et autres instrumens.	ண்வெட்டிகள் கூடைகள் உலக்கைகள் முதலிய ஆயுதங்களைக் கொண்டிருக்கிறார்கள்.
Qu'on commence par descendre, sans les briser, les tuiles de la vieille maison et toute la charpente.	முற்றப்பழையவீட்டின் ஓடுகளையும் இணையல் மரங்கள் யாவற்றையும் உடைக்காமலிறக்கட்டும்.
Ensuite, après avoir démoli les vieux murs, qu'on se mette à bâtir.	பின்னும்பழையசுவர்களையிடித்தபிறகு கட்டத்துவக்கட்டும்.
Maître-maçon, prends souvent ta règle, ton fil à plomb, et ton équerre, pour t'assurer si l'on bâtit comme il faut, et suis en tout le plan que je t'ai donné.	மேஸ்திரி அடிக்கடி உன்மட்டப்பலகையையுந் தூக்குநூலையும் மூலைமட்டப் பலகையையுமெடுத்துத் தக்கபடி கட்டுகிறார்களோ வில்லையோவென்று நிச்சயமாயறிந்துகொள். மேலு நானுனக்குக் கொடுத்தபணிக்குஎல்லாத்திலும் அநுசரித்துக்கொள்.
Il faut que le travail des charpentiers marche en même temps que celui des maçons.	கொல்லற்றுக்காரர் வேலை நடக்கிறபோது தச்சர்வேலையு நடக்கவேணும்.
Il nous faut huit poutres, dix poutrelles et une centaine de palmiers, du milieu de l'arbre.	நமக்கு எட்டுத்தூலமும் பத்துச்சின்ன உத்திரமும் நூறு நடுக்கரணையாகியபனைமரமும்வேணும்.
Si les poutres ont trop de largeur et d'épaisseur, il faut en scier l'excédant, pour en faire des planches ou des poutrelles.	தூலங்களுக்கு அதிகஅகலமுங்கனமுமிருந்தால் மிச்சமாயிருப்பதை வாளாலறுத்து அதைக்கொண்டு பலகைகளையாவது சின்னஉத்திரங்களையாவது பண்ணலாம்.
Si celles-là ne suffisent pas, il faudra scier encore d'autres planches pour les portes et les fenêtres.	அதுகள் பற்றாதேபோனால் கதவுகளுக்குஞ் சன்னல்களுக்குமின்னம்வேறேபலகை யறுக்கவேண்டியிருக்கும்.
Nécessairement, il faudra d'autres planches.	அகத்தியமாய்வேறேபலகைகள்வேண்டியிருக்கும்.

Pour les portes et les fenêtres extérieures, qui sont exposées à la pluie et au soleil, il faut des planches de teck ou au moins de teck blanc; les planches de manguier peuvent servir pour les autres portes et fenêtres.

மழையும் வெயிலும்படுகிற கதவுகளுக்குஞ் சன்னல்களுக்குந்தேக்குப்பலகை அல்லது வெண்டேக்குப் பலகையாவது வேண்டியது. மற்றக் கதவுகளுக்குஞ் சன்னல்களுக்கும் மாம்பலகையுதவலாம்.

Pour sureté contre les voleurs, mettez aux fenêtres des barreaux de palmier, avec une traverse au milieu.

திருடர்மட்டில் பத்திரமாகச்சன்னல்களுக்குப் பனைமாக்கம்பிகளையும் நடுவிற்குறுக்குச்சட்டத்தையும் வையுங்கள்.

Les portes des chambres doivent être à deux battans, celles des cabinets à un seul.

அறைகளுக்குஇரட்டைக்கதவுஞ் சின்ன அறைகளுக்கு ஒற்றைக்கதவுமிருக்கவேணும்.

Les scieurs de long et les charpentiers sont arrivés.

வாள்க்காரர்களுந் தச்சர்களும்வந்திருக்கிறார்கள்.

Il faut donner aux charpentiers à faire les portes et les fenêtres à prix fait.

தச்சர்களுக்குக் கதவுகளையுஞ் சன்னல்களையுங் குத்தகைக்குவிடவேணும்.

Il faut convenir aussi avec un charpentier de planer tant de palmiers par jour, et avec les scieurs de long de scier tant de pieds carrés à la roupie.

ஓர்தச்சன்தினத்துக்கு இத்தனைபனமரஞ்செதுக்கவும் வாள்க்காரர்ரூபாய்க்கு இத்தனைசதுக்கஅடி அறுக்கவும் ஒப்பந்தஞ்செய்யவேணும்.

Les copeaux des charpentiers servent très-bien à la cuisine; il faut dire de les ramasser et de les enlever.

தச்சர்சிராய்கள் சமையல்வீட்டுக்கு நன்றாயுதவுகின்றது. அதுகளைப்பொறுக்கி எடுக்கச்சொல்லவேணும்.

Pour faire le travail de l'argamasse, et surtout pour coller ensemble les petites briques, et mettre par dessus les briques concassées et la chaux, il faut autant que possible choisir des jours de beau temps.

மெத்தை வேலைசெய்யவும் விசேஷமாய்க் கண்டிக்கல்லுகளையொட்டவும் அதின்மேல் சல்லியுஞ் சுண்ணாம்பும் போடவும் இயன்றமட்டும் மழையில்லா நாட்களைத்தெரிந்துகொள்ளவேணும்.

Avant de défaire les écha-

சாரம்பிரிப்பதற்குமுன்னே

faudages, il faut enduire les murs de chaux.	சுவர்களுக்குச்சுண்ணாம்பு பூசவேணும்.
Après avoir carrelé les appartemens et les varangues, il faut détremper de la chaux et en remplir les intervalles des carreaux.	அறைகளுக்குந்தாழ்வாரங்களுக்குந் தளவரிசைபோட்டபிற்பாடு சுண்ணாம்பு குழைத்துச்சதுரக்கல்லுகளின் சந்துகளையடைக்கவேணும்.
Il faut aussi faire faire à temps les travaux du forgeron, savoir: les cloux, les chevilles, les gonds, les pentures, les verrous, les serrures, etc.	தக்ககாலத்திலுங் கருமான்வேலைகளாகிய ஆணி, கையாணி, முளை, கீல், தாழ்ப்பாள், பூட்டு முதலியதுகளைச்செய்விக்கவேணும்.
Généralement le travail du forgeron se vend à tant de caches la livre, plus ou moins, suivant la finesse ou la grossièreté de l'ouvrage.	வழக்கமாய்க் கருமான்வேலை நுட்பம் அல்லது பரும்படியாயிருக்கிறதுக்குத் தக்கபடி ஏற்றக்குறைச்சலாய்இராத்தல்இத்தனை காசுக்குவிற்கப்படும்.
Tout cela doit coûter beaucoup.	இதெல்லாமிகுந்தசெலவு பிடிக்கும்.
Certainement cela coûte beaucoup, surtout maintenant.	நிச்சயமாகவே இக்காலத்திலே விசேஷமாய் இதெல்லாம்வெகுசெலவுபிடிக்கும்.
Les bâtisses en voûte coûteraient-elles autant?	வளைவான கட்டுக்கோப்புகள் அவ்வளவுசெலவுபிடிக்குமோ?
Comme les voûtes demandent des murs en chaux ou plus épais, généralement elles coûtent davantage.	வளைவுகள்சுண்ணாம்பாலே கட்டப்பட்ட அல்லது அதிக கனமுள்ள சுவர்களைக் கேட்கிறபடியினாலே சாதாரணமாய் அதிகசெலவுபிடிக்கும்.
Si vous voulez une bâtisse à bon marché, il faut la faire en terre.	நயமான கட்டுக்கோப்பு வேணுமானால் மண்ணாலேயதைச்செய்யவேணும்.
L'Otten, pour une roupie, bâtira 10, 15 et même 20 coudées d'un mur de six pieds à trois couches.	ஒட்டன் ஒருரூபாய்க்கு மூன்றுபடையாய்ஆறடி யுயரமுள்ள சுவரில்-௰, ௰௫, ௨௰-முழமுதலாய்க்கட்டுவான்.
Là dessus on met un toit	அதின்மேலே வைக்கோல்

en chaume ou en tuile, qui dure plus ou moins, pourvu qu'on ait soin de l'isoler des cariahs.	அல்லது ஓட்டு மேல்கூரை போடுவார்கள், அதிலே கறையான் வராதபடிக்கு அதைத் தனிப்படுத்த எச்சரிக்கையாயிருந்தால் அது ஏறக்குறைய நிலைக்கும்.
Dans ce hangar, il pleut partout; il faut en changer les tuiles de place et les remettre en ordre.	இந்தக்கிடங்கிலே எங்கும் ஒழுகுது, ஓடுகளை மாற்றி ஒழுங்காய் வைக்கவேணும்.
Il faut réparer aussi ce qui est dégradé.	பழுதாயிருக்கிறதைச் செப்பனிடவும் வேணும்.
Il est tout malpropre; il faut le blanchir avec de la chaux.	அது முழுதும் அசுத்தமாயிருக்குது, அதுக்கு வெள்ளையடிக்கவேணும்.

PARAGRAPHE XVI. — ௰௬-ம். பிரிவு.

Le commerce. — வியாபாரம்.

Je songe à me mettre dans le commerce avec mon cousin et quelques autres associés.	என் மச்சானோடும் மற்றச் சிலகூட்டாளிகளோடும் வியாபாரத்தில் தலைப்பட நினைத்திருக்கிறேன்.
Le commerce a de l'attrait pour bien des gens.	வியாபாரம் அநேகருக்கு இழுப்புள்ளதாம்.
Oui, car c'est un moyen de pourvoir à sa subsistance et à celle de sa famille, et même d'acquérir des richesses.	ஆம், அது தனக்குந் தன் குடும்பத்துக்கும் பராமர்க்க அவகாசஞ் சம்பாதிக்கவும் ஆஸ்திகளைச் சேர்க்கவும் வழியாமே.
Cela est vrai; mais c'est aussi un état chanceux; il y en a qui s'y enrichissent et d'autres qui se ruinent.	அது மெய்தான், ஆயினும் அது அதிஷ்டமுள்ள அந்தஸ்துமாமே. அதிலே சிலர் திரவியவான்களாகிறார்கள், மற்றச் சிலரோவெனில் சகலமுமிழந்து போகிறார்கள்.
Oh! vois, combien de commerçants qui, peu fortunés	ஓகோ! பார். எத்தனையோ வியாபாரிகள் முந்தக்கொஞ்ச

d'abord, ont commencé par faire un petit négoce, l'ont augmenté ensuite, avec la prospérité de leurs affaires, et sont maintenant des gens fortunés.

அவகாசமுள்ளவர்களாயிருந்து சொற்ப வர்த்தகஞ்செய்யத் துவக்கிப்பின்னுந் தங்கள் காரியங்களின் அநுகூலத்தோடே அதை அதிகமாக்கி யிப்போது செல்வமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

D'autres, au contraire, après avoir prospéré longtemps dans le commerce, ont éprouvé des pertes immenses, et sont tombés dans l'indigence.

மற்றுஞ்சிலரோவெனில் வியாபாரத்தில் வெகுகாலம் அநுகூலமடைந்தபின் அளவற்றநஷ்டப்பட்டு வறுமையில் விழுந்தார்கள்.

Quelle peut être la cause de cela?

அதற்குக்காரணமாகத்தக்கதென்ன?

On peut assigner à cela bien des causes.

அதுக்கு அநேகங்காரணங்காட்டலாம்.

Tantôt c'est une maison de commerce, avec laquelle on avait des affaires considérables, qui fait faillite.

ஓர்சமயத்தில் தான்பெரிதான செட்டுக்காரியங்களை நடத்திக்கொண்டிருந்த ஓர்வியாபாரவீடுகடனிறுக்காமல் முறிந்துபோகுது.

Je tâcherai de n'avoir affaire qu'avec des maisons bien assurées.

மகாநிச்சயவுறுதியுள்ள வியாபாரவீடுகளோடேமாத்திரங்காரியங்களை நடத்தப் பிரயாசப்படுவேன்.

Tantôt c'est un navire, sur lequel on avait toute sa fortune, qui fait naufrage.

மற்றோர்சமயத்தில் தன்னுஸ்தியெல்லாம் ஏற்றியிருந்த ஓர்கப்பல்உடைந்து முழுகிப்போகுது.

Je ne mettrai pas la mienne sur un seul navire.

நான்என்னுஸ்தியை ஒரேகப்பலின்மேல் ஏற்றமாட்டேன்.

Quelquefois ce sont des révolutions, qui bouleversent le monde entier.

சிலவிசை சர்வலோகத்தையும் புரட்டிக்கலக்கிற அரசின் மாற்றங்களாம்.

Alors il faut pâtir comme les autres.

அப்போது மற்றவர்களைப்போலே துன்பப்படவேணும்.

Souvent des récoltes, qui

அநேகமுறை தப்பிப்போகி

viennent à manquer, y contribuent aussi.	றவிளைவுகள் அதுக்குக்கூட ஏதுவாகுது.
Toutes ces causes nous sont étrangères.	அந்தக்காரணங்களெல்லாம் எங்களுக்குப் புறத்தியாயிருக்கின்றது.
Mais il faut avouer que l'inhabileté et l'incurie de bien des marchands sont aussi causes de leur perte.	ஆனால் அநேகம்வியாபாரிகளுடைய திறமையின்மையும் அசட்டைத்தனமும் அவர்களுடைய கெடுதிக்குக்கூடக் காரணமாயிருக்கிறதென்று ஒத்துக்கொள்ளத்தகும்.
Oui, il y en a qui s'engagent dans des affaires commerciales mal combinées ou très-chanceuses.	ஆம், நன்றாயிசையாத அல்லது மிகவும்யோகமுள்ள வியாபாரகாரியங்களில் நுழைகிறவர்களுண்டு.
D'autres ne savent point prévoir les occasions favorables ou défavorables.	மற்றச்சிலர் நன்மையானதும் அல்லாததுமாகிய சமயங்களை முன்னுணர அறியார்கள்.
Quelques-uns se laissent tromper par des gens perfides, qui s'enrichissent à leurs dépens, ou par d'infidèles associés.	சிலபேர்தங்களுக்கு நஷ்டமாகத் திரவியவான்களாகிற வஞ்சகராலேயாவது நாணயமற்ற கூட்டாளிகளாலேயாவது தங்களையேய்க்க விடுகிறார்கள்.
Plusieurs ne tiennent pas un compte exact de leurs dépenses et de leurs recettes; ils prêtent et empruntent, sans se rendre bien compte de leur actif et de leur passif.	அநேகர்தங்கள் செலவுவரவுகளின் கணக்குச் சரியாயெழுதிவைக்கிறதில்லை. தாங்கள் கொடுக்கிற அல்லது படுகிறகடன்களின்கணக்கு நன்றாய் விசாரிக்காமல் கடன்கொடுத்தும் வாங்கியும்வருகிறார்கள்.
D'autres se croyant riches, parce qu'ils ont beaucoup d'argent d'emprunt, font des dépenses au-dessus de leur fortune, mènent un train coûteux, et se ruinent.	மற்றச்சிலர் தாங்கள்கடனாகவாங்கினபணம் மிகுதியாயிருக்கிறதினாலே தங்களைத்திரவியவான்களாகநினைத்துத்தங்களவகாசத்துக்குமேற்பட்ட செலவுகளையும்பண்ணி வெகுசெலவுபிடிக்கிற ஆரவாரமாயுநடந்துதோற்றுமுழுகிப்போகிறார்கள்.

Aussi, pour éviter un pareil malheur, je réglerai ma dépense sur mon avoir, et je m'abstiendrai de toute dépense folle et excessive.

ஆதலால் இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியத்துக்கு விலகும்பொருட்டு என்னவகாசத்துக்குத்தக்கபடி என்செலவு திட்டம்பண்ணிப் பயித்தியமுமிச்சமுமான செலவெல்லாந்தவிர்ப்பேன்.

Il faut aussi tenir un compte exact de ses recettes et de ses dépenses, de ses gains et de ses pertes, de ses dettes et de ses créances.

மேலுந் தன்வரவுசெலவுகளும், ஆதாய நஷ்டங்களும், கொடுத்தும் பட்டும்வந்தகடன்களுமாகிய இதுகளின் கணக்குசரியாய் எழுதிவைக்கவேணும்.

C'est ce que je ferai avec soin.

சாக்கிரதையாய் நான்செய்வதுவே.

La bonne tenue des comptes est une chose importante pour un commerçant et pour ses écrivains.

கணக்குகளைச்சரியாய் எழுதிவைக்கிறது ஓர் வியாபாரிக்கும் அவனுடைய கணக்கர்களுக்குங்கனமான காரியமாமே.

Oui, car si les comptes sont mal-tenus, il est très-difficile de s'y reconnaître.

ஆம், ஏனெனில் கணக்குகள் ஒழுங்காயிராவிட்டால் அதுகளைக்கண்டுபிடிக்கவெகுபிரயாசமாயிருக்கும்.

Au contraire, cela est facile pour ceux qui les tiennent comme il faut.

தக்கபடியதுகளை யெழுதுகிறவர்களுக்கோவெனில் அதுஎளிதாம்.

Je suis déjà habitué à la tenue des comptes.

ஏற்கனவே நான் கணக்குகளையெழுதிவைக்கிறதுக்குப்பழகியிருக்கிறேன்.

De plus, il faut avoir soin d'inscrire chaque chose à sa place.

அல்லாமலும் அந்தந்தக் காரியத்தையுமதற்குரியவிடத்தில்பதிகிறதற்குக் கவனிப்பாயிருக்கவேணும்.

C'est évident. Car si l'on porte en recette, ce qui est une dépense, ou au compte d'un individu, ce qui est au compte d'un autre, les comptes seront ensuite bien embrouillés.

அதுதானுய்யினங்குதே, ஏனெனில் செலவானதை வரவாகவும் ஒருவன் கணக்கைச் சேர்ந்ததை மற்றொருவன் கணக்காகவும் எழுதினால் பின்னுங்கணக்குகள் வெகுகலக்கமாயிருக்கும்.

Aussi pour les grands commerçans des écrivains habiles et des commis fidèles sont extrêmement précieux.	ஆதலாற்பெரிய வியாபாரிகளுக்குச் சாமர்த்தியமுள்ள கணக்கரும் பிரமாணிக்கமுள்ளகாரியஸ்தரும் மிகவும் அருமத்தராயிருக்கிறார்கள்.
La probité et la bonne foi sont les bases du commerce.	பிரமாணிக்கமும் நாணயமும் வியாபாரத்தின் அஸ்திவாரங்களாம்.
Otez la confiance et bientôt les affaires commerciales tomberont.	நம்பிக்கையற்றுப்போனால் சீக்கிரத்தில்வியாபாரக்காரியங்களும் அற்றுவிழும்.
Aussi ceux qui cherchent à s'enrichir par la ruse et la fraude ruinent souvent leurs propres affaires.	ஆகையால் சூதுகபட்டமறலாஸ்திசம்பாதிக்கத் தேடுகிறவர்கள் அநேகமுறை தங்கள் சொந்தகாரியங்களை யழிக்கிறார்கள்.
D'ailleurs l'injustice attire la colère de Dieu et ses châtimens; aussi un vieux proverbe dit: le bien mal acquis ne profite jamais.	மேலும் அநியாயமானது தேவகோபத்தையும் ஆக்கினைகளையும் வருவிக்கும். ஆதலால் அநீதமாயடைந்த பொருள் ஒருபோதும்பலிக்காதென்று ஓர்பழமொழிசொல்லுகின்றது.
Les chemins de fer, les bateaux à vapeur et le télégraphe accélèrent beaucoup maintenant les affaires commerciales.	இப்போது புகைவண்டிகளும் புகைக்கப்பல்களுந் தந்திதபாலும் வியாபாரக்காரியங்களைமிகவுந்தீவிரப்படுத்துகின்றது.
Quels sont les objets de commerce qui sont le plus en vogue dans cette ville?	இந்தப்பட்டணத்தில் முக்கியமான வியாபாரச்சரக்குகளென்ன?
Les grains, les toiles bleues et autres toiles, l'indigo, les vins et les liqueurs, les huiles etc...	தானியங்கள், நீலப்புடவை முதலியசேலைகள், நீலம், திராட்சரசங்கள், மதுபானங்கள் எண்ணெய்கள் முதலியசரக்குகளாம்.
Quelles branches de commerce allez-vous embrasser?	எந்தவகை வியாபாரங்களைச்செய்யப்போகிறீர்கள்?
Je vais examiner avec	எங்களுக்கு அதிகநல்லதிஷ்

mes associés celles qui nous donnent plus de chances de réussite.

டவிடங் கொடுக்கிற வகைகளை என் கூட்டாளிகளோடே விசாரிக்கப்போகிறேன்.

Un marchand, qui n'a qu'une branche de commerce, fait des pertes considérables, quand cette espèce de marchandise vient à manquer ou devient très-abondante.

ஒரேவகைச்சரக்குவியாபாரம் பண்ணுகிறவர்த்தகன் அந்தவகைச் சரக்கு அற்றுப்போனால் அல்லது மிகுதியானால் அநேகபெரிய நஷ்டப்படுகிறான்.

Celui qui a plusieurs branches de commerce peut compenser d'un côté ce qu'il perd de l'autre, et a plus de chances de succès.

பலவகைவியாபாரம் பண்ணுகிறவன் ஓர்பக்கத்தில் படுகிறநஷ்டம் வேறேபக்கத்தில் பரிகரிக்கலாம். ஆதலாலநுகூலத்தினதிஷ்டம் அவனுக் கதிகமுண்டு.

Mais tout le monde n'a ni les moyens ni la capacité de se lancer dans de grandes affaires commerciales.

ஆனால் பெரிதானவியாபாரக்காரியங்களில் ஏற்படுதற்காக எல்லாருக்கும் அவகாசமுமில்லை, திறமையுமில்லை.

Bien des gens peu fortunés gagnent honnêtement leur vie par un petit commerce, et sont quelquefois plus heureux que les grands commerçans.

கொஞ்ச மவகாசமுள்ள அநேகர் சொற்ப வியாபாரத்தால் நாணயமாய்ச் சீவனம்பண்ணுகிறார்களேயல்லாமல்சிலவிசையவர்கள் பெரிய வியாபாரிகளைவிட அதிகபாக்கியவான்களாயிருக்கிறார்கள்.

Heureux celui qui au milieu du train des affaires humaines n'oublie pas le soin de son salut.

உலோக காரியங்களுடைய சந்தடியின் நடுவே தன்னிடேற்றத்தின்கவலையைமறவாதவனே பாக்கியவான்.

Cela est bien vrai. Car, après avoir passé bien des années dans le commerce, aurait-on gagné immensément, à la mort on n'emportera pas même une cache de tout ce qu'on aura amassé.

அதுமிகவுமுண்மைதான். ஏனெனில் வியாபாரத்தில்வெகுவருஷங்கடந்து அளவற்றசம்பாதனைசம்பாதித்திருந்தாலுங் கூட்டியசகல பொருளிலும் மரணவேளையில் ஒருகாசாவது கொண்டுபோகமாட்டார்கள்.

Aussi heureux celui qui

ஆதலால் பரலோகத்திலே

s'occupe surtout à amasser des trésors dans le ciel, et qui, par l'aumône, et l'exercice des bonnes œuvres, se rend utile à lui-même au moins une partie de ce qu'il acquiert en ce monde.

பொக்கிஷங்களைச் சேர்த்துக் கொள்ளப் பிரதானமா யுழைத்துத்தானிவ்வுலகத்திற்சம்பாதிக்கிறதிலே ஒருபங்கையாவது தர்மத்தினாலுநற்கிரியைகளின் முயற்சியினாலுந் தனக்குதவச் செய்கிறவனே பாக்கியவான்.

PARAGRAPHE XVII. — ௰௭-ம். பிரிவு.

Sur la géographie. — பூமிசாஸ்திரத்தின்பேரில்.

La terre que nous habitons est-elle grande?

நாம் வாசம்பண்ணுகிற பூமியானது பெரிசா யிருக்குதோ?

Si on la regarde isolément, elle parait grande; mais comparée au reste du monde, elle est très-petite.

அதைத் தனியேபார்த்தால் அது பெரிசாய்த்தோன்றும், ஆனால் மற்ற உலோகத்தோடே அதை ஒப்பிட்டால்மெத்தவுஞ் சின்னதாம்.

Quelle est la figure de la terre?

பூமிக்குள்ளவடிவு என்ன?

La terre est ronde, et a la figure d'une orange.

பூமியுண்டையாயிருக்குது. அதற்குக்கிச்சிலிப் பழத்தின்வடிவுண்டு.

Sur quoi la terre porte-t-elle?

பூமியானது எதின்பேரில்நிற்குது.

La terre tourne dans le ciel, soutenue par la puissance de Dieu; mais elle ne porte sur rien.

பூமியானது தேவவல்லமையால் தாங்கப்பட்டு வானத்திற் சுற்றிவருகிறதொழிய அது எதிலேயுந் தங்குகிறதில்லை.

Que disent les savans de ce pays à ce sujet?

இவ்விஷயத்தில் இந்தேசத்துச்சாஸ்திரிகள் சொல்லுகிறதென்ன?

Ils disent que la terre est portée par un grand serpent à 1000 têtes, nommé Adisêchen, que ce serpent est porté par 8 éléphants, que les 8

பூமியானது ஆதிசேஷன் என்னும் ஆயிரந்தலையுள்ள ஓர் பெரிய பாம்பின்மேலே தங்குதென்றும் அந்தப்பாம்பு எட்டுயானைகளின்மேல் தங்குதே

éléphants sont portés par une tortue, et que cette tortue nage dans l'eau.

ன்றும் அந்தஎட்டுயானைகள் ஓர் ஆமையின்மேல் தங்குதென்றும் அந்த ஆமைதண்ணீரிலே நீஞ்சுகிறதென்றுஞ் சொல்லுகிறார்கள்.

Et cette eau sur quoi porte-t-elle?

அந்தத்தண்ணீரும் எதின்மேல் தங்குது?

Il ne le disent pas; là s'est arrêté le rêve de leur imagination.

அதையவர்கள் சொல்லுகிறதில்லை, அவர்களுடைய உருபிகரதத்துவத்தின் கனு அவ்விடத்தில் நின்றுபோச்சுது.

Tout cet échaffaudage incohérent n'est qu'une fable; car, si la terre ne peut se tenir sans appui extérieur, comment cette eau se tiendra-t-elle?

இசைவற்ற அந்தஅடுக்குச்சாரமெல்லாம் வெறுங்கதைதான், எனென்றால் பூமியானது புறத்து ஆதாரமில்லாமல் நிற்கக்கூடாதாகில் அந்தத்தண்ணீர் எப்படிநிற்கும்?

C'est vrai.

அதுமெய்தான்.

De plus, la terre tourne chaque jour un tour sur elle-même, et tous les ans, un autre autour du soleil.

மேலும் பூமி நித்தமுந் தன்நிலையில் ஒருவிசை சுழன்று வருஷந்தோறும் மற்றோர் சுற்றாகச் சூரியனைச் சுற்றிக்கொண்டுவருகின்றது.

Cela étant, elle n'est jamais stable dans le même endroit, et par conséquent, elle n'a pas besoin de base.

அப்படியிருக்க அது ஒருபோதும் ஓரிடத்தில் நிலைமையாயிராது. ஆனாலதற்கு ஆதாரம் அவசரமல்ல.

Quelle est la circonférence de la terre et sa superficie.

பூமியின் சுற்றளவும் அதின்மேற்பரப்பும் எவ்வளவாம்?

La circonférence de la terre, est de 20,000 nâjis, et la surface d'environ 127 millions, 300,000 nâjis carrés.

பூமியின் சுற்றளவு இருபதினாயிரம் நாழியாயிருக்குது, அதின் மேற்பரப்போவெனில் ஏறக்குறையப் பன்னிரண்டுகோடியே எழுபத்து மூன்று லக்ஷஞ் சதுரநாழியாகும்.

Les deux tiers de cette surface sont couverts par la mer. La terre ne contient qu'environ 41,800,000 nâjis carrés.

அந்த மேற்பரப்பிலே மூன்றிலேஇரண்டுபங்கு கடலால் மூடப்பட்டிருக்குது. தரைக்கு ஏறக்குறைய நாலு கோடியே பதினெட்டு லக்ஷ சதுரநாழி மாத்திரமுண்டு.

Qu'est-ce qu'un nâji carré?

ஒரு சதுர நாழியாவதென்ன?

C'est un carré, ayant un nâji de long et un nâji de large; un nâji équivaut à 2 kilomètres.

அது ஒருநாழி நீளமும் ஒரு நாழி அகலமுங் கொண்ட சதுரமாம். ஓர்நாழி - உ - கிலோமேத்திறளவாம்.

Combien l'Inde contient-elle de nâjis carrés?

இந்துதேசம் எத்தனை சதுர நாழிகொண்டிருக்கும்?

L'Inde contient environ 812,000 nâjis carrés.

இந்துதேசமானது ஏறக்குறைய எட்டுலக்ஷத்துப்பன்னீராயிரஞ் சதுரநாழி கொண்டிருக்குது.

Ainsi l'Inde est un 35e des terres habitables et un 105e de tout le globe.

இப்படி மனுஷர் வாசம்பண்ணும்பூமியில் இந்துதேசம் முப்பத்தைந்துபங்குகளிலே ஒன்றும், பூலோக உண்டையில் நூற்றைந்து பங்குகளிலே ஒன்றுமாம்.

Y a-t il des pays plus grands que l'Inde?

இந்துதேசத்தைப் பார்க்க அதிக விஸ்தாரமானதேசங்களுண்டோ?

Oui, la Russie, la Chine, le Brésil et les États-Unis sont plus grands que l'Inde.

ஆம், ருசியதேசமும், சீனதேசமும், பிரேசில்தேசமும், ஐக்கிய தேசங்களுஞ் இந்துதேசத்தைப்பார்க்க அதிக விஸ்தாரமாம்.

Y a-t-il quelque pays qui ait plus d'habitans que l'Inde?

இந்து தேசத்தைப் பார்க்க அதிக குடிகளுள்ள தேசமுண்டோ?

Oui, il y a dans la Chine plus d'habitans que dans l Inde.

ஆம், இந்துதேசத்திலிருக்கிறதைப்பார்க்கச் சீனதேசத்தில் அதிககுடிகளுண்டு.

Où se trouvent les sept mers, que vantent les Brames, et qu'ils nomment mer salée, mer d'eau douce, mer de lait caillé, mer de beurre fondu, mer de jus de cannes à sucre, mer de miel et mer de lait?

பிராமணர் பாராட்டி உவர்நீர்க்கடல், தண்ணீர்க்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், பாற்கடல் என்றுசொல்லுகிற ஏழுகடல்களெங்கே.

Ces sept mers ne se trouvent que dans la tête des brames, et dans les livres de fables, qu'ils ont composés; mais elles ne se trouvent nulle part dans le monde. Personne ne les a vues; personne ne peut les montrer.

அந்த ஏழு சமுத்திரங்களும் பிராமணர் தலையிலும் அவர்களுண்டாக்கின கட்டுக்கதைப் புஸ்தகங்களிலுமிருக்கிறதொழிய உலகத்தினெவ்விடத்திலுமில்லை. ஒருவனும் அதுகளைக் காணவுமில்லை, எவனும் அதுகளைக் காண்பிக்கவு மாட்டான்.

Que sont les 56 pays dont parlent les livres indiens?

இந்துதேசத்துப் புஸ்தகங்கள் சொல்லுகிற ஐம்பத்தாறு தேசங்களென்ன?

Ces 56 pays sont les anciennes provinces de l'Inde, depuis le cap Comorin jusqu'á Candahar, et depuis l'embouchure de l'Indus jusqu'à la Chine.

அந்த ஐம்பத்தாறுதேசங் கன்னியாகுமரிக்குங் காந்தாரத்துக்குஞ் சிந்துநதியின் கழிமுகத்துக்குஞ் சீன தேசத்துக்குமுட்பட்ட சிந்துதேசத்தின் பூர்வீகநாடுகளாம்.

Y a-t-il d'autres pays que ceux-là?

அதுகளல்லாதே வேறேதேசங்களுண்டோ?

Oui, il y en a beaucoup d'autres, soit en Asie, comme la Perse, l'Arabie, la Sibérie, la Tartarie et autres semblables; soit dans les autres parties du monde, qui sont l'Europe, l'Afrique et l'Amérique, où l'on compte aussi bien des contrées diverses.

ஆம், வேறநேகந் தேசங்களுண்டு, அதுகள் ஆசியாவில் அரபிதேசம், பேர்சியாதேசம், சிபேரிதேசம், தர்த்தரி தேசம் முதலியதுகளும், ஐரோப்பா, அப்பிரிக்கா, அமேரிக்காவென்னுங் கண்டங்களிலே எண்ணப்படுகிறவெவ்வேறாகிய மற்றநேக தேசங்களுமுண்டு.

Les Indiens autrefois ignoraient tous ces pays.

முன்னே இந்துதேசத்தார் அந்தத்தேசங்களையெல்லாம் அறியாதிருந்தார்கள்.

Où peut-on apprendre à connaitre certainement les divisions du globe terrestre, les différens royaumes et pays du monde, et les diverses particularités qui s'y rattachent?

பூலோகத்தின் கண்டங்களையும் உலோகத்திலுள்ளவெவ்வேறு இராச்சிய தேசங்களையும் அதுகளுக்கடுத்த பற்பல விசேஷங்களையும் நிச்சயமாயறிய எதிலேகற்றுக்கொள்ளலாம்?

Dans les livres et les cartes de géographie.

பூமிசாஸ்திர புஸ்தகங்களிலேயும் படங்களிலேயும் கற்றுக்கொள்ளலாம்.

Où en trouve-t-on?

அதுகளெங்கே யகப்படும்?

Ici même, il y a un livre intitulé Élémens de Géographie en français et en tamoul. Cet ouvrage est aussi imprimé en tamoul seulement; et de plus, il y a un abrégé de géographie plus considérable en tamoul.

இங்கேதான், பிராஞ்சுந்தமிழுமுள்ள பூமிசாஸ்திர நூலாதாரமென்னும் ஓர்புத்தகமுண்டு. அந்த நூல் தமிழில்தனியாகவும் அச்சிற்பதிப்பிக்கப் பட்டிருக்கின்றது. மேலுந்தமிழில் அதிக விரிவான ஓர்பூமிசாஸ்திரச் சுருக்கமுண்டு.

Au dire des Indous, combien y a-t-il d'iles?

இந்துக்கள் சொல்லுகிறபடிக்கு எத்தனை தீவுண்டு?

Ils disent qu'il y en a sept entourées par leurs sept océans; mais elles sont fabuleuses comme ces mers.

தங்கள்ஏழுசமுத்திரங்கள் சூழுகிற ஏழுதீவுண்டென்றுசொல்லுகிறார்கள், ஆனாலந்தக்கடல்களைப்போலே அத்தீவுகளுங் கதையாம்.

Combien y a t-il véritablement d'iles?

மெய்யாகவேஎத்தனை தீவுகளுண்டு?

Il y en a tant que l'on n'en sait pas le nombre. Parmi ces iles, il y en a de grandes, de petites et de moyenne grandeur.

அதுகள் மிகுதியா யிருக்கிறதினால் அதுகளின்தொகைஅறியப்படாது. அத்தீவுகளுக்குள்ளே சிலதுகள்பெரிசுஞ் சிலதுகள்சின்னதுஞ் சிலதுகள்மத்திமமான விசாலமுள்ளதுகளுமாம்.

Les Indous disent qu'il y a 14 mondes, 7 mondes supérieurs et 7 mondes inférieurs. Qu'en est-il?

ஏழுமேலுலகம் ஏழுகீழுலகம் ஆகிய பதினாலுலோகம் உண்டென்று இந்துக்கள் சொல்லுகிறார்கள்: அதிலே உண்மையானதென்ன?

Comment ceux qui n'ont pas vu les pays qui avoisinent l'Inde, comme le Thibet et la Perse, auraient-ils vu les mondes invisibles?

தங்கள்தேசத்துக்கடுத்திருக்கிற பேர்சியதேசம் திபெத்துதேசமுதலிய தேசங்களைக் காணாதவர்கள் காணப்படாத உலோகங்களை எப்படி பார்த்திருப்பார்கள்?

Ces mondes sont donc de pures fables, comme leurs sept mers?

அப்படியிருக்க அந்த உலோகங்கள் அவர்களுடைய ஏழுகடல்களைப்போலே வெறுங்கதைகளல்லவோ?

Indubitablement. — அதுக்குச் சந்தேகமில்லை.

Cependant n'y a-t-il pas d'autres mondes que celui-ci? — ஆயினும் இவ்வுலகந்தவிர வேறுலகமில்லையா?

Les vrais savants admettent, suivant la Sainte Écriture, qu'il y a un monde supérieur, qui est le Paradis pour les bons, et un monde inférieur, qui est l'enfer pour les méchans. — மெய்ஞ்ஞானசாஸ்திரிகள் தேவவாக்கியத்தின்படியே நல்லோர்க்கு மோக்ஷமாகிய பரலோகமொன்றுந் தீயோர்களுக்கு நரகமாகிய கீழுலோகமொன்றுமுண்டென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

PARAGRAPHE XVIII. — ௰௮-ம். பிரிவு.

Devoirs de l'homme. — மனிதனுடைய கடமைகள்.

L'homme étant doué de raison, faculté qui lui fait distinguer le bien du mal, ne doit pas vivre comme la brute, qui en est dénuée. — நன்மைதின்மையைப்பிரித்தறிகிறதத்துவமாகிய புத்தி மனிதனுக்கு இருக்கின்றமையால் அதில்லாத மிருகத்தைப்போலே அவன் நடக்கலாகாது.

Il doit chercher à connaître son origine, sa destinée et les moyens d'y parvenir. — அவன் தன் ஆதிகாரணத்தையுந் தன் கடைசிக்கதியையும் அதிலே சேருதற்கான வழியயனங்களையும் அறியத்தேடக் கடவான்.

Son origine, c'est Dieu, principe de tout; sa fin dernière, c'est le bonheur céleste; et le moyen d'y parvenir, c'est l'accomplissement de tous ses devoirs. — சர்வத்துக்கும் ஆதிமூலமாகிய சர்வேசுரன் அவனுக்கு ஆதிகாரணமாகவும் மோக்ஷபாக்கியம் அவனுக்குக் கடைசிக்கதியாகவுந் தன் கடமையெல்லாஞ் செலுத்துவதே யதிலே சேருதற்கு வழியாகவுமிருக்கின்றது.

L'homme, dans ce monde, a trois sortes de devoirs à remplir, savoir: ses devoirs envers Dieu, envers son prochain, et envers soi-même. — மனிதன் இவ்வுலகத்தில் நிறைவேற்றவேண்டிய மூன்றுவகைக் கடமைகளுண்டு. அதுகளேதெனில் சர்வேசுரன் மட்டிலுந் தன் புறத்தியார் மட்டிலுந் தன் மட்டிலுந் தனக்குண்டான கடமைகளாம்,

Dieu étant notre Créateur, il est notre Maitre, et le souverain Seigneur de toutes choses.

சர்வேசுரன் நம்மையுண்டாக்கியிருக்க அவர் நமக்கு ஆண்டவருஞ் சர்வத்துக்கு மதிபதிகர்த்தாவுமாயிருக்கிறார்.

Puisque Dieu est notre maitre, nous sommes obligés de lui obéir, et de le servir fidèlement.

சர்வேசுன் நமக்கு எசமானாயிருக்கின்றமையால் அவருக்குக் கீழ்ப்படியவும் அவரைப் பிரமாணிக்கமாய்ச் சேவிக்கவுங் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம்.

En conséquence, nous devons chercher à le connaitre, et à bien savoir quels sont ses divins attributs, afin de pouvoir distinguer le vrai Dieu de ceux qui ne le sont pas.

ஆதலால் நாம் மெய்யான சர்வேசுரனையுங் கடவுளல்லாதவர்களையும் பிரித்தறியத்தக்கதாகச் சர்வேசுரனையறியவும் அவருடைய தெய்வீக விலக்ஷணங்களின்னதென்று நன்றாயுணரவுந் தேடிக்கொள்ளக் கடவோம்.

Prendre pour Dieu des êtres, qui ne le sont pas, c'est l'erreur la plus dangereuse qui soit au monde.

தெய்வமல்லாத வஸ்துக்களைத் தெய்வமாக ஏற்றுக்கொள்ளுகிறது உலகத்திலுண்டான சகல பிசகுகளிலு மோசமுள்ள பிசகாமே.

Car Dieu n'accordera le bonheur éternel qu'à ceux qui l'auront servi fidèlement. Les tourmens de l'enfer sont réservés à ceux qui auront adoré les faux dieux.

ஏனெனில் சர்வேசுரன் தம்மைப் பிரமாணிக்கமாய்ச் சேவித்தவர்களுக்குமாத்திரம் நித்திய பாக்கியத்தைத் தந்தருளுவார். பொய்த்தேவர்களை யாராதித்தவர்களுக்கு நரகாக்கினை நியமித்திருக்கின்றது.

Il est évident que ni les démons, ni les hommes, ni les ouvrages des hommes ne sont des dieux véritables; aucun être créé ne saurait être le vrai Dieu.

பேய்களும் மனிதரும் மனுஷர்களுடைய வேலைகளும் உண்மையான தேவர்களாயிருக்கிறதில்லை யென்பது இஷ்டார்த்தமாமே. சிஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துவும் மெய்யான தெய்வமாயிருக்கமாட்டாது.

Le vrai Dieu est éternel, existant de lui-même, incorporel, infiniment bon, présent partout et créateur de toutes choses.

மெய்யான சர்வேசுரன் நித்தியராய்ச் சுயம்புமாய் அசரீரியுமாய் அளவில்லாத நன்மைச்சுரூபியுமாய்ச் சர்வவியாபியுமாய்ச் சர்வத்தையுஞ் சிஷ்டித்தவருமாயிருக்கிறார்.

Pour servir Dieu et obtenir le bonheur céleste, il est nécessaire de connaitre et d'observer ses commandemens.

சர்வேசுரனைச் சேவிக்கவும் மோக்ஷபாக்கியத்தைப் பெறவும் அவருடையகட்டளைகளை யறிந்தநுசரிக்கவேணும்.

Il est donc nécessaire d'apprendre à connaitre et de pratiquer la vraie religion, qu'il a prescrite aux hommes.

ஆதலால் அவர் மனுஷர்களுக்குக்கற்பித்தருளின சத்தியவேதத்தையறியக்கற்றுக்கொள்ளுகிறதும் அதை யநுசரிக்கிறதும் அவசரமாமே.

Tout péché offense Dieu et mérite ses châtimens.

எந்தப் பாவமுஞ் சர்வேசுரனுக்குத் துரோகமாகி அவருடைய தண்டனைக்குப் பாத்திரமாயிருக்கின்றது.

L'homme a différens devoirs à remplir envers ses semblables.

மனிதன்தனக்குச் சரியொத்தவர்கள்மட்டி லநுசரிக்க வேண்டிய பற்பலகடமைகளுண்டு.

Il doit observer envers tous la justice, l'équité et la vérité; ne faire de mal à personne; et aimer à faire le bien, qui lui est possible.

எல்லார்மட்டிலும் நீதியையும் நியாயத்தையும் உண்மையையும் அநுசரிக்கவும் எவனுக்குந்தின்மைசெய்யா திருக்கவுந் தன்னாலேகூடியநன்மைசெய்ய விரும்பவுங்கடவான்.

En conséquence, il doit éviter le mensonge, la fourberie, le vol et toute injustice.

ஆதலால் பொய் கபடு திருட்டு முதலிய சகல அநீதத்தையுந் தவிர்க்கக்கடவான்.

Il doit éviter également les querelles, les inimitiés, les médisances, les calomnies et tout ce qui peut être injurieux et préjudiciable au prochain.

மீளவுஞ் சச்சரவு பகைபுறணி கோள்குண்டணிகளையும் புறத்தியாருக்கு அவமானமுநஷ்டமுமாயிருப்ப தெல்லாவற்றையும் விலக்கக்கடவான்.

Il doit obéissance, respect, affection et secours à son père et à sa mère, concorde, affection et assistance mutuelle à ses autres parens.

தன்றாய்தகப்பன்மார்கள் மட்டில் கீழ்ப்படிதல் வணக்கநேசவுதவிகளையும் மற்றப்பந்துக்கள்மட்டில் அந்நியோந்நிய சமாதான நேச வொத்தாசைகளையும் செய்தநுசரிக்கக் கடவான்.

Il faut obéir à ses supérieurs et les respecter.

தன் சிரேஷ்டர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களைச் சங்கிக்கவேணும்.

Les parens doivent avoir soin de leurs enfants; les élever comme il faut; leur procurer autant que possible une bonne éducation et un moyen de vivre honnêtement. Ils leur doivent aussi le bon exemple, des avis opportuns, et des corrections, quand ils en méritent.

தாய்தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளை விசாரிக்கவுந் தக்கபடி வளர்க்கவும் ஆனமட்டு மவர்களுக்கு நல்ல படிப்பினை கொடுப்பிக்கவும் நாணயமான சீவனத்தை யவர்களுக்குப் பெறுவிக்கவுங் கடவார்கள். அவர்களுக்கு நல்லமாதிரிகை காண்பிக்கவுஞ் சமயத்துக்கேற்றபுத்திமதி சொல்லவும் அதற்கவர்கள் பாத்திரவான்களாகிறபோது தெண்டனையிடவுங் கடவார்கள்.

Les supérieurs ont aussi des devoirs, plus ou moins analogues aux précédens, à remplir envers leurs inférieurs.

பெரியோர்கள்தங்கள்சிறியோர்கள்மட்டில் ஏறக்குறையமுன்சொல்லியவைகளுக் கொத்தகடமைகளையு மநுசரிக்கக்கடவார்கள்.

Les époux se doivent une affection véritable, une fidélité inviolable et une assistance mutuelle.

சமுசாரியானவர்கள் தங்களுக்குள்ளே மெய்யான பக்ஷமுந் தப்பாத பிரமாணிக்கமும் அந்நியோந்நிய ஒத்தாசையுஞ் செலுத்தக்கடவார்கள்.

Ainsi chacun, dans sa position sociale, doit remplir fidèlement les devoirs de son état.

அப்படியே அவனவன் உலகத்தில் தனக்குண்டான நிலையில் தன் அந்தஸ்தின் கடமைகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றக்கடவான்.

On doit aussi assister les malheureux, et faire l'aumône selon ses facultés.

தரித்திரர்களுக் குதவிசெய்கிறதுந் தன் னவகாசத்துக்குத் தக்கபடி பிட்சை செய்கிறதுங் கடமையாம்.

Enfin, il faut être bon, juste et honnête envers tout le monde.

கடைசியாய் எல்லார்மட்டிலும் நல்லவனும் நீதிமானும் உபசரணையுள்ளவனுமாயிருக்கவேணும்.

L'homme a aussi des devoirs à remplir envers lui-même.

தன்மட்டிலு மநுசரிக்கவேண்டிய கடமைகள் மனிதனுக்குண்டு.

Non seulement il doit pourvoir convenablement à sa conservation et à sa subsistance; mais spécialement, il doit travailler à son salut éternel.

அவன் தக்கபடி தற்காப்புக்குந் தன் சீவனத்துக்கும் பார்த்துக்கொள்ளவேண்டியது மல்லாமல் தன் நித்திய ஈடேற்றத்துக்கும் உழைக்கக் கடவான்.

il doit donc chercher et suivre fidèlement le chemin qui conduit au Ciel.

ஆதலால் மோக்ஷத்திலே செலுத்தும்வழியைத் தேடிப்பிரமாணிக்கமா யநுசரிக்கக் கடவான்.

Ce chemin ne peut être que celui de la vraie religion et de la vertu.

அந்தவழியானது சத்தியவேதசுகிர்த வழியா யிருப்பதொழிய வேறல்லவே.

L'homme doit donc chercher à connaître et embrasser la vraie religion, faire le bien pour mériter le ciel et éviter tout péché, qui souillerait son âme, et le conduirait en enfer,

ஆதலால் மனுஷன் சத்தியவேதத்தையறியத் தேடியநுசரிக்கவும் மோக்ஷப்பேறு பெறுகிறதுக்கு நன்மைசெய்யவுந் தன்னாத்துமத்தை யசுத்தப் படுத்தினபின் நரகத்திலே செலுத்துஞ் சகலபாவத்தையும் விலகிவிடவும் வேணும்.

Il doit surtout se tenir en garde contre la luxure; car ce malheureux vice est contraire à l'âme, à la santé, à la réputation et à la paix des familles.

காமத்தின்மட்டிலே விசேஷமாய் எச்சரிக்கையா யிருக்கவேணும். ஏனெனில் இந்தநிர்ப்பாக்கியமான துர்க்குணம் ஆத்துமத்துக்குஞ் சவுக்கியத்துக்குங் கீர்த்திக்குங் குடும்பங்களின் சமாதானத்துக்கும் விரோதமாயிருக்கின்றது.

Il doit vivre sobrement, et éviter avec soin l'ivrognerie et l'intempérance: car ces vices sont une source de misères, de querelles, d'avanies et de désordres incalculables.

அவன் மட்டசனமநுசரித்துக் குடியையும் பேருண்டியையுமெத்தவும் விலகக்கடவான். ஏனெனில் அந்தப் பாவ துர்க்குணங்கள் எண்ணிறந்த துன்பச்சச்சரையவமான துன்னடத்தைகளுக்குக் காரணமாயிருக்கின்றது.

L'homme, par sa bonne conduite en tout et partout, doit mériter une bonne réputation, et être soigneux de la conserver.

Vivez ainsi, et avec l'aide du Seigneur, vous parviendrez au vrai bonheur.

மனிதன் எல்லாத்திலும் எவ்விடத்திலும் நன்னடக்கையினால், நல்லகீர்த்திக்குப்பாத்திரவானாகி அதைக்காப்பாற்றச் சாக்கிரதையா யிருக்கக்கடவான்.

இப்படி நடந்துகொள்ளுங்கள். அப்போது தேவானுக்கிரகத்தைக்கொண்டு மெய்யான பாக்கியத்தையடைவீர்கள்.



பொருளட்டவணை.

Paragraphe.	*Sujet,*	*Page.*



